
# வேர்கள் துளிர்க்கும்



தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்

# வேர்கள் துளிர்க்கும்

-தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்-

"எழுதுங்களேன் எழுதாது செல்லும் நான் என் கவிதையை எழுதுங்களேன்!"
கப்டன் வானதி வெளியீட்டகம் - தமிழீழம்

**வேர்கள் துளிர்க்கும்**

**தமிழீழப் பெண்களின் சிறுகதைகள்**

கப்டன் வானதி வெளியீடு – 03


| | | |
|---|---|---|
| விலை ரூபா | - | 150/= |
| முதற்பதிப்பு | - | 2003 பங்குனி |
| அட்டை ஓவியம் | - | றெகென்சியா ஞானவதனி |
| ஓவியங்கள் | - | சத்தியபாமா<br>வாசகி<br>துவிதா |
| அச்சுப் பதிப்பு | - | மல்ரிவிஷன் அச்சுக் கலையகம்<br>வவுனியா. |
| பதிப்புரிமை | - | கப்டன் வானதி வெளியீட்டகம்,<br>இல 61, கனகபுரம்,<br>கிளிநொச்சி. |

பல்திசையும் நுணுகி
பாவரிகள் எழுதி
காலத்தின் வரியாகி
கல்லறையில் வாழுகின்ற
மேஜர் பாரதியின் (சத்தியபாமா விஸ்வலிங்கம்)
காலடிகளுக்கு
இது

**படையல்**

# உள்ளே...

தென்னம்பிள்ளை -தமிழவள் ....................01

முடிவு? -யோகவதி ....................06

விடிவு -கலைச்செல்வி சுரேந்திரன் ....................11

மைதிலி -அ.காந்தா ....................16

புரிதல் -தீபா குமரேஷ் ....................22

திறக்கப்படவேண்டியது...! மூடிய பாதை மட்டுமல்ல -ஆதித்தநிலா .......31

உடைந்த வீடு -செ.புரட்சிகா ....................36

அப்பா பூனை -ச.சாரங்கா ....................41

அவளுக்கென்றொரு விதி -சி.ஜீவரஞ்சினி ....................49

சொன்னால்தான் புரியுமா -சந்திரா.அற்புதலிங்கம் ....................55

என்று தணியும் இந்தத் தாகம் -அனுராதா பாக்கியராஜா ....................64

முகம் மாறும் மனிதர்களும்...முகம் மறந்த உதவிகளும்
-காயத்திரி இராஜேஸ்வரன் .............71

அனுமதி -மலைமகள் ....................75

மனக்கூண்டு -அம்புலி ....................81

அடையாளம் -பூமாதேவி ....................88

படைப்பாளிகளின் தொடர்புகளுக்கு. ....................92

# பதிப்புரை

## 'வேர்கள் துளிர்க்கும்'

பெண் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் தனது முயற்சியின் தொடர்ச்சியில் இது கப்டன் வானதி வெளியீட்டகத்தின் மூன்றாவது வெளியீடாகும்.

'எழுதாத உன் கவிதை' (கவிதைகள்), 'கனவுக்கு வெளியேயான உலகு' (சிறுகதைகள்) என்ற எமது வெளியீடுகள் மூலம் வன்னியின் குறுகிய பிரதேசங்களில் உள்ள மூத்த எழுத்தாளர்களையும், சில இளைய, புதிய எழுத்தாளர்களையும் உங்கள் முன் கொண்டுவந்தோம். இப்போது, 'வேர்கள் துளிர்க்கும்' மூலம் இயன்றவரை தமிழீழத்தின் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பெண் படைப்பாளிகளை இனங்கண்டு, உங்களுக்கு அறிமுகப்படுத்துவதோடு, ஏற்கனவே அறிமுகமானவர்கள் சிலரையும் இணைத்துள்ளோம்.

'இவைகளும் சிறுகதைகளா?' என்ற வினாக்கள் சில கதைகளை வாசிக்கும் போது உங்களிடம் எழலாம். ஆனாலும் அவை உண்மையானவை. காலத்தின் பதிவுகளாக்கப்பட வேண்டியவை. எமது மக்கள்பட்ட அவலங்களை, துயரங்களை உண்மையாகப் பேசுபவை. எனவே இத் தொகுப்பில் அவையும் இடம்பெறுகின்றன.

மறைந்திருக்கும் பெண் படைப்பாளிகள் அனைவரும் தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதிக்க வேண்டுமென்ற எமது பேரவா ஈடேற அனைவரும் ஒத்துழைத்து எம்மை ஊக்குவிப்பீர்கள் என்ற அசையாத நம்பிக்கையோடு 'வேர்கள் துளிர்க்கும்' என்ற இந்த நூலை வெளியிடுவதில் நாம் மகிழ்கின்றோம்.

கப்டன் வானதி வெளியீட்டகம்,
இல. 61, கனகபுரம்,
கிளிநொச்சி.
01.03.2003

ஆ.உலகமங்கை

# அறிமுகவுரை

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண்களது பங்கு முக்கிய இடம் வகிக்கின்றது. பெண்கள் தங்களது உணர்வுகளை வெளியிடும் இலக்கிய மரபானது சங்க கால ஔவையாருடனேயே தொடங்குகின்றது. இதன் பரிணாம வளர்ச்சி காரைக்கால் அம்மையார், ஆண்டாள், எனத்தமிழகத்திலும், ஈழத்தில் மங்கள நாயகம் தம்பையா, கோதை நாயகி, பவானி ஆழ்வாய்ப்பிள்ளை, கோகிலா மகேந்திரன், சிவரமணி, தாமரைச் செல்வி, மண்டூர் அசோகா, பாலேஸ்வரி, சந்திரா தியாகராஜா என்று விரிந்து செல்வதை அவதானிக்கலாம்.

இவ் இலக்கியப் பாரம்பரியத்தின் உண்மைத் தன்மையை வெளிக்காட்ட விரும்பாத, வெளிப்படுத்தாத ஆண் விமர்சகர்களது நிலைப்பாட்டினை நிராகரித்து, இன்று பெண் விமர்சகர்களே தமது ஆக்கங்கள் பற்றிய பார்வையைச் செலுத்த முற்பட்டுள்ளனர். இதன் விளைவாகப் பெண்களது இலக்கியங்கள் பேசும் உணர்வுகள், உண்மைத்துவமாக வெளிக்காட்டப்பட்டது.

"எழுத்துலகில் பெண் என்பவள் தனக்கே உரிய
தீவிர சக்திகளோடு நுழையும் போது
தடுக்கப்பட்டவைகளின் மேல் – விலங்குகளின்
மேல் தீவிரமான ஆர்வத்தோடு ஈடுபடவேண்டும்"

என டில்லார்மே, கிறிஸ்தெவா முதலிய பெண்ணியலாளர்கள் கருதுகின்றனர். இவர்களது இக் கருத்தை வெளிப்படுத்தும் வகையில் "**வேர்கள் துளிர்க்கும்**" சிறுகதைத் தொகுப்பு அமைந்துள்ளது.

இதில் அடங்கியுள்ள பதினைந்து சிறுகதைகளும் பரந்துள்ள ஈழத்தின் இன்றைய யதார்த்தத்தினை வெளிப்படுத்துகின்றன. போராளிகளது போராட்ட உத்திகள், தியாகங்கள், இழப்புக்கள், கைகொடுத்தவர்கள் பற்றியும், இன்றைய சமாதானச் சூழல், வீதிப் போக்குவரத்து, இராணுவ வீரர்களது பார்வைகள், அனுமதிகள் என்று விரிந்து, ஆண் நிலைப்பட்டவர்களது மனோநிலைமாறாதநிலை, முச்சுமையுடன் கூடிய பெண்களது நிலைப்பாடும், வெளிநாட்டில் உள்ளவர்களது மனநிலை, கல்வி நிலை என்று பல்வேறு கருக்களையும் சிறுகதைகளாக்கித் தந்துள்ளனர்.

யுத்தத்தின் போது பொறித்த சாதனைகளை வெளியிடப் புனைகதைகள் எவ்வளவு இடம் கொடுக்கின்றன என்பதும், அவை ஏற்ற சந்தர்ப்பத்துடன் வடிவம் பெறுவதும் சிறப்புக்குரியன. புளியங்குளம் எனும் கிராமம் "புரட்சிக்குளம்" என்ற அடைமொழி ஊடாக ஒரு வரலாற்றையே சொல்லிவிடும் திறன், மொழிக்கையாளுகையின் வெற்றியே.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிகழ்கின்ற இச்சந்தர்ப்பத்தில் இராணுவவீரர்களது வரவேற்பு, வேலைத்திட்டங்கள் , A9 பாதையின் புனரமைப்பு என்பவற்றை "அனுமதி" சிறுகதை வெளிப்படுத்துகிறது. அத்துடன் இச்சமாதானச் சூழ்நிலைக்கு முற்பட்ட நிலை உள்மன உணர்வாக வெளிப்படுகிறது.

**"குண்டும் குழியுமாக அடிவாங்கி அடிவாங்கியே பிளந்து போன வீதிகள்......."**

**"எத்தனை பேரை இந்த வீதியெங்கும் விதைத்தோம்"**

என்ற அடி, நாம் செல்லும் பாதை, வீரர்களின் வித்துடல்களின் மீது என்ற உணர்வினைத் தரும்போது நெஞ்சு கனக்கிறது. இக் கனதியே இச் சிறுகதைத் தொகுப்பின் வெற்றி எனலாம்.

வழமையான சிறுகதைக் கருக்களைக் கொண்டு முடிவு, அப்பாப் பூனை, அவளுக்கென்றொரு விதி, மனக்கூண்டு என்பன விளங்குகின்றன. சமூகமாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற வேளையிலும் கூட ஆண் நிலைப்பட்ட கருத்துநிலையில் மாற்றம் நிகழ்வதென்பது கல்லில் நார் உரிப்பது போன்றுள்ளது. மனக்கூண்டு சரவணன், முடிவில் வரும் அப்பா, அப்பாப்பூனையில் வரும் அப்பா ஆகியோரை யதார்த்தமாகவும், வெளிப்படையாகவும் ஆண்நிலைப்பாட்டினை ஆசிரியர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

எனினும் வெளிநாடுகளிலுள்ள ஆண்களது மனநிலையில் மாற்றங்கள் உள்ளன என்பதை தீபா குமரேஷின் "புரிதல்" சிறுகதை வெளிப்படுத்துகின்றது. டேமியனின் கூற்றாக வரும் அடிகள் இதனை வெளிப்படுத்துகின்றன.

"உனக்குள் இருக்கிற கசப்பையும் கோபத்தையும் அப்படியே பேணிவை. அது அழியவோ மங்கவோ கூடாது. இரண்டு வருஷத்தில திரும்பிவருவம். எங்கட மண்ணில வாழுவம். எங்களால முடிஞ்சதை மண்ணுக்குச் செய்வம். உனக்கேற்பட்ட அனுபவங்கள் இந்த உணர்வைத் தான் உனக்குத் தரவேணும். அவநம்பிக்கையையோ.... குற்ற உணர்வையோ அல்ல"

இன்று நாட்டில் சமாதானம் மலர்ந்துள்ள போது கல்வி நிலையானது பின்தங்கியே உள்ளது என்பதை "திறக்கப்பட வேண்டியது......। மூடியிருந்த பாதை மட்டுமல்ல...." என்ற சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

ஒரு நாட்டின் ஆவணம் இலக்கியங்களே. அதிலும் சிறுகதைகள் காத்திரமானவை. பெண்கள் பேசத்துணிந்த விடயங்கள் பல. அவற்றில் சில இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இச்சிறுகதைகள் எழுத்துலகில் பெண்கள் படைக்கும் சாதனைகளின் சின்னங்கள்.

இவை பேசப்பட வேண்டிய விடயங்களைத் தமக்கேயுரிய மொழிக் கையாளுகையுடன், தம் உணர்வாகவே வெளிப்படுத்தியுள்ள இச் சிறுகதைகள் இன்றைய யதார்த்த நிலைப் பாட்டினைத் துல்லியமாகப் புலப்படுத்தியுள்ளன. இது தமிழீழத்தின் இலக்கிய ஆவணமாக விளங்குகின்றது.

**வவுனியா.**
**18.02.2003.**

**ஜெயபத்மா**

# நேர்காம்பின்னை

-தமிழவள்-



“அண்ணாவை வெளிநாட்டில் இருக்கும் மாமாவிடம் அனுப்பக் கூட்டிக்கொண்டு போன அம்மா எப்ப வருவாவோ தெரியாது. நாளைக்குப் பிறந்தநாளை அப்பாவும் நானும் தனியத்தான் கொண்டாட வேணும்.” என நினைத்தபடியே படித்து முடித்த கொப்பிகளை அடுக்கி விட்டு படுக்கை விரிக்க ஆயத்தமானவளை வீட்டின் பின்புறக் கதவு வழியே வந்த

“வாணி வாணி ... அப்பா!”

என்ற இரகசியக் குரல் ஒருகணம் திடுக்கிட வைத்தாலும் மறுகணம் எதையோ உணர்ந்தவளாய் சட்டென்று விளக்கை அணைத்தவள்,

“யாரது”?

“வாணி! அது நான்.”

எத்தனை நாட்களின் பின் கேட்டாலும் மறக்காத அந்தக் குரல் அவளை மகிழ்ச்சியில் துள்ள வைத்தாலும் சமாளித்தபடி எச்சரிக்கையோடு

"சுரேந்தினி அக்கா!"

என ரகசியமாக அழைத்தவள் அதே குரலில் தந்தையையும் அழைத்துவிட்டு வெளியே வந்தாள். இருளில் இருவர் நிற்பதைக் கண்டு கொண்டாள்.

"அக்கா! எவ்வளவு நாளுக்குப் பிறகு வந்திருக்கிறியள். ஐயோ முக்கியமானதை விட்டிட்டுக் கதைக்கிறன். சாப்பிட்டீங்களா அக்கா. உள்ளே வாங்கோ."

"சாப்பிட்டிட்டம் வாணி. அப்பா! அவசரமா ஒரு உதவி தேவை. எங்களுக்குரிய பொருட்கள் கொஞ்சம் கொண்டு வந்தனாங்கள். அதை இங்க எங்காலும் மறைச்சு வைக்க வேணும். இரண்டு மூன்று நாளில எடுத்திடுவம்."

"அதுக்கென்ன பிள்ளை வைக்கலாம். ஆனா அவங்கள் திடீர் திடீரென்று வீடுகளுக்க பூந்து செக் பண்ணுவாங்கள். வீட்டுக்கை வைக்காமல் வெளியில எங்கையாலும் தாட்டு வைச்சா பிரச்சினையில்லையே?"

"பிரச்சினை இல்லையப்பா. மண்வெட்டியைக் கொண்டு வாங்கோ." என்றவளிடம் "என்னண்டு பிள்ளை அந்தச் சனியன்களின்ரை ஆந்தைக் கண்ணைத் தாண்டி இவ்வளவையும் தூக்கிக் கொண்டு வந்தனீங்கள். நான் வெட்டுறன் பிள்ளை"

என்று சொன்னவரிடம்

"இல்லைத் தாங்கோ. நான் வெட்டுறன். நீங்கள் சத்தம் கேளாமல் வெட்ட மாட்டியள்" என்று மண்வெட்டியை வாங்கிக்கொண்டாள்.

தேர்ந்தெடுத்த இடத்தில் இருந்த மேற்புறம் காய்ந்த மண்ணைக் கைகளால் வழித்து ஒரு பக்கமாக வைத்துவிட்டுச் சத்தமே இன்றி மிகவும் லாவகமாக வெட்டத் தொடங்கினாள். கொண்டு வந்த அந்தப் பெரிய பொதியை அணைத்தபடி
அந்த இருளிலும் கண்கள் பளபளக்க சுற்றுப்புறத்தை அவதானித்தபடி நின்ற மற்றப் பிள்ளையிடம் பார்வையைப் பதித்தவாறே,

"ஏன் சுரேந்தினியக்கா மண்ணை கையால ஒதுக்கிறியள்" என்ற வாணியைப் பார்த்து இருள் தாண்டியும் சிரித்த அந்த வாய்,

"கிடங்கு வெட்டப்பட்டது என்றது தெரியாமலே மூடவும் வேணும் இல்லையா? அதுக்காகத்தான்" என்றவள், "றோட்டு றோட்டா எத்தினை கிண்டி, கிண்டினது தெரியாமல் மூடியிருக்கிறம்." என்றபடி வேலையைத் தொடர்ந்தாள்.

"என்ன மாதிரி, சந்தி வீட்டுக்காரர் என்னவாம்" எனக் கேட்டு அவள் முடிக்க முன்னேயே வாணி வெடித்தாள்.

"அவங்களோ... அவங்களின்ரை இளிப்பும், பாட்டுகளும், அதிகாரமும்

தூ..... கேடு கெட்ட நாயள்..... ஒவ்வொருத்தனையும் உயிரோடை கொழுத்த வேணும் அக்கா. அதுசரி இருட்டுக்குள்ளேயே இப்படிப் பளிச்சென்று தெரியிறீங்கள். என்னண்டு இரவில சண்டைக்குப் போறனீங்கள்" என்றவளிடம் அதற்கும் ஒரு சிரிப்போடு

"எல்லோரும் கரிதானே பூசுறது. நான் கொஞ்சம் கூடப் பூசுறனான்." என்றவள் அதுவரை அமைதியாகவே நின்ற போராளியைப் பார்த்து "புவி இதை இன்னும் கொஞ்சம் ஆழமாக்குங்கோ." என்றுவிட்டு வாணியின் பக்கமாக நகர்ந்தாள்.

நகர்ந்தவள் எதிலோ மிதித்து ஒரு கணம் தடுமாற "கவனம் அக்கா" என்று வாணி தாங்கிக்கொண்டாள்.

"என்னது தேங்காய் மாதிரி இருக்கு"

"ஓம் அக்கா நாளைக்கு என்ரை பிறந்த நாளுக்கு நடவென்று அப்பா விடியத்தான் தென்னம்பிள்ளை வாங்கி வந்தவர்."

"ஐயோ! நடுற மரத்தையா உழக்கினன்." எனக் கவலைப்பட

"என்னக்கா! உங்கட கால்தானே பட்டது. அது உங்களை மாதிரியே உயரமா வடிவா கெதியில வளர்ந்திடும்." என்றவள்

"நீங்கள் நாளைக்கு என்ர பிறந்தநாளுக்கு என்னோடையே நின்றால் எவ்வளவு நல்லா இருக்கும்" எனப் பெருமூச்சு விட

"இப்பவே பன்னிரண்டு முப்பத்தெட்டாச்சு. பிறந்தநாள் வாழ்த்துக்கள்."

என்றபடி வெட்டிய கிடங்கின் ஆழம் அகலம் சரிபார்த்து, கொண்டு வந்தவைகளை உள்ளே வைத்து மூடத் தொடங்கினாள். இறுதியாகக் காய்ந்த மேல் மணலைப் போட்டு அந்த இருளினுள்ளும் நுட்பமாக வேலையை முடித்தவள், வாணி கொண்டு வந்த தேநீரைக் குடித்துவிட்டு "அப்ப வரப்போறம். அப்பா! இரண்டு மூன்று நாளிலை எடுத்திடுவம்."

"கவனம் பிள்ளையள் பார்த்துப்போங்கோ."

என்றவருக்குத் தலையாட்டி விட்டுப் பின் வளவு வழியாக சென்றவர்களின் நிழல் உருக்கள் பார்வையிலிருந்து மறைந்து போன சில நிமிடங்கள் அப்படியே நின்றவர்

"வா பிள்ளை உள்ளுக்க போவம்." என்று சொல்லி வாய் மூடவும் சடசடவென்ற துப்பாக்கிச் சத்தம் காதைக் கிழித்தது. சத்தம் கேட்டு அதிர்ந்த வாணி அப்படியே வாசல் படியிலேயே இருந்து விட்டாள். தந்தையிடமிருந்து பெருமூச்சொன்று கிளம்பியது. ஆவணி மாதத்து மெல்லிய குளிர் காற்றையும் மங்கலாய் எறித்த பின்னிலவின் குளிர்ச்சியினையும் மீறி வாணிக்கு வேர்த்துக் கொட்டியது. இதயம் காதுக்குள் வந்து துடிப்பதாய் உணர்ந்தவளின் வாய் 'கடவுளே, கடவுளே' என்று உச்சரித்துக் கொண்டிருந்தது.

"பிள்ளை விடிஞ்ச பிறகுதான் என்ன நடந்ததென்று தெரியும். அதுகளுக்கு ஒன்றும் நடந்திராது. நல்லதையே நினைச்சுக் கொண்டு போய்ப் படு."

என்ற தந்தையின் வார்த்தைகளையும் மீறி 'நிறையக் கரி பூசுவன்' என்ற சுரேந்தினியின் வார்த்தைகள்....

விடிய, விடிய விழித்திருந்தவள் பொழுது புலரத் தொடங்கியதும் இருந்த இடத்திலிருந்து மெதுவாய் எழுந்து அந்த இடத்தை நோக்கிப் போனாள். 'கிண்டியது தெரியாமல் மூடவும் வேணும்' அந்த வார்த்தைகளை மெய்ப்பிப்பதாய் எந்த ஒரு அடையாளமும் இன்றி அந்த இடம். பக்கத்திலேயே கால் பட்டுத் தடக்கிய தென்னம்பிள்ளை... அதையே பார்த்தபடி நின்ற போது வெளியே நிலவரம் அறியப்போன தந்தை பதட்டத்துடன் வருவது தெரிந்தது.

"ஒரு பொம்பிளப் பிள்ளையை சுட்டிட்டாங்களாம். செத்த பிள்ளையின் கைவிரல்களில் எல்லாம் ஈரமண் ஒட்டியிருந்ததாம். எங்கேயோ எதையோ தாட்டு அல்லது கிண்டி வந்திருக்க வேணும் என்று எல்லா வீடுவளவுகள் ரோட்டுக்களையும் செக் பண்ணிக்கொண்டு வாறாங்களாம். கம்பியால நிலத்தைக் குத்திக் குத்திப் பார்த்துக்கொண்டு வாறாங்களாம் பிள்ளை" என்றவர் அந்த இடத்தையே பார்த்தார்.

அவர் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்தவளாக "அது பிரச்சனை இல்லை அப்பா. அடையாளமே இல்லை. ஆனா கம்பியால குத்திப்பார்த்தால் வித்தியாசம் தெரியும்." என்றவள் சட்டென்று மண்வெட்டியை எடுத்து அந்த இடத்திற்கு அருகிலேயே கிடங்கு தோண்டத் தொடங்கினாள். தோண்டிய மண்ணை அந்த இடத்தின் மேல் போட்டவண்ணமாக இருந்தவளின் எண்ணத்தைப் புரிந்தவராக தென்னம்பிள்ளையைக் கையில் எடுத்துக் கொண்டார். அந்தத் தென்னம்பிள்ளை ஏனோ அவர் கண்களைக் கசிய வைத்தது. கிடங்கு வெட்டி முடித்து நிமிர்ந்து தந்தையிடமிருந்து வாணி தென்னங்கன்றை வாங்கவும், வேலிகளைப் பிரித்தும் வாசலாலும் அவர்கள் உள் நுழையவும் சரியாக இருந்தது. வந்தவர்களில் ஒருவன் கூரான கம்பியோடு இவர்களை நோக்கி வர மற்றவர்கள் நிலம் முழுதும் கம்பியால் குத்திப்பார்க்கத் தொடங்கியிருந்தனர்.

"ஆ... தங்கச்சி..., தென்னமரம் நடுறது"

என்றபடி அவ்விடத்தை நெருங்கவும் "ஓம் ஐயா இன்றைக்குத் தங்கச்சிக்குப் பிறந்தநாள். அதுதான் நடப்போறம்."

"ஆ... நல்லம் நல்லம் நானும் மண் போடுறது. தங்கச்சி எனக்கும் குரும்பை தரும்தானே?"

என்றவனை நோக்கி

"இது வேர் விடும் வரைக்கும்தன்னும் இருக்கிறியோ தெரியாது" என்று மனதிற்குள்ளாகச் சொன்னபடி, மௌனமாகச் சிரித்தவள் பின் அவனைக் கவனியாதது போல மரம் நடுவதில் ஈடுபட்டாள். காதுகள் மட்டும் நேற்றிரவுச் சம்பவம் பற்றி அவன் ஏதாவது சொல்ல மாட்டானா எனத் துடித்தபடி இருந்தன.

"ஐயா உங்களுக்குத் தெரியுமே? இரவு நாங்கள் ஒரு பொம்பிளைப் புலியை சுட்டோம். நல்ல வடிவான வெள்ளைப் புலி ஐயா" என்று விட்டு "வாறேன் தங்கச்சி" என்றபடி கொண்டு வந்த கம்பிக்கு வேலை எதுவும் கொடுக்காமலே நகர்ந்து போனான்.

வாணியின் கண்கள் கலங்கின. திரும்பி வீட்டுக்குள் நடந்தாள். மண்வெட்டி அந்த இடத்திலேயே கிடந்தது.




யோகவதி

இப்போதெல்லாம் மகனின் அந்தப் பிடிவாதச் சிணுங்கல் கூடித்தான் போய் விட்டது. அப்பா இல்லாத பிள்ளை, அப்பா இல்லாத பிள்ளை என்று இல்லையில்லை அப்பா உயிரோடு இருக்கும் போது இப்படி நினைக்கக் கூடாது அவள். அப்பாவின் அரவணைப்பின்றி வளரும் குழந்தை என்று அவள் மகனின் விருப்பிற்கேற்ப இசைவாகி, ஆயிரம் செல்லங் கொடுத்து வளர்த்திருந்தாள். பிள்ளை கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுப்பாள். சொன்னதெல்லாம் செய்தாள்.

'அம்மா வா போவம்...... வாம்மா.....'

குழந்தை சிணுங்கி அழைத்தபோதெல்லாம் அவனின் கைப்பிடிக்குள் விரல் கொடுத்து நடந்தாள்.... மகனோடு சேர்ந்து மண் விளையாடினாள்......

'அம்மா.... ம்..... தூக்கு...... தூக்கு அம்மா.....' நள்ளிரவில் விழித்துக்கொண்டு தன்னைத் தூக்கும்படி பிடிவாதம் பிடித்துச் சிணுங்கும் மகனைத் தூக்கிக் கொண்டு நடப்பாள்..... தோளில் போட்டு முதுகுதட்டி இசைப்பாள். கைவலிக்க, வலிக்கத் தோள் கனக்கக் கனக்க பிள்ளை உறங்கும் வரை முதுகில் மெல்ல மெல்லத் தட்டி நின்றும் நடந்துமாய் விழித்திருந்து உறங்க வைப்பாள்.....

'அம்மா! சோச்சி வேனா.....

மகனின் விசுக்கல்.

'கொஞ்சம் சாப்பிடுங்கோ செல்லம்.'

'ம்.... வேனா.... வேனா.... இல்ல.... வேனா...,

'ஆ.... சரி..... பிள்ளைக்கு வேணாம். பிக்கா சாப்பிடுவம் என்னய்யா....,

'எனக்கு பிக்கா வேனா..... பிக்கா வேனா.....'

'அப்ப பிள்ளைக்கு என்ன வேணும்'

'கடைக்கு.... அம்மா கடைக்கு.... போவம் கடைக்கு.....,

பிள்ளை இப்படி அடம் பிடிக்கும் பொழுதுகளைச் சமாளிப்பதுதான் மிகவும் கடினமாய்ப் போகும் அந்த இளம் விதவை இல்லையில்லை அந்த இளம் தாய்க்கு.

பிள்ளைக்கு உணவூட்டி, நித்திரையாக்கிவிட்டுத் தையலைத் தொடங்குவோமே என்ற திட்டம் பொய்பட, கண்களில் கண்ணீர் வரும்படி பிள்ளை கதறுவான்.....

'போவம்..... அம்மா..... போவம்.....,

இனிக் கடைக்கு அவ்வளவு தூரம் போவதென்றால்..... இப்படியே வீட்டில் நின்ற ஆடையோடே, பிள்ளை சீச்சா அடித்த ஆடையோடு, சமையலின் போது வியர்வையால், கரி புகையால் அழுக்கான ஆடையோடு வெளியே செல்லலாமா?

'இஞ்சேய்யா... என்ர தம்பிக் குட்டியல்லோ.... இஞ்சே! அம்மான்ர சட்டையெல்லாம் ஊ..... த்தையாக் கிடக்கய்யா... அம்மா..... பிள்ளைக்கு நாளைக்கு.....,

'இல்ல... இல்ல..... இல்ல.... இப்பப் போவம்.....,

இப்படி எத்தனை நாட்களின் மாலைப் பொழுதுகளில் பிடிவாதமாயே கதறியழும் மகனின் அழுகையை நிறுத்துவதற்காய், வேறு உடை மாற்றி, நீண்ட தூரம் நடந்து பிள்ளை கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறாள் சுமதி.

'சீ இவர் இருந்திருந்தால்' என்கிற நினைப்பு பிள்ளையின் பொருட்டு அடிக்கடி வரும். ஆனாலும் முன்பு இருந்த கோபம், பிடிவாதம், ஏனோதானோ போக்கெல்லாம் இப்போது அவளிடம் இல்லை. சுமதி நிறையவே மாறிவிட்டாள்.



பிள்ளையின் பிடிவாதக் குணங்களைப் பார்த்து அயலவர்களும், உறவினர்களும் 'அப்பரப்போல, அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு' என்று சொல்லும் போதெல்லாம் இவளுக்குள் வேதனையாகத்தான் இருக்கும்.

பிடிவாதக்காரக் கணவனோடு இருக்க வேண்டாம் பிரிந்து வாழ்ந்தாலும் பரவாயில்லை என்று ஆயிரம் குடும்பத் தகராறுகளின் பின் பிரிந்து விட்டு, இன்று அதே, இல்லை அதைவிடப் பிடிவாதமுள்ள மகனைச் சமாதானப்படுத்தச் சுமதி எவ்வளவெல்லாம் மாறிவிட்டாள். சுமதி இப்போதும் சின்னப்பெண் இல்லையே... குடும்பம், அனுசரிப்பு, விட்டுக் கொடுப்பு, பொறுமை, நிதானம் என்று எதையுமே அறியாத இளவயதில் மனைவிப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்ட தன் அவசரக்குடுக்கைத் தனத்தை எண்ணித் தன்னையே நொந்து கொள்வாள் சுமதி.

நானும் அன்பிற்கும் பாசத்திற்குமாக என்னை எவ்வளவோ விட்டுக் கொடுக்க இப்போதெல்லாம் பழகித்தானே கொண்டேன். ம்.... பிள்ளை தன் பிடிவாதத்தால் என்னை எப்படியெல்லாம் மாற்றிவிட்டான். அவரின் பிடிவாதம் மட்டும் ஏன் என்னை மாற்றவேயில்லை.....? இப்போது கூட அவர் என்னுடன் சேரக்கூடாது என்று பிடிவாதமாகத்தான் இருக்கிறாரா? உரிமையுடன் என்னோடு கதைப்பவர்கள் எல்லாம் சொல்கின்றார்கள். 'உனக்குப் பிடிவாதம் சுமதி. என்னதான் இருந்தாலும் அவன் ஆம்பிள. நீதான் விட்டுக் கொடுத்து வலியப் போய்க் கதைக்க வேணும்'.

இந்த வியாக்கியானங்கள் சுமதிக்குள் வெப்பியாரத்தை ஏற்படுத்தத் தவறுவதில்லை. அதென்ன ஆம்பிளை, பொம்பிளை.... அன்பு காட்டுறதுக்கும், விட்டுக் கொடுக்கிறதுக்கும் கணவன் மனைவிக்கையும் ஆம்பிள பொம்பிள பார்க்க வேணுமே....

ஓ! பாக்க வேணும். அப்படிப் பாக்காததாலதான் நீ இப்ப, இப்படி இருக்கிறாய். அவளின் மனச்சாட்சி அவளைச் சுட்டதாய் உணர்வு.... என்ன! என்னிலதான் பிழையே? நான்தான் அவரோட வாழத்தெரியாமல் இருந்திட்டேனோ.... அதாலதான் என்ன விட்டிட்டுப் போனவரோ.... இப்ப நான்தான் போய்க் கேக்க வேணுமோ.... ஏன் அவர்தானே எனக்குப் பின்னாலையும் முன்னாலையுமா திரிஞ்சு திரிஞ்சு என்ன விருப்பம் கேட்டவர். அதுக்குப் பிறகு நான் என்ன அவருக்காக விட்டுக்கொடுத்துத்தானே ஓமெண்டன்.....

ஊரில எல்லாம் பிள்ளையின்ர அப்பா எங்கயெண்டு பிள்ளையிட்ட கேக்கிற ஒவ்வொரு கணமும் மனதுக்குள் எழுகின்ற தவிப்பைவிட இப்போது வேதனை மிகுந்தது. பாவம்தான். ஒரு இளவயது மனிதனை, எதிர்காலம் பற்றிய ஆயிரம் கனவுகளோடு தன்னை விரும்பிக் கைப்பிடித்தவனை அதுவும் ஒரு

குழந்தைக்குப் பெற்றவர்கள் என்றான பின் இருவரும் பிரிந்தது தவறுதான். எப்படியும் சேர்ந்துவிடவே வேண்டும். சமூகத்தின், பாவமென்ற, கெட்ட, பரிதாபமான, எரிச்சலான, வீணான பார்வைகளில் இருந்தெல்லாம் நானும் தப்பலாம். அவரும் தப்பலாம். இதே தவிப்பு அவருக்கும் இருக்குமே.... சுமதியின் தவிப்புக் கூடுதலானது.

சுமார் இரண்டு வருடங்கள் கடந்து சேரவேண்டும் என்ற தவிப்பு அவளுள் ஏற்பட்டிருக்கின்றது. ஏன்? அந்த ஏன் என்ற கேள்விக்குப் பதிலாக 'பிள்ளைக்காக' எனும் பதில் முதலில் வருகின்றது. உண்மையும் அதுதான். இன்னும் பலநூறு பதில்கள் அதன் பின் நிற்கின்றன.

'என்னைக் காதலிச்சுத் திருமணம் செய்தவர். என் குறை, நிறைகளோடு என்னை ஏற்றுக் கொள்ளவில்லையே....! ஏன் அவருக்கு மட்டும்தான் பிடிவாதம் பிடிக்கத் தெரியுமா? நானும் பிடிவாதக்காரிதான்' என்று அவரின் காதுபடக் கூச்சலிட்ட உணர்வெல்லாம் இப்போது சுமதியிடம் இல்லை. அவர் வீட்டை விட்டுப் புறப்பட்ட போது 'போனால் போகட்டுமே எனக்கு அம்மா இருக்கிறா, நான் அப்பாம்மாவோட இருப்பன். என்ர பிள்ளைய வளர்ப்பன்' என்று விட்டேத்தித்தனமாகக் கூறியதை, தனக்குள் கர்வமாய் நினைத்ததை இப்போது நினைக்கையில் அவசரப்பட்டு விட்டேனோ என்ற நினைப்பு வருகிறது.....

அவர் மட்டுமென்ன என் மனம் நோக நடந்து கொள்ளவில்லையா என்ற காரணத்தைப் பிரிவின் சமாதானப்படுத்தலாய் நினைக்க இப்போது சுமதியால் முடியவில்லை.

பெற்றோரால் கூடத் தரமுடியாத அன்பை, பாசத்தை, அரவணைப்பை கணவனால் தர இயலும் என்ற உண்மை சுமதிக்கு நன்கு புரிந்தது. மகனும் கொஞ்ச நாட்களாய் கேட்கத் தொடங்கி விட்டான். 'அம்மா! அப்பா எங்கே?' மகனிடமிருந்து மெல்ல மெல்ல எழுந்த கேள்வி பிடிவாதமாக மாறி 'அப்பாட்டப் போப்போறன் அம்மா! அப்பாட்டப் போப்போறனம்மா....' என்ற அழுகையாய், நச்சரிப்பாய், தொந்தரவாய் மாறிவிட்டது. நினைத்த போதெல்லாம் 'அப்பாட்டப் போறன்' என்ற அழுகைதான்.

யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டுப் போகவும் தயக்கமாகப் பயமாக இருந்தது சுமதிக்கு. ஒன்றுவிட்ட சகோதரியுடன், மகனையும் தூக்கிக்கொண்டு கணவன் நிற்குமிடம் தேடிப் புறப்பட்டு விட்டாள் சுமதி. மனதுள் ஒரே படபடப்பு. 'அவர் என்ன சொல்லப் போகிறார்?'

'இவ்வளவு நாளும் பிரிந்திருந்தது போதும் சுமதி. நீ என்னட்ட தம்பியோட வந்திடு.... நாங்களினிச் சந்தோசமா இருப்பம் சுமதி....'

'சுமதி, வந்திட்டாய். என்னைத்தேடி வந்திட்டாய்.... மகனத்தாவன். நீ இனிப் போகவேணாம் சுமதி. இப்பவே இப்படியே என்னோட நில்லு. நான் உன்னைப் பார்ப்பன். நில்லு என்ன?'

'சுமதி! என்னண்டடி இரண்டு வருசமா என்னைத்தேடி வராமல் உன்னால இருக்க முடிஞ்சுது.....? இப்பவெண்டாலும் என்னைத்தேடி என்னட்டவர மனம் வந்ததே..... எனக்குத் தெரியும் சுமதி. நீ வருவாயெண்டு எனக்குத் தெரியுமடி. காதலிச்சு கலியாணம் செய்ததில அர்த்தமில்லாமலா போகும்.....?'

இப்படி ஏதாவது அவன் கூறவேண்டும். 'நீங்கள் தான் இனி என் எல்லாமும்' என்று அவனிடம் கதற வேண்டும். அவனை விட்டு இனியும் பிரியக் கூடாது என்றுதான் நினைத்தபடி வந்தாள் சுமதி. அப்பாவைப் பார்க்கும் ஆவலோடு தாயின் தோளில் சாய்ந்திருந்தான் மகன். ஆனால் கண்டவுடனேயே அவன் கோபமாய்க் கேட்டான். குரலில் கோபம் கொப்பளித்தது. கண்கள் சிவந்தன....

'எங்க வந்தனி? இதுதான் நீ என்னைத் தேடி வாற முதலும் கடைசியுமா இருக்கோணும். இனிமேல் நீ என்னைத் தேடி வரவே கூடாது. ஆனால் என்ர மகனை மட்டும் என்ர கண்ணுக்கு முன்னால வைச்சிரு... அவன நான் பார்க்கோணும்... எனக்கு முன்னால மகனை வச்சிரு. நான் பார்க்கணும் அவன... போ... வெளிய போ... போ வெளிய...'

ஆங்காரமாய் கைகாட்டிக் கலைத்தான் அவன். சுமதி தன் கௌரவம், விருப்பம் எல்லாமும் பொடிபட அப்படியே நின்றாள். மகனோ அவளின் தோள்களை இறுகக் கட்டிக் கொண்டு அப்பாவையே பார்த்தான்.

'வாங்கோ தம்பி... அப்பாட்ட வாங்கோ...' நீட்டிய அவனின் கைகளில் மகன் தாவிப் போகாமல் தாயின் கழுத்தில் முகம் மறைத்தான்.

'அம்மா போவம் அம்மா! வீட்ட போவம்...'

'அப்பாட்ட ஒருக்காப் போயிற்று வாங்கோ...'

'இல்லம்மா போவம்.'

'ஒருக்கா போயிற்று வாங்களன் தம்பி...'

'இல்ல இல்ல போவம்'


'பொறுங்கோ தம்பி போவம்'

'இல்லம்மா இப்பப் போவம்'

'அப்பாக்கு போயிற்று வாறன் சொல்லுங்கோ...'

மகன் தகப்பன் முகம் பார்க்காமலே டாட்டா சொன்னான்.

# விடிவு



கலைச்செல்வி சுரேந்திரன்

*1985* ம் ஆண்டு, நவம்பர் மாதம் நள்ளிரவு. மட்டுமா நகரின் எழில் மிகு முகத்துவார வீதியின் வேதாரண்யம் சதுக்கத்தை மிக அண்டிய பகுதி. காலையில் நடைபெற இருக்கும் நிகழ்வு தெரியாமல் பல வீடுகளில் பரவசமாய் படம் ஓடிக் கொண்டிருக்க, சாத்திரியார் ஒழுங்கையை அண்டிய குட்டி வீட்டில் ஜீவா போராடிக்கொண்டிருந்தான். சட்டென்று வாழ்க்கை வெறுத்துப்போனது ஜீவாவுக்கு. எதுவரையில் மீண்டும் மீண்டும் எழுந்திருப்பது? இந்த நாளோடு இதற்கு ‘விடிவு’ காணலாம். சாகப் போகி.....றேன் எனத் துடித்துக் கொண்டிருந்த குப்பி விளக்கினையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு லொக்... லொக்....க்கென்ற உயிர் துடிக்கும் இருமல் சத்தம் உணர்வைத் தந்தது. “என்னம்மா?” என்றவனுக்கு “தம்..பி மத்தியானக் குழம்பு கொஞ்சமும், தண்ணிச் சோறும்... இருக்குது அப்பு, சாப்பிட்டுப் போ” குரலின் உயிர் இல்லாத தன்மை அப்படியே உறைத்தது.

“சரி... சரி நான் சாப்பிடுகிறேன். நீங்கள் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கோ” தனது நான்கு வருட பல்கலைக்கழக வாழ்வின் இறுதி நாளாகிய பட்டமளிப்பு நிகழ்ச்சியின்று. எத்தனை கசப்புக்கள், தடை தாண்டல்கள், அகோர வறுமையின் அடிகள். “ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வில் போராட்டம் உண்டு.” என எழுதி வைத்த ‘எமர்ஸன்’ ஞானியை நினைத்தவன் “வாய்விட்டு என்

வாழ்க்கையே போராட்டமாகி விட்டதே" எனக் கூறிக்கொண்டான். படிக்கும் நாட்களில் 'மை' முடிந்து போன வேளை தண்ணீரைக்கலந்து எழுதியது நினைவுக்கு வந்து உடன் கண்ணீரும் வந்தது.

நள்ளிரவு கடந்து விடிந்து கொண்டிருந்தது. விரைவாக இயங்கினான். செம்பை அடுப்பில் சூடாக்கித் தனது மங்கிவிட்ட ஆடைகளை இயன்றளவு நிமிர்த்தினான். திடீரென்று படலையைத் திறந்துகொண்டு வந்த பாக்கியம் மாமியின் நடையில் அவசரம் தெரிந்தது. அவனது தாயிடம் நேரடியாகச் சென்றவள். "கண்மணி, ஓராங்கட்டைச் சந்தியில் இரண்டுபேரைச் சுட்டுப் போட்டுக்கிடக்காம், காட்டிக்கொடுத்தவனுகளாம்." "மாமி உதென்ன ஈழத்தில் நடக்காத கதையோ, உதெல்லாம் நமக்கு சகஜம் தானே." சொல்லியபடியே இயந்திர வேலை செய்யும் ஜீவாவைப் பாக்கியம் மாமி பயந்த பார்வையிலே பார்த்தாள். எவ்வளவு தூரம் சமூகத்தின் கொடூரங்களை இக்கால வாலிபப் பிள்ளைகள் உணவை ஜீரணிப்பது போல பழக்கப்படுத்திக் கொண்டார்கள் என்பதை எதிர்கால சந்ததியினரோடு ஒப்பிட்டுப் பார்க்கவே பயந்த பாக்கியம் மௌன நடை போட்டாள். வழக்கம் போல பழைய உடுப்புகளையே அணிந்து கொண்டு புறப்படும் நேரம் வந்தது. தாயின் பாதத்தருகில் குனிந்து கொண்டு "அம்மா நான் வெளிக்கிடுகிறன்... குளிசையெல்லாம் ஒழுங்கா நேரத்துக்குப் போடுங்கோ. இண்டோட எங்களின்ர கஸ்ரமெல்லாம் விட்டுப் போகும். வயிறு நிறைய இனி மூண்டு வேளையும் சாப்பிடலாம்." தாய் கண்மணியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. கண்களின் ஊடாக நினைவுப் பறவைகள் சிறகடித்து எங்கெங்கெலாமோ தொட்டுணர்ந்து வருகிறது என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடிந்தது. "மகன்" என அழைத்த அழைப்பில் பாசப்படகு விரைந்தோடி வந்தது. இத்தனை வருடங்களாக மட்டை இழைத்து, மாவிடித்து, அப்பம் விற்று வந்த வாழ்விற்கு விடிவா என்பதனை நினைத்துப் பார்க்கவே அத்தாயால் முடியாதிருந்தது. "கவனமாகப் போட்டுவா மகன்" என விடை கொடுக்கும் போதும், தன் மகனைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் போல் எழும் உணர்வையெண்ணித் தனக்குத்தானே மெல்லியதாக வியப்பும் கொள்கிறாள்.

'டேகேஸ்' மாமாவின் சைக்கிளை எடுத்து மிதித்துக் கொண்டு இரண்டு மைல் தூரத்திலிருக்கும் நகரினை நோக்கி விரைகையில், சனக்கூட்டம் உயிரிழந்த அந்த இரண்டு பேரையும் பார்வையிட்டு, உடன் கலைவதைக் கண்டும் காணாதவன் போல் நகரையடைந்து, தெரிந்தவரின் கடையில் சைக்கிளை வைத்து விட்டு பேருந்தைப் பிடித்து எட்டு மைல் தூரத்திலிருக்கும் 'வாசிற்றி' நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தான். பேருந்தில் எள் விழுந்தால் எண்ணை எடுக்கும் கூட்டம். நின்று கொண்டிருந்த ஜீவாவின் செருப்பானது தான் ஏற்கனவே ஒருதடவை கட்டப்பட்டுவிட்டேன், ஆகையால் இனி முடியாது என எண்ணியது போன்று

அறுந்து தொலைத்தது. கண்கள் பன்னீர் கொப்பளிக்க முயல்கையில் இவனது அவதிநிலையைக் கண்ணுற்ற நண்பி கலைச்செல்வி இருக்கையில் அமர்ந்த வாறே கைகளால் இவனது செருப்பையெடுத்து ஒருவாறு சரிப்படுத்த உதவினாள். “சில சந்தர்ப்பங்களில் சொல்லப்படும் வார்த்தைகளை விட, செய்து காண்பிக்கப்படும் செயல்களின் பெருமைகளை எடுத்தியம்ப முடியாது” என எழுதிவைத்த ‘பெஞ்சமின் பிராங்ளினை’ நீர்த்திரையினால் நினைத்துக் கொண்டான். ‘வாசிற்றி’ வந்திறங்கிக் கலைச்செல்விக்கு நன்றி சொல்லி நடக்கையில் கட்டிடங்கள் ஜீவாவை உள்வாங்கிக் கொண்டன.

மகா விஸ்தாரமான மண்டபம் தான். பல்கலைக்கழக உபவேந்தர் முதல் வடகிழக்கு ஆளுனர் வரையில் விருந்தினர் பட்டியலில், தன் சிறுவயது நாட்கள் முதல் இந்நாள் மட்டுமான நினைவுகளை ஒரு தடவை மீட்டிப் பார்த்த ஜீவா தன்னைத்தானே நம்ப முடியாத ஒரு மனோநிலையில் காணப்பட்டான். ஐந்தாவது வயதில் ஈழப்போராட்டத்தில் சகோதரனையும், பதினைந்தாவது வயதில் தகப்பனையும் வன்முறையின் கொடூரங்களுக்குப் பலியிட்ட பின்னரும் காலத்தேவதை திருப்தி அடையாமல் தொடர்ந்தும் வறுமையினால் விலங்கு பூட்டி வதைத்த பெருநாட்களை எண்ணும் போது அடிக்கடி அடிவயிற்றில் பகீரென்றிருக்கும். கூடவே தாயின் எதிர்கால ஆறுதல் வாழ்வின் முக்கியத்துவமும் மனக்கண்களில் எழுந்தவுடன் தன்னம்பிக்கை கல்வியிலே ஓடிவந்து உட்கார்ந்து கொள்ளும். இப்போது ஜீவாவின் மூச்சு எல்லாமே அம்மா... அம்மா... என்பதுதான். பரிசளிப்பும், பட்டமளிப்பும் ஆரம்பித்தது கூடத்தெரியாமல் கடந்த கால நினைவேட்டில் இருந்தவனை,

“வெளியேறும் பட்டதாரிகளில் மிகச் சிறந்தவரும், முதலாம் இடத்தைப் பெற்றுக்கொள்பவருமாகிய திரு. ஜீவா நவரெட்ணம் அவர்களை மேடைக்கு அழைக்கிறோம்.”

கரவொலி விண்ணை முட்டியது. சுதாகரித்துக் கொண்டு மேடைக்குச் செல்லும் போது உணர்ச்சிகள் கடல் நுரையெனப் பொங்கித் தாளம் கொட்டக் கொட்ட அம்மா... அம்மாவென இதயத்தினுள் சொல்லிச் சொல்லிப் போற்றியபடியே சென்று அனைத்தையும் பெற்றுக்கொண்டு படியிறங்கினான்.

தொடர்ந்து மாணவர்களுக்கு சிறியதான விருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மாணவ, மாணவியரிடையே எங்கோ நகரையொட்டிய இடமொன்றிலே அசம்பாவிதமெனப் பேசிக்கொள்வதைக் கேட்டதற்குப் பிற்பாடு அனைத்து மாணவர்களும் கூடுகளுக்குச் சென்றுவிட முயற்சிக்கும் பறவைக் கூட்டங்களின் மனோ நிலையுடனே காணப்பட்டனர். பதட்டத்துடனேயே அனைவரும் பேருந்தேறி நகரையடைந்து பிரிந்து, ஜீவா வழக்கமாகத் தனது சைக்கிளை வைக்கும் கடைக்காரரை அணுகிய போதோ

"தம்பி... உங்களின்ர பக்கம்தான் ஏதோ பிரச்சனை போல கிடக்கு. கரும்புகையும் சத்தமுமாய்க் கிடந்தது. ஓராங்கட்டைக் கண்டல்ஓரத்தில கண்ணிவெடியில் ஜீப்பட்டு ஆறு பொலிஸ் செத்ததாம் எதுக்கும்... பார்த்துப்போங்கோ." தொடர்ந்து அவருடன் பேசுவதற்குக் கூட நேரமில்லாமல் விரைந்து எப்படித் தான் ஊர் எல்லையை அடைந்தான் என்றே தெரியாமல் அண்மித்தவனுக்கு, தான் குடியிருந்த பகுதி சுடுகாடாய் இருப்பதைக் கண்டு பேச்சுவர மறுத்தவன் போன்று காணப்பட்டான்.

அடிமேல் அடி வைத்து படலையைத் திறந்த போது கண்மணி தூய வெள்ளைச் சேலையில் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. நிரந்தரத் தூக்கம். எதுவித வேதனையுமே அத் தாயின் முகத்தில் தெரியவில்லை.

"தம்பி... நீ போய் கொஞ்ச நேரம்தான் இருக்கும். பெரிய குண்டுச் சத்தமும் தொடர்ந்து ஒரே செல்லடியுமாய் இந்த இடம் தடம் புரண்டுது. ஏலுமான சனமெல்லாம் போட்டது போட்டபடியே ஓடித்து. பாவம்..... வயது போன உன்ர அம்மாவால..... தான் முடிய.... ல்லையப்பா, ஆனா நான் திரும்பி வரைக்கவும் இப்பிடியே அமைதியா கண்மணி அக்கா..." மேலே தொடர முடியாது வடிவேலு மாமா. ஜீவா எதுவுமே பேசவில்லை. பேச்சு வரவுமில்லை. தான் வளர்ந்த, தன்னை வளர்த்த இடங்களின் சிதைவுகளையெல்லாம் பார்த்துக் கொண்டே வரும் போது அந்த வெள்ளைக் காகிதம் காற்றில் படபடத்து அவனுடைய கரங்களில் சரணடையத் துடித்தது.


"வா... மகன் உன்ன இப்பிடியா கடதாசி மூலமா வரவேற்கிறன். இத நீ வாசிக்கக்குள்ள, நான் உன்ர அப்பர், தம்பியோட இருந்து உன்னப் பாத்து சந்தோசப்பட்டுட்டிருப்பன். நீ... போய் கொஞ்ச நேரம் இருக்கும் மகன், ஒரு பெரிய குண்டுச் சத்தம்... ஒ... ரே செல்லடி மெதுவா வெளிய போறதுக்குள்ள செல்லொண்டு உச்சி மோட்டுல விழுந்திட்டு, கால்ல சரியான அடி, கொஞ்சம் கொஞ்சமா இரத்தமும் வெளியேற, இரத்த அடி காயங்களோட சனமும் இல்லாமப்போக எனக்கு எல்லாமே விளங்கிட்டுது மகன். அதனால தான் அறிவிச்சிற்று போக வேணுமெண்ட விடாப்பிடியில எழுதுறன். மகன் நம் சனங்கள் ஏழைச்சனங்கள். அதுகளுக்கு இப்ப தங்களைச்சுத்தி என்ன நடக்குதெண்டே தெரியாத நிலை. படிச்ச சனங்களும்... குறைவு.

மகன்... எங்களின்ர சனங்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ள ஒரு உண்மைப் பங்காளி வேணும். சனங்களுக்காக குரல் கொடுக்க வேணும். அவங்களுக்கு 'விடிவு' பிறக்க வேணும் அந்த 'விடிவு' உன்னால தான்...

மேற்கொண்டு எழுத முடியாது தவித்து, இறுதிப் பிரியாவிடையைக் கொடுத்திருப்பது ஜீவாவுக்குப் பூரணமாகத் தெரிகின்றது. தாயை மெல்லத் திரும்பிப் பார்க்கிறான். மெல்லிய வெண்ணிறப் புடவை, கால்களின் ஓரத்தில் எட்டிப் பார்க்க முயற்சிக்கும் சின்னதான இரத்தஓடை. மௌனமாக வெளியில் வந்து பார்த்த போது சனங்களெல்லோரும் ஒப்பாரி வைத்து அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். தாயின் இறுதிக் கடமைகளை வடிவேலு மாமாவிடம் ஒப்படைக்கிறான். அழுது அரட்டிக் கொண்டிருக்கும் சனங்களையெல்லாம் பாடசாலைக் கட்டிடத்திற்குப் போகச் சொல்கிறான். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல சனங்கள் செல்கையில் பெரிதான விம்மல் ஒன்றுடன் வீட்டைத் திரும்பிப் பார்க்கிறான். நடக்கிறான்.

கால தேவனின் ஞானத்தைக் கண்மணியின் பிள்ளையும் பெற்று விட்டதா என வடிவேலு மாமா வியப்படைந்து மனதுக்குள் நினைக்கையில், அவரது காலடியில் காற்றிலே அடிபட்டு வந்து மோதிநிற்கின்றது, ஜீவா உயிர் கொடுத்து படித்துப் பெற்ற பட்டச் சான்றிதழ். திடுக்கிட்டு ஜீவாவைப் பார்க்கிறார். அவனோ அந்தி வானத்துச் சூரியனைப் போல மக்களோடு மக்களில் ஒருவனாகச் சேர்ந்து சனங்களைத் துரிதமாகப் பாடசாலைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறான். பகல் மீது இருள்மையல் கொள்ளத் தொடங்குகிறது. பகல் அந்த இருளை மௌனமாக ஏற்றுக் கொள்கிள்றது. பொறுமையுடன் தனது நாளைய 'விடிவுக்காக' காத்திருக்க ஆரம்பிக்கிறது.





# மைதிலி

அ.காந்தா

“இந்த ரோடு போகும் இடங்களை ஒருக்காப் பாக்க வேணும். இதை விளங்கப்படுத்தி விடுங்கோ” எண்டு அவள் கேட்டாள்.

அப்பத்தான் என்னுடைய கோல்சருக்க மடிச்சபடி வைத்திருந்த வரைபடத்தை எடுத்து விரிச்சன். எங்கடை கொம்பனிப் பொறுப்பாளரும் அந்த இடத்துக்கு வந்திட்டா.

“அடியேய், நீ அந்தச் சண்டைக்கு நிண்டனியே?”

எந்தச் சண்டை எண்டு கேக்கிறதுக்கு முதலிலேயே எனக்கு விளங்கிற்று. இதுக்காலதான் எங்கட பமிலாக்கான்ர கொம்பனி நிண்டு சண்டை பிடிச்சது.

பேந்து பின் வாங்கிப் போச்சிது. வரைபடம் பாத்து இடங்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிச்சினம். பழையபடியே வரைபடம் இருந்த இடத்துக்குப் போனது.

என்ர நினைவுகள் வரைபடத்தில் பார்த்த இடங்களைச் சுற்றியது.

அப்படி எண்டா நான் நிக்கிற இடத்தில இருந்து இன்னும் கொஞ்சத் தூரம்தான் இருக்கும் அந்த இடத்திற்கு. இது கச்சாய் சாவகச்சேரி ரோட் எண்டா... அந்தச் சந்திக்கு அப்பால வெட்டை ஓ... ஓ... அந்த இடத்திலதானே மைதிலி வாயில காயப்பட்டவள். ஒரு எட்டில அந்த இடத்துக்குப் போயிடலாம். முகத்துக்கு நேர கிடக்குது. வலது பக்கம் அங்கால கடற்கரை என்ன...

என்னவோ தெரியாது, மைதிலி அடிக்கடி இந்தச் சம்பவத்தைச் சொல்லுவாள். கடைசியாக எப்ப சொன்னவளெண்டா ஓ... விளக்குவைச்ச குளத்தில வைச்சு சண்டை நடந்து கொண்டிருக்கேக்க.

அவவின்ர வாய் கிழிஞ்ச சண்டைதானே. அதுதான் வாய் ஓயாது அடிக்கடி சொல்லுறவள்.

அவள் கடைசியாகவும் சொன்னது இப்பவும் கண்ணுக்க வந்து நிக்குது. புரட்சிக்குளம் எண்டு பேர் சொல்லிச் சண்ட பிடிச்ச இடத்திற்குப் போயிட்டம். மனசில சிந்தனை ரேகைகள் ஒன்றன் பின் ஒன்றாக மின்னி மறைந்தன.

இந்த இடம் ஓ... செண்பகத்தின் R.P.G யால் டாங்கி அடிச்சது ஆ... அதில தாட்சாயினியக்கா வீரச்சாவடைந்தவ. அந்தா... அதுக்குள்ளதான்.... ஓ... பரணிதாவும் திரேசாவும் ஒரு பங்கருக்குள்ள வீரச்சாவடைந்தவை...

இவள் மைதிலியைச் சும்மா நாளிலையே கண்டுபிடிக்கிறது கடினம்... அதுவும் இப்ப இந்த வெற்றியின் முழுப் பூரிப்பில் அவனை இன்னும் துரத்த வேணுமெண்டு எந்த எந்த மூலைக்க யார் யாரை விட்டுட்டு எங்கெங்கே நிற்கிறாளோ...

ஆறேழு ஆண்டா வேவு பார்த்தவள் எதிரியின்ர வளைவு, சுழிவு, பலம், பலவீனம் எண்டு அக்குவேறு, ஆணிவேறா அலசி வைச்சிருக்கிறவள். எப்ப பார்த்தாலும் எதிரிக்கு நடுவில் நிண்டு தொல்லை கொடுக்கிறதையே சிந்தித்துக்கொண்டிருப்பாள்.

இவளைப் போய் இந்தச் செல் மழைக்க எங்க நான் தேடிப்பிடிக்கிறது...

விழுந்து படுக்கிறதும் எழும்பி ஓடுறதும் நடக்கிறதுமா இயல்பா செல்களுக்குக் கவரெடுத்தபடி போய்க்கொண்டிருக்கும் என்ர சிந்தனைமட்டும் அவளைச் சுத்திச் சுத்தித்தான் போகுது.

போன வருசம் மாங்குளத்தில நிக்கேக்க அவவின்ர ரீம் பிள்ள ஒண்ட ஆமி சினைப்பண்ணிப் போட்டான் எண்டு, அவன்ர பொயின்ர வேவு பார்த்து இரண்டு நாளில மூன்று பேரை முடிச்சாப்பிறகுதான் அவளின்ர முகத்தில மகிழ்ச்சி தெரிஞ்சிது.

இப்பவே அவளின்ர சொத்திவாய் முகத்தைப் பார்க்க வேணும் போல கிடந்தது. ஒருமாதிரி முன்னணி நிலைகளிட்டை போயிட்டம். விளக்கு வைச்ச குளம் வரைக்கும் வந்திட்டம் எண்டு சொன்னவை... அப்பிடியெண்டா இது அந்த இடமாகத்தான் இருக்க வேணும்.

ஆமி ஏவிக்கொண்டிருந்த செல் எல்லாம் பின்னுக்குப் போய் விழுந்து கொண்டிருந்தன. அவன்ர அஞ்சு இஞ்சி செல்லும், டொங்கான் செல்லும் எங்களத்தான் உரசிப் பார்க்கிறது எண்டு பக்கங்களில் வந்து விழுந்து கொண்டிருக்கு.

வெற்றிகரமாக துரத்தியடிச்சுக்கொண்டு வந்திட்டினம். மறிச்சு வைச்சுக் கொண்டிருக்கும் பிள்ளைகளைக் காண ஆசையாக இருந்திச்சிது.

கண்டதுதான் தாமதம் ஐயோ...

ஒண்டு ஓடிவந்து கையப் பிடிச்சிது. ஒருத்தி "ஹாய்" எண்டு தன்னையும் மறந்து, எதிரி முன்னுக்கு எண்டதையும் மறந்து கத்திக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். பிருந்தா அப்பத்தான் ஓ. பியில் இருந்து வந்து சாப்பிட்டிருக்க வேணும். அந்தக் கையால என்னப் பூசி... அவள் ஸ்பெசல் ரீ எண்டு உடன சுவையான தேத்தண்ணியோட வந்தாள். எட்டிப் பார்த்தன். உடைஞ்ச பங்கருக்குள் இருந்து ஒருத்தி பூஸ்ரரை எரிச்சு ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தாள்.

"என்ன பார்க்கிறியள்? இந்தத் தொண தொணத்த மழைக்க விறகேது? அதுதான் உடைஞ்ச ஆட்டி பூஸ்ரரைக் கொண்டு ரொட்டி சுடுறன்."

பிள்ளைகளோட கதைச்சன். ஆனா கண் மட்டும் அவளையே தேடியபடி. எங்க மைதிலி போட்டாள் எண்டு கேக்க நினைக்கேக்க, பின் பக்கம் இருந்து ஒரு கை என்ர தோளில் விழுந்தது.

"ஹாய்...!" என்றதும் கூய் என்று பக்கத்தில் ஒரு 60 எம். எம் செல்

வந்து விழுந்தது. என்னையும் விழுத்தி, தானும் படுத்துக்கொண்டாள்.

எழுந்த உடனே கைகளைக் குலுக்கிக்கொண்டோம். மகிழ்ச்சி ரேகைகள் மட்டும் முகம் முழுக்கக் கொட்டிக் கிடந்திச்சிது.

"ஹாய்.... எப்படிச் சண்டை..."

"பேந்தென்ன. இதுவரைக்கும் வந்திட்டம்."

"இனி அங்கால...? "

"அது இருக்கட்டும் சரி. இந்தா இதைப் பிடியன்"

"ஏன் இது.? "

"முதலில இதுகளைப் பிடி."

"உனக்கேதும் விசரோடி? தொடர்ந்து சண்டைதானே. செல்லடிக்குள்ள நிண்டு மூளை ஏதும் பிசகிட்டோ? உன்ர அத்தியாவசியப் பொருட்களை எனக்கேன் தாறாய் ஏதோ உயில் எழுதித் தாறது போல..."

"சிலவேளை நான் அடுத்த சண்டையில உயிரோட இருக்கிறேனோ தெரியேல்ல. அதுதான்."

அவள் தனது இடுப்புப் பட்டி, மழைக் கவசம், குறிப்புப் புத்தகம் எண்டு எல்லாத்தையும் தந்தாள்.

இப்ப பொழுது நன்றாகப் போய் விட்டிருந்தது. மெல்லக் கேட்டன்.

"இண்டைக்கு இங்க நிண்டிட்டு நாளைக்குப் போறன். என்ன? "

"இதுவெல்லாம் நடக்காது. பதிவுகள் இல்லாமல் இஞ்ச ஒருத்தரும் நிக்கேலாது. உடனையே நடையைக் கட்டலாம்."

இப்படிப் பதில் கிடைச்சிது.

கொஞ்சத்தால,

"இரவுச் சாப்பாட்டு வாகனம் வரும்வரைக்கும் நிண்டு கதைக்கலாம்" எண்டாள்.

"அமுதாக்கா, பங்கருக்குப் போய் ரோச்சை எடுத்து வாங்கோ... நீ கோல்சருக்கால நோட்புக்க எடன். "

இனி என்ன? இவள் கதை சொல்லத் தொடங்கினா அது படமாகத்தான் போகும்.

அதோட வேவுக்கதைகள் பற்றி சுவாரசியமாகச் சொல்லுறவள் இண்டைக்கு விடுவாளா? ம்... பெண் பிள்ளைகள் பிடிக்கிற சண்டையெல்லாம் பதிய வேணும் எண்டுறவள் சொல்லப் போவதை வேகமாக மனம் அளந்து எடுத்துக்கொண்டது.

ரோச்ச குறிப்புப் புத்தகத்தை நோக்கிப் பாய்ச்சியபடியே சொல்லத் தொடங்கினாள்.

"சண்டை ஆரம்பமாகி ஆறாம் நாள் எங்கட வேவு அணியில ஐந்து பேர் எதிரி எங்கெங்க நிலை கொண்டிருக்கிறானெண்டு பார்க்கிறதுக்கு உள்ளுக்க போனம்.

இடது பக்கமாய் வெட்டை வெளி. முன்னுக்குப் போனால் கச்சாய் ரோட், வெட்டையை மேவி ஒரு பக்கமாய் ஆமி. அவன் எங்களுக்குப் பின்னுக்கு வந்திட்டான். நான் உடனேயே நிலைமைகளைச் சொல்லச் சொல்ல, செல்களைப் போட்டிச்சினம். அதே நேரம் வேவுக்குப் போய் ஆயத்த நிலையில் நிண்ட நாங்கள் முன்னுக்கு ஓடி ஆமியை அடிச்சித் துரத்தினம்...

ரவுன்ஸ் முடிஞ்சு போச்சுது. இப்ப இடது பக்கமுள்ள ஆமியைத் துரத்த வேணும். உடனே பமிலாவின்ர ரீமை எடுத்து அடிபட விடுவம் எண்டு வோக்கியில கதைத்தபடியே நிமிர்ந்தன். முன்னுக்கு ஆமி. பார்த்துக் கொண்டிருந்த ஒருத்தன் என்னைச் சுட்டிட்டான். வாயில காயம்.

இப்ப ஆமிக்கு முன்னுக்கு ஐந்து மீற்றருக்குள்ள நாங்கள். உடனேயே ஆமியப் பார்த்தபடியே குண்டிண்ட கிளிப்பைக் கழட்டிட்டன். இறுகப் பிடித்தபடி கையிக்குள்ள வைச்சுக்கொண்டன்.

என்னத் தூக்கவெண்டு எங்கட ஆக்களில ஒருத்தர் ஓடி வந்தார். அவரையும் ஆமி சுட்டிட்டான். எனக்கு மேலதான் விழுந்தார். நல்லாய் இரத்தம் போய்க்கொண்டிருக்க, எனக்கு அவரின்ர இரத்தமும் சேர்ந்து தலை முழுக்க நனைஞ்சுபோயிட்டுது.

எங்கட ஆக்கள் ஓடி வந்து வெப்பன் போட்டு அடிச்சவை. பிறகு ஆமிய வரவிடாது கொஞ்ச நேரம் மறிச்சிச்சினம்.

அதுக்கிடையில எங்களிட்ட இரண்டு பேர் வந்திச்சினம். இதில இரண்டு பொடி கிடக்குது தூக்குவம் எண்டு குனிஞ்சினம். அந்த நேரம் நான் சொல்லுறன் "கையில குண்டு இருக்குது... கிளிப்பைக் கழட்டிட்டன்... ஐயோ விடுபட்டா வெடிக்கப் போகுது. குண்டை எடுங்கோ... அதிலதான் கிளிப்பைப் போட்டனான். எடுத்துப் பூட்டுங்கோ..."

எண்டு திரும்பத் திரும்ப அதையே சொல்லுறன். அது அவைக்குக் கேட்டமாதிரித் தெரியேல்ல.

"குண்டு கழட்டி வைச்சிருக்குது."

எண்டு கையப் பிடிச்சு வேகமாக பறிச்சு ஆமியின்ர பக்கம் எறிஞ்சிட்டினம். என்ர காயத்தைக் கட்டுறதாக இல்லை. கொற கொற எண்டு

இழுத்துக்கொண்டு வந்து பின்னுக்குப் போட்டிச்சினம்.

நான் நினைக்கிறன், செத்திட்டன் எண்டு சொல்லினம். செத்திட்டனோ...? அப்படி எண்டா ஏன் கண்ணத் திறப்பான்? செத்தாலும் கூட எல்லாம் தெரியுமோ...?

இரத்தத்தால தோய்ந்திருந்த முகத்தைத் துடைக்கக் கைய எடுக்க வேணும்போலக் கிடக்குது. அந்த நேரம்,

"இஞ்ச... இதுக்கு உயிர் கிடக்குது. உடனே ஏத்துங்கோ"

இப்படி யாரோ சொல்வது கேட்டது.

"சீரியஸ் சீரியஸ் உடனே தூக்கிக்கொண்டு ஓடுங்கோ..."

மைதிலி அக்சன் போட்டுக் காட்டிக்கொண்டிருந்தாள்.

"அட இதுவே கதை? இதைப் போய் எத்தனை தரம் சொல்லிப் போட்டாய். பத்திற்கு மேல இருக்கும்."

எண்டன். அப்ப அவளின்ர சொத்தி வாயால ஒரு அழகான சிரிப்பைச் சிரிச்சாள். அது இப்பவும் நெஞ்சுக்க...

அங்க அந்த ரோட்டுக்குப் பக்கத்தில நிக்கிற வடலியோட நிண்டு மைதிலி சிரிக்கிறமாதிரிக் கிடக்குது. அட அவள்தான்.

இது என்ன இது விசர்? ஒரு வேளை கனவு கண்டிட்டேனோ... சீ. அவள் மாதிரித்தான் தெரிஞ்சிது. இல்ல. இது என்ர பிரமையாகத்தான் இருக்கும்.

அந்த இடம்தானே அவளின்ர வாய சொத்தியாக்கினது.

பக்கத்தில் இருந்தவள் மெல்லத் தட்டினாள். பட்டெண்டு திரும்பினன்.

"என்ன இதுக்க உத்து உத்துப் பார்க்கிறியள்? நானும் பார்க்கிறன் ஆமி அசையிறதாத் தெரியேல்ல. ஆனா கனநேரமா பாக்கிறதும், உங்களுக்குள்ள கதைக்கிறதும் சிரிக்கிறதும் உம்மெண்டு மூஞ்சிய வைச்சிக் கொண்டு யோசிக்கிறதுமா இருக்கிறியள். என்ன நடந்தது? "


எண்டாள்.

எனக்குப் படு வெக்கமாய் போச்சிது. அவளைப் பார்த்து அசடு வழியச் சிரிச்சன். போற போக்கப் பாத்தா, நானும் இந்த வாய் கிழிஞ்ச கதையைப் பத்துத் தடவைக்கு மேல் சொல்லிட்டன்போல கிடக்குது.

கண்ணைச் சிமிட்டி அவளைப் பார்த்துச் சிரிச்சுக்கொண்டே கோல்சருக்க கையை விட்டன்.

"இதுக்குள்ளதான் சூரியக்கதிர் ரெண்டு சண்டையில..."

வரைபடத்தை எடுத்து அந்த இடங்களையும் சம்பவத்தையும் விளங்கப்படுத்தத் தொடங்கினன்.




இரண்டடிக்கு இரண்டடி அளவில் கூரைக்குச் சற்றுக் கீழேயிருந்த சாளரத்தினூடு மெல்ல மெல்ல வெளிச்சம் பரவுவதைப் பார்த்துக் கொண்டே சுவரில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தாள் யூலி. நேற்று அந்தச் செய்தி தெரிந்ததிலிருந்து அதே நிலையிலேயே இருக்கிறாள். ஒவ்வொரு ஞாயிறும் பார்க்க வரும் அம்மாதான் நேற்றும் அந்த விவரத்தைச் சொல்லிவிட்டுப் போனாள். அந்த நிமிடத்திலிருந்து உலகம் ஸ்தம்பித்ததுபோன்ற நிலையில் அவளிருந்தாள். இரவு முழுவதும் சாய்ந்திருந்ததால் முதுகு விறைத்துப்போயிருந்தது போலவே உணர்வுகளும் இருந்தன. நிஜமா, பொய்யா, கனவா, நனவா என எதையுமே உணர முடியாத நிலையிலிருந்தாள். நாளை விடிந்தால் அவள் வெளிச்சம் பார்ப்பாள்; தெருவும், வாகனங்களும் பார்ப்பாள்; மரங்களும், மனிதர்களும் பார்ப்பாள்; கட்டிடங்களும் கோயில்களும் பார்ப்பாள்... பூக்களும், பறவைகளும் பார்ப்பாள்... இது நிஜம்தானா?

'ரிற்றிற்றீ' நிஜம்தான் என்று சுவரில் இருந்த பல்லி சொல்லியது. இது அவளது பல்லி. இவ்வறைக்குள் வந்த நாள் முதலாய் எதுவுமே புரியாமல்...

குழம்பி... அலமலர்ந்து... கண்களில் மிரட்சியுடன் இந்த அறைக்குள் காலடி எடுத்து வைத்து தனியனாய் உணர்ந்தபோது... குட்டியாய் ஒரு பல்லி 'ரிற்றிற்றீ' என்று நீளமாய்ச் சொல்லி 'நீ தனியல்ல நானும் இருக்கிறேன்' என்று உணர்த்திய போதே இப் பல்லி அவளதாயிற்று. 'உனக்கு நான் இருக்கிறேன் யூலி' என்ற வரிகள் தாங்கிய கடிதங்களை அனுப்பும் டேமியன் போலவே அதுவும் இருந்ததால் குட்டி டேமியன் என்று அதற்குப் பெயர் சூட்டிக் கொண்டாள். அது டேமியன் அனுப்பிய தூதுவன் போலவும் அவள் கண்களுக்குத் தென்பட்டது. அந்தக் குட்டிப் பல்லிதான் வளர்ந்து பெரிதாகிவிட்டதோ, அல்லது இது வேறொரு பல்லியோ அவளுக்குத் தெரியாது. ஆனால்... இரத்தக் கறைகள் படிந்து படிந்து கறுத்துப்போய்க் கொலைப் பாறை போல் தென்பட்ட அந்த நீண்டு உயர்ந்த சுவர்கள் அவளுக்கு ஏற்படுத்திய கொடூரத்தன்மையைப் போக்கிய அந்தப் பல்லி அன்றும்... இன்றும்... ஒரேயொரு பல்லிதான் என அவள் தீவிரமாக நம்ப விரும்பினாள்.

கோயில் என்றதுமே யாழ்ப்பாணத்துப் பெரிய கோயில் நினைவில் வந்தது. உயர்ந்த கோபுரங்களுடன் வெள்ளை வெளேரென்று அகன்று பிரமாண்டமாயிருந்த அக்கோயிலில் முழந்தாளிட்டு மனமுருகி வேண்டிய நாட்கள் நினைவில் வந்தன. அத்தனை ஜெபங்களும், பிரார்த்தனைகளும் வீணா என்ற கேள்வி மனதுள் எழுந்தது.அந்த வயதுக்கேயுரிய பரபரப்பும், படபடப்பும் காரணமாக அன்று அவளால் மனமுருகி ஜெபிக்க முடியாமல் போய்விட்டதுதான் நடந்து முடிந்து போனவைக்குக் காரணமோ என்றும் சந்தேகம் எழுந்தது.

நான்கு வருடங்களின் முன்... கோயில் பாடல் குழுவில் ஒருத்தியாய் ஓர்கனும் கையுமாக சக தோழிகளுடன் பட்டாம் பூச்சியாய் திரிந்தபோது... மனம் நிறையக் கனவுகளும்... ஆசைகளும் இலட்சியங்களும் நிறைந்திருந்தன. தையல், ஐசிங், அலங்காரம் என்று பலவகைக் கலைகளையும் கற்று கோயிலிலோ, ஊரிலோ எங்கு விசேஷமென்றாலும் 'யூலி ஒருக்கா வந்திட்டுப் போம்மா' என்ற அழைப்பையேற்றுப் போய் முன்னுக்கு நின்று பொறுப்பேற்று அனைத்தையும் செவ்வனே செய்து...

அந்தக் கொடிய நாளைப்பற்றி அறிந்த ஊர்ச் சனம் 'ஐயோ! யூலிக்கா இந்தக் கதி' என்று அழுததாக அம்மம்மா எழுதியிருந்தாவாம். அம்மா சொன்னது ஞாபகம் வந்தது. ஊர்க் கோயில்ல அவளுக்காகவென்றே ஆராதனை நடத்தினார்களாம். நாலு வருஷமாய் அம்மாவும் ரமியும் ஜீவனும் ஏன் யூட்டும் கூட விரதம் இருக்கிறார்களாமே. அவர்... டேமியன் அவர் கூட லண்டனில் விரதம் இருக்கிறாராமே. யார் என்ன செய்தென்ன? ஆள்பவன் மனது வைத்தால்தான் ஆண்டவனே கண் திறப்பான்போல...

'டேமியன்!...' பெயரை நினைக்கும்போதே கர்த்தரை நினைப்பது போன்ற பக்தியும், மரியாதையும் மனதில் ஏற்பட்டது. வேறு எந்த உறவும் கொடுத்து நெருக்கமாக உணர முடியாத வகையில் ஒரு மரியாதை... பயம்.. இப்பொழுதெல்லாம் இயேசுவே... என்று மனம் சொல்லும்போதெல்லாம் தவிர்க்கமுடியாமல் டேமியனின் முகமே கண்ணுக்குள் வருகிறது. இயேசுதான் டேமியன் போலவும் டேமியனே இயேசுதான் போலவும் ஒரு உணர்வு. இன்று அந்த உணர்வு... இன்னும் மிகையாகக் குழப்பமாக...

படத்தில் மட்டுமே பார்த்தறிந்த அந்த டேமியனின் குரலைக் கேட்டதுமே தான் உணர்வுகள் குலைந்து குழைந்து காதலாகிப் போனது ஞாபகம் வந்தது. ஒரு மாதம்... முப்பது நாட்கள் மட்டும்தான் அவன் அவளுடன் போனில் கதைத்தான். 'ஒரேயொரு மாத அறிமுகம், யுகங்களாக அறிந்திருப்பது போன்ற உணர்வு எனக்கு வருகிறது. உனக்கு அப்படியில்லையா யூலி' என்று அவன் கேட்டதும், தான் சிலிர்த்ததும் ஞாபகம் வந்தது. அன்றுதானே கடைசியாகப் பேசினான். அன்று நள்ளிரவு முதல் நான் காணாமல்போய்விட்டேனே!

வன்னியிலிருந்து செய்தியறிந்து பதறியடித்தோடி வந்த அம்மா போன் பண்ணினபோது அழுதானாமே... 'அன்ரி என்ரை யூலியைக் கெதியில வெளியிலை கொண்டு வாங்கோ. எவ்வளவு காசு வேணுமென்றாலும் நான் அனுப்புவேன்' என்றானாமே... டேமியன்... நீ யார்? இறைதூதனா? இறை மகனா? இறைவனே நீதானா?

நாளை விடியும். அம்மா வருவா. நாளைக்கு நான் பார்க்கப்போகும் ஊரும் மனிதர்களும் எப்படியிருக்கப் போகிறார்கள். அதே வானம், அதே நிலம், அதே மனிதர்கள்... நாகரிகம்கூட அதே நாகரிகமாய்... கடிதங்கள் சொல்வது உண்மையானால்... டேமியன் நீங்கள்கூட அதே டேமியனாய் இருப்பீர்கள். ஆனால் நான்... அதே நான்தானா? நிராசையும் அவநம்பிக்கையும் பயமும் சூழ்ந்த என் மனதில் மீண்டும் அதே பழைய கனவுகளும்... இலட்சியங்களும்... ஆசைகளும் வருமா?

சூடான கண்ணீர் கன்னம் வழியே இறங்கியது. நிறைவேறாமல் போன ஆசைகளும்... கனவுகளும்... இலட்சியங்களும் நெஞ்சை நோக வைத்து விம்மலாய் வெளிவந்தன. கடந்த நாலு வருடமும் வந்து போன ஆயிரத்து நாநூற்றுஅறுபது நாட்களினதும் இரவுகளைப் போலவே... நெஞ்சின் வேதனை விம்மல்களாய்... வெளிவந்தது... மறக்க நினைத்தும் முடியாமல் அந்தத் துயரங்களின் முதல் நாள்... ஆரம்ப நாளே... நெஞ்சில் நின்றது.

யாழ்ப்பாண இடப்பெயர்வின்போது அழுதழுது வன்னிக்குக் கிளம்பியது ஞாபகம் வந்தது. ஸ்கூல்... தோழி டொறின்... ஜீனோ எனதருமை நாய்க்குட்டி அனைத்தையும், அனைவரையும் பிரியப் போவது நினைத்து பிழியப், பிழிய அழுதாள். அம்மாவுக்கும் கூட சிறு சிறு கவலைகள் தினமும் தேங்காய்ப் பூவும் தேங்காய் எண்ணெயும் கலந்து துடைத்து பளபளவென்று மினுங்கும் நிலத்தைத் துடைக்க இனி ஆளில்லை... தன் திருமண நாளிலிருந்து அம்மா துடைத்து அடுக்கிப் பாதுகாத்து வரும் வெள்ளையில் பூப் போட்ட அந்த 'டின்னர் செற்' முன் கோலில் மாட்டியிருக்கும் அழும் குழந்தையின் உண்மையான ஓவியம்... இப்படிச் சிறிதும், பெரிதுமான பற்றுக்களைத் துறந்து அவர்கள் வந்தார்கள். அவளும், தங்கச்சி ரமியும் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் படித்துக்கொண்டிருந்தார்கள்... கடைசித் தம்பி சென் பற்றிக்ஸ்... இவளுக்கடுத்த யூட் இரண்டு வருசத்துக்கு முதல் ஒருநாள் காணாமல் போனான்... அவன் கண்டுபிடிக்கப்பட்டபோது... போராளியாயிருந்தான். இவளுக்கு அவனிலதான் சரியான விருப்பம்... அவன் வன்னியிலதான் இனி இருப்பான் என்ற நினைவு யூலிக்கும்... அம்மாவிற்கும் எதையும் துறந்து வரும் மன நிலையைத் தந்தது. பாம்பு காலுக்குள்ளால ஓடும்... கண்கொத்திக் கலையான் கண்ணைப் பிடுங்கும் என்று பல வதந்திகள்... என்றாலும் யூட் அங்கதானே இருக்கிறான். வந்து சேர்ந்தார்கள்.

நிறைய வசதிக் குறைவுகள்... பொருளாதாரம் தேய்ந்துபோனது. ஓடியாடிப் படித்த பிள்ளைகளுக்கு இங்கு எதுவும் சரிவரவில்லை. யூடே ஒருநாள் 'அம்மா அக்கான்ரையும், ரமியின்ரையும் படிப்பை வீணாக்க வேண்டாம். வெளியில எங்காவது கூட்டிக்கொண்டு போய்ப் படிப்பியுங்கோ' என்றபோது அம்மா துணிந்தாள். சின்னவனுக்குத் துணையாக அப்பா தங்க, அம்மாவோடு அவர்கள் வவுனியா வந்து சேர்ந்தார்கள். ரமி வவுனியா கொன்வென்டில் படிக்க இவள் கம்பியூட்டர், மோட்டார் மெக்கானிசம் என்று பலதும் படித்தாள். தூரத்து உறவான அன்ரியொருவர் மூலம் உறவேயில்லாத டேமியனின் படம் திருமணம் பேசி அனுப்பி வைக்கப்பட்டபோது அம்மாவுக்குப் பெருமை பிடிபடவில்லை. சகல திறமைகளும் மிக்க தனது அழகான மகளுக்குப் பொருத்தமான மாப்பிள்ளை வீடு தேடி வந்து விட்டதே. யூலி... யூலியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. டேமியன் நேரில் பார்க்காமலேயே அவள் மனதில் இடம் பிடித்துவிட்டான்.

'நான் நிறைய உழைச்சிட்டன். எனக்குச் சீதனம் வேண்டாம்' என்று டேமியன் கூறியபோது யூலியின் வடிவில் அவன் தடுமாறிப்போய்விட்டான் என்று மற்றவர்கள் நினைத்ததைப்போலவே யூலியும் நினைத்துக்கொண்டாள்.

ஆனால் டேமியன்... உருவத்தைப்போலவே உயர்ந்த அழகான உள்ளம் கொண்டவன் என்பதை அவளறிய எவ்வளவு பெரிய விலை அவள் கொடுக்க

நேர்ந்தது. நான்கு வருட வேதனை அதற்குப் போதுமா? டேமியன் உங்களை நான் தவறாக எடை போட்டதுதான் என் தவறுப்பட்டியலில் இறுதித் தவறாக இருக்குமோ? அதற்குத்தான் இவ்வளவு பெரிய தண்டனையோ?

திடீரென்று ஒரு நாளிரவு வவுனியாவில் நானிருந்த வீட்டுக் கதவைத் தட்டி, திறந்த கதவின் முன்னே நின்ற தம்பியைக் கண்டு திகைத்து, மகிழ்ந்து கட்டிப் பிடித்து, இவன் போராளி, வன்னியிலிருக்க வேண்டியவன், இங்கை எப்படி வந்தான், என்று எந்தக் கேள்விகளுக்கும் இடமின்றிச் சந்தோசப்பட்டு பின்னே நடுங்கியபடி நின்றிருந்த அவன் தோழனை 'தம்பி உங்களுக்கென்ன காச்சலோ? உள்ளை வாங்கோ. முதலிலை இருங்கோ. ரீ போடுறன்' என்று உபசரித்து,

'அக்கா இவனுக்குச் சரியான காச்சல். இரத்தம் சோதிச்சு மருந்து எடுக்க வேணும். உன்னால ஏலுமோ' என்று வாழ்க்கை முழுவதுமே தன்னை வருத்தப் போகுது என்று அறியாமலேயே அவ்வார்த்தைகளை வெளியிட்ட என் தம்பிக்கு 'அதுக்கென்னடா பிரச்சனையில்லை. காலமை நான் கூட்டிக்கொண்டு போறன்' என்று கூறுகையில் விதி மதியை முந்திக் கொண்டதுவோ?

சிகிச்சை பெற்று உடம்பு தேறி வெளியேறிப் போன அந்தத் தோழன் முக்கியமான பணியின்போது இனங்காணப்பட்டு, அவனது பின்னணிகள் ஆராயப்பட்டு பின் தொடரப்பட்டு இவள் வீட்டு வாசலில் நின்றபோது... வீட்டு உரிமையாளன் ஒரு விரலை மட்டும் நீட்டினான், இவளது அறையை நோக்கி... அன்றுதான் இவளுக்கு சூரிய உதயமும், மறைவும் இறுதியாகிப் போனது.

மனித நேயங்கொண்டு நோய் தீர்க்கப் போனதும் என் தவறுப் பட்டியலில் ஒன்றா? அத் தவறுக்குரிய தண்டனைதான் என் உடலும், உள்ளமும் நோய் கொண்டமையோ?

'பிறந்தவையெல்லாரும் சாகிறது இயல்பு அக்கா. ஆனா நாங்கள் சும்மா சாகாமல் ஓராயிரம் இலட்சியங்களைச் சுமந்துகொண்டு அர்த்தத்தோடை சாகிறம். சும்மா பயப்பிடாதை' என்று அடிக்கடி என்னைத் தேற்றும் துணிச்சல்மிக்க உடன் பிறப்பைக் கொண்டதும் என் தவறுப் பட்டியலில் ஒன்றா? பள்ளிக்கூட நாட்களில் அம்மாவிற்கு டிமிக்கி விட்டுவிட்டு மாணவர் அமைப்புடன் எழுச்சிக் கூட்டங்கள், ஒழுங்கமைப்புக்கள் என்று அலைந்து திரிந்ததும் என் தவறுப் பட்டியலில் ஒன்றா?

அன்று ஊரெல்லாம் வியாபித்திருந்த விடுதலை வேட்கையினால் உந்தப்பட்டு ஊர்வலங்கள், போராட்டங்கள் என்று அனைத்திலும் கலந்து கொண்டதும் ஒரு தவறோ?

இப்படி எத்தனை தவறுகளின் அடிப்படையில் அன்று நான் கைதானேன்?

வீட்டு வாசலில் நின்ற ட்ரக்கில் ஏளனச் சிரிப்புடன் ஏறியது ஞாபகம் வந்தது. 'என்னைப் புலியெண்டு நினைச்சிட்டாங்களே விசரன்கள். புலியின்ர வாலைத்தான் இவங்கள் பிடிப்பாங்கள். நான் படிக்க வந்தனான். வெளிநாடு போகப்போறன் என்று தெரிந்ததும் விட்டிடுவாங்கள். டேமியனுக்கு இந்தப் பம்பலைச் சொல்லிச் சிரிக்கவேணும்.' நம்பிக்கையுடனேயே அவள் சிறைக்குச் சென்றாள். நாளை... நாளையாகி...அதுவும்... நாளையாகி 'பொம்பிளை ஏண்டி மோட்டார் மெக்கானிசம் படிச்சனி' என்ற கேள்வியுடன் விழுந்த முதலடியில் அதிர்ந்து, அழுது பரிதவித்து...

'ஐயோ! அம்மா! அப்பா! டேமியன்! இயேசுவே! என்னைக் காப்பாற்றுங்கோ' என்று கதறி மீட்பர் இயேசு வருவார் என்னும் நம்பிக்கை மங்கி, மெலிந்து கறுத்து உருமாறி, விடியும் பொழுதில் வரும் புதுவிதச் சித்திரவதைகளைக் கனவிலேயே கண்டலறி...... போயிற்று, எல்லாமே போயிற்று என நிராசையுற்று, நான்கு வருடங்கள், நான்கு யுகங்களாகச் சென்றொழிந்த பின் நாளை விடுதலை?!

விடுதலையாகி நான் என்ன செய்யப் போகின்றேன்? கைதான அன்றே பெண்கள் கற்பிழந்து விடுவார்கள் எனக் கருதும் சமூகத்திடம் ஓராயிரம் அடிகளும்... ஓராயிரம் சித்திரவதைகளும் என் உடம்பெங்கும், மனமெங்கும் சுவடுகளாய்ப் படிந்துள்ளபோதிலும் அந்த... கற்பிழத்தல் நடைபெறவில்லையென எப்படி நிருபிப்பது?

'ஜெயிலுக்குப் போன பிள்ளையைச் செய்யிறது சரிவராது. என்ன கல்யாணமே நடந்து போச்சுது. பேசாம விடுவம்' என்ற தாயை 'அம்மா யூலியின்ர இடத்தில உங்கட மகளை வச்சுப் பார்த்தா இப்படிக் கதைக்க மாட்டீங்கள். நான் யூலியைத்தான் செய்வன்' என்று உறுதியாகக் கூறி அடக்கின டேமியன் இன்னும் அதே உணர்வுகளுடன்தான் இருப்பானா?

நான் விடுதலையாகும்போது தானும் இருக்கவேண்டும் என்பதற்காகவே வந்திருக்கிறானாமே! நாளைக் காலை வரும் அவனை எப்படி எதிர்கொள்வது?

பயமும் பரபரப்பும் நெஞ்சில் அலைமோதி நின்றது. 'எதற்கும் யோசியாதே... என்ன நடந்தாலும் நீ என் மனைவி. நீ வெளியிலை வரும்வரை நான் காத்திருப்பேன்' என்ற வசனத்தையே பல நூறு தடவைகள் எழுதியவன் தான் டேமியன். என்றாலும் 'என்ன நினைப்பானோ' என்ற பயமும் குற்ற உணர்வுமின்றி அவனுடன் வாழ முடியுமா? உணர்வுகளுடன் போராடிக் களைத்துப்போனாள் யூலி.

நேற்று அம்மா விடுதலைபற்றிக் கூறியபோதே... இவள் அழத்தொடங்கி விட்டாள். சந்தோஷத்தில் அழுகிறாள் என நினைத்த அம்மா, 'ஊரில நான் எப்படியம்மா தலை நிமிர்ந்து வாழுறது' என்று யூலி கேட்டபோது திகைத்தேபோய்விட்டாள். ஏனெனில் அம்மாவின் முன் யூலி அழுவது இதுதான் முதல் தடவை. சந்திக்க வரும்போதெல்லாம் சிவந்து வீங்கிய கண்களுடன் காணப்படுவாள். தாய் மனம் பரிதவிக்கும். கிளிக்குஞ்சுபோல வளர்த்த மகளை இந்தப் பாழ்படுவான்கள் நேற்றுச் சித்திரவதை செய்தாங்களோ... என்று தவித்தபோதும் எதையும் கேட்கமாட்டாள். அவளும் எதையுமே சொன்னதில்லை. ஆனால்... இன்று... 'யூலி என்னம்மா இப்படிச் சொல்லுறாய்? நான் ஒரு பிழையும் செய்யாதபோது நான் ஏன் பயப்பிடவேணும். யார் என்ன சொன்னாலும் எனக்குப் பயமில்லை என்று துணிந்து நடக்கிற நீயா இப்படிச் சொல்லுறாய்?!' அம்மா திகைப்பும் வேதனையுமாகக் கேட்டாள்.

'அம்மா நானிப்ப முந்தின யூலியில்லையம்மா. எனக்கே நான் அந்நியமான மாதிரியிருக்கு.'

'யூலி யாரென்ன கதைத்தாலும் உனக்கென்னம்மா? டேமியன் உன்னிலை உயிரையே வச்சிருக்கிறான். அதைவிட நீ லண்டனிலைதான் இருக்கப் போறாய். ஒன்றுக்கும் யோசிக்காதையம்மா' கூறியவாறே முகத்தைக் கையால் மூடியவாறு அம்மா போய்விட்டாள்.

இருள் அகல அகல ஏனைய உணர்வுகளைப் பின் தள்ளிக்கொண்டு, குட்டி டேமியனின் நினைவு வந்தது. இந்நேரம் வந்திருக்குமே... எங்கே? கண்களால் துழாவினாள்... எழுந்து நின்று தான் சாய்ந்திருந்த சுவரையும் பார்த்தாள். எங்கேயும் காணவில்லை... குட்டி டேமியன் உனக்கும் இன்று விடுதலையோ?... அதனைக் காணாத கவலை மனதை வாட்டியது. கரும்பூனையின் வாயில்தான் அகப்பட்டுத் துடிக்கிறதோ எனத் தவித்தாள்.

விடிந்தது... அறை வாயிலை விட்டு வெளியே வந்தாள். 'ரிற்றிற்றீ' பரபரத்து நிமிர்ந்தாள். அறை வாயிலோரம்... பல்லி வாலைப் படபடவென்று ஆட்டியது. மனதிற்குள் போய் வருகிறேன் எனதருமைத் தோழா. இன்னும் ஒரு யூலி வரக்கூடும். அவளுக்காகக் காத்திரு எனக் கூறியபடியே அகன்றாள்.

அம்மா கட்டிப்பிடித்து அழைத்துப் போனது ஏதோ கனவிற்போல இருந்தது. புதுக் காற்றும்... புது வெளிச்சமும் பட்டுத் தேகம் சிலிர்த்தது. தலையை நிமிர்த்தி ஆழமாக மூச்சை எடுத்துக் காற்றை உள் வாங்கினாள். நீண்ட காலமாகப் பாட்டுக்களையே மறந்திருந்த அவளுக்கு தன்னையறியாமலேயே மிகப் பிடித்த பாடல் வரி ஒன்று மனதில் ஓடியது... முதன் முறையாய் நான்கு வருடங்களுக்குப் பின்,

'பூந்தோட்டம் சுகமே போராட்டம் சுகமே
பூலோகம் சுகமே இந்தப் பொய் வாழ்க்கை சுகமே
இவள் காண்பது புதுத் தேசமா?
இவள் கொண்டது புனர் ஜென்மமா?
கடந்து வந்த காலம் இனி வருமா?'

இறுதி வரி அனைத்தையும் ஞாபகப்படுத்த மனமும் முகமும் கசங்கி... கண்கள் கலங்கி நின்றவள் கண்ணில் அவன் பட்டான்.

புன்சிரிப்புடன் கலங்கிய கண்களுடன் ஏராளம் எதிர்பார்ப்புக்கள் விரவி நின்ற முகத்துடன் இவளையே பார்த்துக்கொண்டு... அவன்... டேமியன். படத்தில் மட்டுமே பார்த்திருந்த அவனை நேரில் பார்க்க மாட்டோமா என அவள் தவித்த காலம் உண்டு. இன்று நேரில் பார்த்தபோதோ... பயம்...! அவநம்பிக்கை...!

புரிந்துகொண்டவனாய் கையைப் பிடித்துக்கொண்டான். "போகலாம் யூலி" மென்மை விரவி நின்றது குரலில். கொடூரக் குரல்களையே கேட்டு அதிர்ந்து நின்ற காதுகளை இதமாய் தடவிச் சென்றது அவன் குரல்.

டேமியனின் மறு பெயர் 'புரிந்துணர்வு' ஆகவும் இருக்கும்போல. வாய் திறந்து எதுவும் கூறாமலேயே அவன் புரிந்துகொண்டான்.

'யூலி இந்த நாலு வருஷமும் சிறையில என்ன நடந்தது என்று கேட்கிறதுக்காக நான் இங்க வரேல்ல. எனக்கு மட்டுமல்ல எவருக்குமே நீ அதைச் சொல்ல வேண்டிய தேவையில்லை. என்னைப் பொறுத்தவரையில் அது நீண்டதொரு பயங்கரக் கனவு. நான் லண்டனிலிருந்து இஞ்ச வராமலே உன்னை அங்கு கூப்பிட்டிருக்கலாம். ஆனால் இதே பயமும், அவ நம்பிக்கையும், குழப்பமும் லண்டன்வரை உன்னைத் தொடர்ந்து வர்ரதை நான் விரும்பேல்ல. உனக்கு நானிருக்கிறன் என்று உணர்த்தத்தான் இங்கு வந்தனான். நடந்து முடிந்த எதற்கும் நீ காரணமில்லை. உன்னிலை ஒரு தவறுமில்லை. இந்த மண்ணிலை இருந்திருந்தால் நான் என்ன செய்திருப்பனோ அதைத்தான் நீயும் செய்திருக்கிறாய். இனியும் செய்ய வேணும். இப்பக்கூட எனக்கு லண்டனுக்குத் திரும்பிப் போக விருப்பமில்லை. ஆனால் இந்த மண்ணைவிட்டு கொஞ்சக் காலம் விலத்தியிருப்பது உன்னுடைய மனப் புண் ஆற வழிவகுக்கும் என்றதாலைதான் போக விரும்புறன். புதிய சூழல், புதிய மக்கள் உனக்குப் புத்துணர்வு ஊட்டும். உனக்குள்ள இருக்கிற கசப்பையும் கோபத்தையும் அப்படியே பேணி வை. அது அழியவோ மங்கவோ கூடாது. இரண்டு வருஷத்தில திரும்பி வருவம். எங்கடை மண்ணில வாழுவம். எங்களால முடிஞ்சதை எங்கட மண்ணுக்குச் செய்வம். உனக்கேற்பட்ட அனுபவங்கள் இந்த உணர்வைத்தான்

உனக்குத் தரவேணும். அவநம்பிக்கையையோ.... குற்றஉணர்வையோ அல்ல,

மென்மையாக... மிக மிக மென்மையாக சொற்கள் மனதில் இறங்கி ஆழப் பதிந்து என் வடுக்களை மெல்ல மெல்ல மறைத்துக்கொண்டிருந்த போது... சின்ன வயசில் அப்பா செய்ததுபோல... மீட்பர் இயேசு ஆசீர்வதித்தது போல... டேமியனின் கைகள் தலையைத் தடவ,

'டேமியன் முதல்ல ஊருக்குப் போவம். அங்கை... பெரிய கோயில் என்ரை ஸ்கூல், வளவிற்குள்ள நிற்கிற வேப்பமரம், எல்லாம்... எல்லாம் பார்க்க வேணும். மதர் சுப்பீரியர், என் தோழி டொறின் எல்லோரையும் பார்க்க வேணும். யூட்... யூட் அவனையும் பார்த்து, 'நீ எழுதின மன்னிப்புக் கடிதம் கிடைச்சுது. மன்னிப்பு என்னத்துக்கடா? நீ என் தம்பி. அதைவிடவும் போராளி. உனக்காக நான் சுமந்த சிலுவை... இந்த மண்ணுக்கான என் பங்களிப்புக்குக் கிடைச்ச வெகுமதி... நீ சுமக்கிற சிலுவையைவிடச் சின்னது'

என்று சொல்லவேண்டும். இவ் வார்த்தைகளைச் சொன்னாளா, சொல்ல நினைத்தாளா என்பது புரிய முன்னரேயே நாலு வருடங்களின் பின் முதன்முறையாக... நாளைய விடியல் நல்லதாகவே இருக்கும் எனும் புரிதலுடன் அவளிமைகள் மெதுவாக... இதமாக.. மூடிக்கொண்டன...





# திறக்கப்பட வேண்டியது... மூடியிருந்த பாதை மட்டுமல்ல......

-ஆதித்தநிலா-

"ஏ-9 பாதை திறப்பு, ஆசிரியர்களும் போயினம்...! பிள்ளையளும் போயினம்... இருந்த படிப்பும் போச்சு...! ஆனாலும் என்னால முடிஞ்ச வரையில கவனமெடுத்துப் படிக்கிறன்."

நிதாவின் வரிகள் வலித்தது கவிதரனுக்கு. நிதாவின் குப்பி விளக்கு, அவனின் நினைவுகளில் குமிழியிட்டது. பொருளாதாரத் தடையிலும் அகதி வாழ்வின் அவலங்களிலுமாய் அவளால் தயாரிக்கப்பட்ட குப்பி விளக்கு. சிறிய மாமைற் போத்தல் அளவிலானதான ஒரு வெள்ளைப் போத்தலில் சிறிதளவு மண்ணெண்ணெய் கொண்டு சிக்கனமாய்க் கிடைக்கும் வெளிச்சத்தைச் சற்றுக்



கூட்டும் வகையிலான அவள் முயற்சி வட்டமாய் ஒரு வெள்ளைத் தாளில் பட்டுத் தெறித்து, சற்றுப் பிரகாசமான ஒரு வெளிச்சம். அதில் படித்துத்தான் O/L தரத்தில் மாவட்ட ரீதியில் முதலாவதாய்த் தேறியவள் தமிழவனின் தங்கை நிதா.

தமிழவனும், கவிதரனும் விடுதலைப் பயணத்திலும் ஒன்றாய் தடம் பதித்த இணைபிரியா நண்பர்கள். விடுதலைப் பயணத்திலும் ஒன்றாய்ப் பயணிக்க அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பு அருமையானதுதான். தமிழவனின் குடும்ப விபரம் யாவும் கவிதரனுக்கு அத்துப்படி. கவிதரனின் குடும்ப விபரம் யாவும் தமிழவனுக்கு அத்துப்படி.

தமிழவனுக்கு நிதாவில் கொள்ளைப் பிரியம். அவன் நிதா பற்றிச் சொன்ன செய்திகள் எல்லாம் அடுக்காய் அவன் நினைவிற் குவிந்தது.

“அப்ப நான் தமிழவனாய்க் கால் பதிக்க முதல் வினோதனாய் A/L பரீட்சைக்காய் தயாராகிக்கொண்டிருந்த காலமது. 4.00 மணியென்றதும் எலாம் அடிக்காமலே என்ர மனக்கூண்டில எலாமடிக்கும். நிதாவும் கூடவே எழுந்துகொள்வாள்.”

‘நிதாம்மா அண்ண படிக்கப் போறன். நீங்கள் என்ன செய்யப் போறியள்...’

‘நானும் படிக்கப் போறன்’

நான் எப்பயோ எழுதிக் கொடுத்த அ, ஆ, இ, ஈ... வைத்துக் கொண்டு எழுந்திருப்பாள். நாலு வயதில 4.00 மணிக்கு எழும்பி என்ன படிப்பு இவளுக்கு...?

குழந்தையளின்ர உளவியல் சூட்சுமமானதுதான். ஆனால் நிதா சிறிய வயதிலேயே புரியாத புதிராக இருந்தாள். அவள் ஒரு ‘ஏவுகணை’ குழந்தைகளிடமிருக்கும் குறும்புத்தனங்கள், விளையாட்டுத் தனங்கள் அவளிடம் இல்லை. பெரிய மனுச தோரணை. எதிலும் ஒரு தேடல். சிந்தனை வசப்பட்ட நிலை. புத்தி சாதுர்யம். கண்களில் ஒரு பிரகாசம்.

“நிதாம்மா அண்ணனுக்குப் படிக்க நிறைய இருக்கு. பிள்ளைக்குக் கனக்க இல்லைத்தானே...” மேசையில அடுக்கி வைத்திருந்த புத்தகங்கள் கொப்பிகளைக் காட்டுவான். அவள் தன்ர ஒரு சில புத்தகங்களையும் பார்ப்பாள். இந்த வயதில் இந்த விழிப்பு உடலுக்கு ஏதேனும் தீங்கோ என்று தோன்றும் எனக்கு. அவள் பதிலளிக்கமாட்டாள். அமைதியாகச் சிந்திப்பாள். ஊடுருவிப் பார்ப்பாள். “அ...னா எழுதிப் போட்டுப் படுக்கிறன்.” 5.00 மணிவரை எழுதிப்போட்டுத்தான் படுப்பாள். கதிரை எழுப்பப் படாதபாடு படுவன். அவன் புரண்டு புரண்டு படுப்பான்.

நகரப் பாடசாலைகளில் தனியார் நிறுவனங்கள், ரியூட்டுகள், பலமணிநேர பலரின்ர பேசனல் கிளாஸ்கள், பலரதும் வழிகாட்டுதல்கள், பணச் செலவுகள், என்றிருக்க, எதுவித ஆரவாரமுமில்லாமல் ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை வென்றவள் நிதா. அப்பத்தான் நகர்ப்புறத்தில் இருந்து இடம் பெயர்ந்து எங்கட கிராமப்புறப் பாடசாலையோடு இணைந்திருந்த ஆசிரியர் கூட்டம், பின்னணி தேடிச்சுது. எந்தப் பின்னணியும் இல்ல. நான் A/L படிச்சுக் கொண்டிருந்ததைத் தவிர.

நிதாவின் நிமிர்வுக்குள் நிறைந்த வேதனைகள். தமிழவன் விடுதலைப் பயணத்தில் கால் பதித்து அத்தனை வருடங்களுக்குப் பிறகு கவிதரனுடன் அன்றுதான் போயிருந்தான். அகதி வாழ்வு அவலம் நிறைந்ததுதான். ஆனால்... அவர்களை அவ்வளவாய் பாதித்திருக்கும் என்று அவன் இப்போது நினைத்திருக்கமாட்டான். அவன் போனபோது நிதா ஆண்டு 8 ல் படித்துக் கொண்டிருந்தாள். வளமாய் வாழ்ந்த வாழ்வு போய், இல்லாமை தாண்டவமாடிய நிலை அவனுக்கு வலிக்கவில்லை. நிதா சொன்ன செய்திகள்தான் வலித்தது.

“அண்ண நீங்க போனதோட எல்லாம் போச்சு. 3ம் தவணை முடியப் போகுது. சில பாடங்களில மூன்று பாடம்கூட முடியேல்ல” பிரகாசமான அவள் கண்களில் நீர்த் திவலைகள்.

“கேட்டா ஏதோ ஒரு மாதிரி கொலஷிப்பில பாஸ் பண்ணீட்டீர் எண்டதுக்காக தேவையில்லாத ஆராச்சியை விட்டுட்டு குழப்பாம இரும். ஏதோ பெரிய என்ஜினியராய்த்தானே வரப்போறீர்” என்றாவாம் பானுமதி ரீச்சர். அன்று நிதா அழுத அழுகை...!

அவளின்ர தேடலுக்கு விடையளிக்க அவர்களால் முடியேல்ல. அவள் ஒவ்வொன்றையும் துருவித் துருவிக் கேட்பாள். யதார்த்தத்தோடு ஒப்பு நோக்குவாள்.

நிதா தொண்டராசிரியர் நிருபமா ரீச்சரின் வழிநடத்தலிலும், அவளது அயராத சுயமுயற்சியிலும் புலமைப் பரிசிலை வெண்டதிலிருந்து பானுமதி ரீச்சருக்கு அவள் மீது வெறுப்பு.

அவள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்க முடியாத ஆற்றாமை, அதிகாரமாய், அதட்டலாய், அநாகரிகமாய் அடக்கியது.

“அண்ண நீங்கள் பிழை விட்டிட்டியள். ‘வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயர்வான்.”

தமிழவன் ஓயாத அலை 01 ல காயப்பட்டிருந்தபோது பார்க்க வந்த அவன் தம்பி கதிர் சொன்னது நினைவிற்கு வந்தது.

"அண்ண படிப்படியாய் வளரவேணும். நீங்கள் பாய்ஞ்சிட்டிங்க" அவன் சொன்னபோது தமிழவன் சொன்னவை அவனைச் சமாதானப் படுத்தவில்லை.

"தம்பி நீதானே வளர்ந்திட்ட. நீங்கள் வரப்பில இருந்து வாங்கோ. நான் கோனில இருந்து வாறன். இரண்டும் இடையில சந்திக்கும். அப்ப எங்கட பணி இலகுவாப்போம்."

"இடையில சந்திக்கிறது...!" செத்துப்போன சிரிப்பு அவனிடம். "அதுக்கிடையில் நிதாவை, நிதாவைமாதிரிப் பிள்ளையளின்ர உணர்வுகளைச் சாகடிக்காமல் இருந்தால் சரி"

தமிழவன் பதிலளிக்கவில்லை.

"அதுசரி. உனக்குக் கம்பஸ் கிடைக்குமாமே. போறியோ?"

"போறன், கம்பஸ்சுக்கில்லை, கனடாவிற்கு"

எல்லாவற்றையுமே இழந்து நின்றபோது கலைப்பிரிவே சுய முயற்சிக்கான தேர்வாயும், வாய்ப்பாயும், வசதியாயும் பட அன்றைய நெருக்கடியான சூழலில் அவனின் தேர்வு அது. ஆறு மாதங்களே அதற்காய் அவன் செலவிட்டிருந்தான். எஞ்சிய காலமெல்லாம் குடும்ப வண்டியை ஓட்டப் பல பகுதி நேரத் தொழில்களில் ஈடுபட்டிருந்தான்.

எப்படிப் போகிறாய் என்று அவனுக்குக் கேட்கத் தோன்றவில்லை. அவனே சொன்னான். "பிரன்ஸ்தான் கூப்பிடுறாங்கள். நிதா படிக்கோணும்." அன்று போனவன்தான். எந்தக் காணாமல் போனோர் பட்டியலிலும் அவன் இல்லை.

தொடர்ந்து வந்த ஓயாத அலையில், தமிழவனும் கப்டன் தமிழவனாய், வரலாற்றில் பதிவாய், அவன் தம்பி கதிர் அனுப்பிவிட்டுச் சென்ற இரா. நடராசனின் 'மதி என்னும் ஒரு மனிதனின் மரணம் குறித்து' சிறுகதைத் தொகுப்புப் புத்தகத்தை கவிதரன்தான் வாசித்தான். 'ஆயிஷா' சிறுகதையை வாசிக்கும்படி அவன் குறிப்பிட்டிருந்தான்.

“ஆயிஷா”வாசித்தவனுக்கு நிதா தான் நினைவில் வந்தாள்.

நிதா ஐந்தாம் வகுப்புப் படிக்கும்போது செய்த தீர்மானம் கவிதரனுக்கும் நன்றாய் பதிவாகியிருந்தது.

“நிதா நீயும் அண்ணரும் படிப்பியளாம். நான்தான் எருக்கடகம் சுமக்கப் போறனாம். அம்மான்ர தொணதொணப்பு தாங்கேலாது. நீ என்ன நினைக்கிற” படிச்சுக் கொண்டிருந்தவளின்ர கையில இருந்த கொப்பியைப் பறிச்சு வைச்சுக்கொண்டு கேட்டான் கதிர்.

“என்னத்தைப் பற்றிக் கேட்கிறாய்...”

“நான் எருக்கடகம் சுமக்கிறதைப் பற்றி. எருக்கடகம் சுமந்தாலும் உன்னை உழைச்சுப் பாப்பன்ரி. நீ நம்புறியோ நிதா”

“போடா முழியா... நான் என்ர காலில நிப்பன். நீ ஏன் உழைச்சுத் தரோணும்...” பத்து வயதிலேயே அவளிடமிருந்த தெளிவு, நிதானம்தான் அவர்களைப்பற்றிச் சிந்திக்காமலே தடம் பதிக்கச் செய்ததாய்ச் சொன்னான் தமிழவன். அவன் நம்பினான் ‘தான் விடுதலையின் படிக்கல்லாய் அமைய, அவள் நிர்மாணிப்பின் படிக்கல்லாய் அமைவாள்’ என்று

ஆனா... A/L கணிதப் பிரிவில் கற்றுக்கொண்டிருந்த அவளால் தகுதி வாய்ந்த ஆசிரியர்களது கற்பித்தலின்றி சிலபஸ் முடிக்கப்படாமல் சுய முயற்சியால ஜெயிக்க முடியுமா...!





# உடைந்த வீடு

செ.புரட்சிகா

“சாபா! என்ன மாதிரி. பிள்ளையள் ஓரளவுக்குச் செய்யினம்தானே. திரும்ப ஒருக்கா இண்டைக்குப் பார்த்திட்டு நாளைக்கு ரவுண்ஸ் அடிச்சிச் செய்யக் குடுங்கோ.” பொறுப்பாளர் சொல்லிவிட்டுப் போனது மீண்டும் என் நினைவில் வந்தது. இதைப்பற்றிக் கதைக்கத்தான் இங்கே வந்திருந்தேன். நான் எண்ணி வந்ததையே பொறுப்பாளரும் சொன்னது எனக்கு வசதியாய் போய்விட்டது. உடனேயே பயிற்சி மைதானத்திற்குத் திரும்பினேன்.

“நாங்கள் இங்கால ரவுண்ஸ் அடிக்க அவன் அங்கயிருந்து வெளுக்கிறானோ தெரியாது. அதுக்கேற்ற மாதிரி ‘ஐ’ பங்கர் எண்டாலும் உள்ள இடமாத்தான் பார்க்கவேணும்.” சிந்தித்துக்கொண்டே பயிற்சி இடத்திற்கு வந்து சேர நேரம் ஒன்பதரையாகியிருந்தது. கட்டிடப் பயிற்சிக்கென ஒதுக்கப்பட்ட

வீடுகள் நிறைந்த அந்த இடத்திற்கு அணியை அனுப்பிவிட்டு தனித்தனியே ஒவ்வொரு அணிகள் செய்வதையும் பார்த்துக் கொண்டே வந்தேன்.

"காந்தி றைபிளை இப்படிப் பிடி. இதுதானே உள்ளுக்க ரவுண்ஸ் அடிக்க இலகுவான முறை. அங்க பார் கலா செய்யிறது எவ்வளவு நல்லா இருக்கெண்டு. பிழையாய் செய்தியெண்டால் நாளைக்கு ரவுண்ஸ் அடிச்சு செய்ய விடமாட்டான்." என்று ஒரு குட்டி வெருட்டும் போட்டுவிட்டு அப்பால் நகர்ந்தேன். எல்லா அணித் தலைவிகளும் தத்தம் அணிகள் நன்றாகச் செய்ய வேண்டுமென்பதற்காக மிகவும் கவனம் எடுத்துக்கொண்டிருந்தனர். அவர்களின் ஆர்வத்தைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"புது ஆக்கள்தான். ஆனால் வலு உசாராய் நிற்கினம். விட்டால் இப்பவே போய் யாழ்ப்பாணத்தைப் பிடிச்சுப்போடுவினம்போல கிடக்கு." என்று அவர்களின் ஆர்வத்தை எனக்குள் மெச்சியபடி மதனாவைக் கூப்பிட்டேன். வேறோர் அணியுடன் நின்று அவர்களைக் கவனித்துக்கொண்டிருந்த மதனா "சுபா ஏன் கூப்பிட்டனீங்கள்" எனக் கேட்டுக்கொண்டே அருகில் வந்தாள்.

"ரவுண்ஸ் அடிச்சிச் செய்யிறதுக்கு நல்ல வீடு பார்த்துக்கொண்டு வாறன். ஒரு மணிக்குச் சாப்பிட விடுங்கோ" என்று சொல்லி முடிப்பதற்குள் "ஆகா நல்ல வீடே பார்க்கப்போறியள்" எனச் சிரிப்போடு கேட்டாள்.

"ஓகோ அப்படியா சொன்னனான். ஏன் அதிலயென்ன பிழையிருக்கு? ரவுண்ஸ் அடிச்சுச் செய்ய நல்ல வீடு எண்டால் 'உடைஞ்ச வீடு' எண்டுதானே அர்த்தம். சரி போட்டு வாறன். உவன் செல்லைக் கில்லை அடிப்பான் கவனம்" என்று சொல்லிக்கொண்டே வேகமாக வேணியுடன் நடந்தேன்.

நீல வர்ணம் பூசப்பட்ட, நாம் பயிற்சி செய்யும் அந்த வீட்டைக் கடந்து அப்பாலே போனோம். இங்கு எறிகணை வீச்சுத்தான் முக்கிய பிரச்சினையாக இருந்தது. எமது நிலைகளுக்கும் எதிரியின் நிலைகளுக்குமிடையிலான தூரம் அண்ணளவாக நானூறு மீற்றர் என்றால் இந்த இடத்தில் இருந்து எங்கட சூட்டுச் சத்தமும் கட்டாயம் எதிரிக்குக் கேட்கும். கேட்டால் ஏதோ ஒழுங்கு நடக்கிறதென்று பிரதான தளத்திற்கு அறிவிப்பான். அறிவித்தால் எறிகணைகள் கூவிக்கொண்டு வந்து விழும். வெடிக்கும். இதுதான் இங்கு தொடர்ந்தும் நடந்தது.

உதுக்குப் பயப்பிட்டால் நாங்கள் ஒண்டுமே செய்யேலாது. அந்த நல்ல வீட்டை இப்ப தேடிப்பிடிக்கவேணும். வீடுகளைக் கட்டிப்போட்டு சனம் அங்கு கஸ்ரப்பட, வீடுகள் உடைவதைப் பார்க்க ஏலாமல் நாங்கள் இஞ்ச கஸ்ரப்பட,



அதுக்கு மேலால ஒரு வீட்டைத் தேடி நான் இப்ப கஸ்ரப்படுறன் என்று மனதில் நினைத்து மெல்லச் சிரித்தும் விட்டேன்.

இடையில் வேணிதான் கேட்டாள். "என்ன உன்ர பாட்டில யோசிச்சுக் கொண்டு வந்தனி இப்ப சிரிச்சுக்கொண்டு வாறாய்." பதில் சொல்லாமல் தலையை ஆட்டிக்கொண்டு நடந்தேன்.

திரும்பவும் வேணிதான் கதைத்தாள். "இந்த லைனுக்கு வந்த புதிசில பங்கர் அடிக்கிற குத்தி ஒண்டும் வந்து சேரயில்லை. மண்வெட்டியளும் இல்லாம இருந்தது. அந்த நேரம் லைனுக்குக் கிட்ட இருந்த வீடுகள் எல்லாம் சுவர் உடையாமல் நல்லாத்தான் இருந்தது. இந்த வீடு கொஞ்சம் உடைஞ்சிருந்தா இதில கொஞ்ச கல்லெடுத்து விசயத்தை முடிச்சிருக்கலாம் எண்டு எல்லாரும் ஆளுக்காள் கதைச்சுப்போட்டு வேற வேலையளுக்குப் போட்டம். அண்டைக்கு இரவு எங்கட சத்தத்தால நாங்கள் நிக்கிறது தெரிஞ்சுதான் அடிச்சானோ என்னவோ தெரியேல்ல, ஒரே செல்லடி. மேல பாதி மூடியும் மூடாமலும் இருந்த பங்கர்கள்தான் எங்களுக்குப் பாதுகாப்பா இருந்திச்சுது. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு செல்லடி அவ்வளவும் காணுமெண்டு இருந்த ஏழெட்டுக் குத்தியளப் போட்டு மூடிற்றுப் படுத்திட்டம். விடிய எழும்பி வெளியில வந்து பார்த்தா வயிறெல்லாம் பத்தி எரிஞ்சமாதிரி இருந்தது. இந்த வீடு உடைஞ்சிருந்தா இதில கொஞ்சம் கல்லெடுத்து விசயத்தை முடிச்சுப் போடலாம் எண்டு நினைச்ச வீடு உடைஞ்சுபோய் இருந்தது. சீ... ஏன் நாங்கள் இப்படி நினைச்சனாங்கள்.? இனியென்ன செய்யிறதெண்டு உடனடித் தேவைக்காக அந்தக் கல்லுகளை எடுத்து எங்கட சில வேலையளை முடிச்சம்." சொல்லி முடித்த அவளின் விழிகள் கலங்கியிருந்ததை என்னால் அவதானிக்கமுடிந்தது.

இப்பவும் நான் உடைஞ்ச ஒரு வீட்டைத் தேடிக்கொண்டுதான் போறன்... திடீரெண்டு எதிரியின் எல்லா இடங்களிலிருந்தும் செல் குத்தின சத்தம் கேட்டுது. "ஐயோ! வேணி செல் வரப்போகுது. பிள்ளையள் என்ன செய்யுதுகளோ தெரியாது." வாய்விட்டுச் சொல்லிக்கொண்டேன். அந்தப் பயத்தில பக்கத்திலிருந்த பதுங்கு குழிக்குள் இறங்கக்கூட மனம் வரவில்லை.

"அங்க பங்கர் இருக்குதுதானே. இங்கான் செல் வரப்போகுது." என்றபடி உள்ளே பிடித்து இழுத்தாள் வேணி. அவள் இழுக்கவும் எறிகணைகள் பக்கத்தில் விழவும் சரியாக இருந்தது."

சாப்பாடு எடுக்க வந்தால் செல்லடி. இடம் பார்க்க வந்தால் செல்லடி. பயிற்சிக்கெண்டு வெளிக்கிட்டால் செல்லடி. செல்லடி இல்லாத நேரம் எதெண்டே எங்களுக்குத் தெரியேல்ல. ஆனாலும் நாங்கள் ஒரு வேலையும் செய்யாமலும்

விடேல்ல. அவன் தன்ரபாடு. நாங்கள் எங்கட பாடு. என் சிந்தனை எல்லாத் திசையும் சிறகடித்தது. "சுபா இது எங்கட பக்கம் வராது. கட்டாயம் கண்டல் பக்கம்தான் விழும்" வேணி சொல்லி வாய் மூடுவதற்குள் அவள் சொன்ன பக்கமாக கும்... கும் என அதிர்ந்தது. தொடர்ச்சியாக இந்தப் பிரதேசத்தில் நிற்பதால் எந்த இடத்தில் அடித்தால் எறிகணை எந்தப் பக்கம் வரும் என்பதை ஓரளவுக்குச் சொல்லக் கூடியதாக இருக்கும். பெரும்பாலும் இது பொய்ப்பதில்லை.

"அட உது இங்க வராது." என்று சொல்லி எறிகணைகள் பக்கத்தில் விழ நன்றாக வாங்கிக் கட்டின நாட்களும் நினைவில் இருந்தது. எப்பொழுது எறிகணைச் சத்தம் கேட்டாலும் பதுங்குகுழிக்குள் போய்விட வேண்டும் என்பது பொறுப்பாளரின் கடும் கட்டளையாக இருந்தது. உள்ளே இறங்கும் அலுப்பில் இரண்டாம் மூன்றாம் படி மட்டும் தலையைக் காட்டிவிட்டு மெல்ல ஏறிவிடுவோம்.

"ராங்கோ லீமா லைன் பக்கம் போனால் எங்களுக்கேற்ற மாதிரியாக வீடு இருக்குமெண்டு சிந்து சொன்னவள். ஆனா இப்ப அங்க போக நேரம் காணாது. எப்படியும் இண்டைக்கு இடம் பார்த்தாத்தான் நாளைக்கு வேளையோட வேலையை முடிக்கலாம். ஒரு வீட்டைக் கட்டப்படுகிற கஷ்ரம் ஆமிக்குத் தெரியுமே? கட்டின வீட்டை உடைக்கமட்டும்தான் அவனுக்குத் தெரியும். அவன் உடைச்சதைத் தொடக்கூட எங்களுக்கு மனமில்லாமல் இருக்கு. பாவம் எங்கட மக்கள். கொஞ்சம் கொஞ்சமா மிச்சம் பிடிச்சு வேர்வை சிந்திக் கட்டின வீடுகளை செல்லாலையே மனங் கூசாமல் உடைச்சிற்றுப் போறான். நினைக்கவே ஏற்க முடியாமல் இருக்குது. ஏற்கக் கூடியமாதிரி இருந்திருந்தா இங்கேயோ இப்ப நிண்டிருப்பன்.? எந்தச் சிறைக் கூடத்துக்கையோ இல்லாட்டி செம்மணிக்கையோதான் இருந்திருப்பன். எல்லாரும் அப்படித்தான். சரி இப்ப அடிச்சுத் தள்ளின செல்லுகள் எங்கெங்க விழுந்துதோ தெரியாது." ஒருமாதிரி எறிகணை வீச்சு நின்றதுபோலிருக்கவே வீடு எனக்குள் விசுவருபமெடுக்கத் தொடங்கியது. பக்கத்தில் வெடித்த எறிகணைகளின் மணம் தாங்கேலாமல் இருந்தது. மூச்சு அடைத்தமாதிரியும் இருந்தது. ஒருமாதிரிச் சமாளித்துக் கொண்டு பிள்ளைகள் நின்ற இடத்திற்கு வந்தோம். "பிள்ளைகளுக்கு ஏதும் நடந்திருக்குமோ?" இதயத் துடிப்பு வேகமெடுத்தது.

நாங்கள் வழமையாக நிற்கிற இடத்திற்குக் கிட்ட வர அந்த வீடு நொருங்கிப்போய் கிடக்கிறது தெரிய நான் "மதனா... மதனா..." எனக் கத்தினேன். மதனா தூரத்தில் நின்று சிரித்துக்கொண்டு "எங்களுக்குப் பிரச்சனையில்லை" என்று கத்திக் கையைக் காட்டினாள்.




"இதென்ன வீட்டுக்குள்ள ஏதோ சத்தம் கேக்குது." நான் பயந்து போய் ஏற்றுக்கொள்ள ஏலாத மனதோட எட்டிப் பார்க்கிறன். உள்ளுக்குள்ள அனு. புறச்சூழலையே மறந்து றைபிளை தோளில கொழுவிற்று ஒரு கரடிப் பொம்மையை வைச்சு அதில படிஞ்சிருந்த தூசு, மண் துகள்களைத் தட்டிக் கொண்டிருந்தாள். அப்பத்தான் எனக்கு மூச்சு வந்தமாதிரி இருந்தது. நான் ஏதோ காயம் எண்டு பயந்துபோட்டன்.

வேணி மெல்ல என்னை இழுத்துக்கொண்டு வெளியே வந்தாள். "ஏன் இப்ப கூட்டிக்கொண்டு வந்தனி?" கோபத்தோடு வேணியைப் பார்த்துக் கத்த வெளிக்கிட "கத்தாதை கதையைக் கேள்" என்று என்னைப் பார்க்க நான் மௌனமாக அவளைப் பார்த்தேன்.

"அனுவும் வீட்டில இப்பிடி ஒரு கரடிப் பொம்மையைத்தான் வைச்சிருந்தவளாம். அந்தப் பொம்மையை சூரியக்கதிர் 1இல இடம் பெயர்ந்து வரேக்குள்ள விட்டிட்டு வந்து சரியான கவலையா இருந்தவளாம். முந்தி 'அம்மா! புலி அக்கா, அண்ணாக்கள் எப்ப எங்கட இடத்தைப் பிடிச்சுத் தருவினம்? நாங்கள் அங்க போகேக்க என்ர கரடிப் பொம்மை அப்படியே இருக்குமே? இல்லாட்டி ஆரன் எடுத்துப் போடுவினமே? ' எண்டு கண்ணெல்லாம் கவலை நிறையக் கேட்பாளாம் எண்டு அனுவின்ர அம்மா அவள் இயக்கத்துக்கு வந்தாப் பிறகு சொல்லிக் கவலைப்பட்டவா.

அண்டைக்கு அனு இந்தப் பொம்மையைக் காட்டி எனக்குச் சொல்லுறாள் "நான் கவலைப்பட்டமாதிரித்தானே இந்தப் பிள்ளையும் கவலைப்பட்டிருக்கும். அவயள் திரும்பி வரேக்குள்ள வீடு அப்படியே இருக்கிற மாதிரி இதுவும் இப்படியே இருந்தா எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும்" எண்டிட்டு அந்தப் பொம்மையைத் துடைச்சுக்கொண்டு நிண்டவள். இப்ப வளந்திட்டாள்தான். எண்டாலும் தாக்கம் மனதில அப்படியே இருக்கு. எங்களைக் கண்டால் கவலைப்படுவாள் எண்டுதான் உன்னை இங்கால இழுத்துக்கொண்டு வந்தனான். வா நாங்கள் உடைஞ்ச வீடு தேடிப் போவம்" என்றாள்

மனதில் துயர முட்கள் குத்தின. ஓ... நான் உடைஞ்ச வீடு தேடி, இப்ப உடைஞ்ச அந்த வீட்டையும் தாண்டிப் போய்க்கொண்டிருக்கிறேன்.





# அப்பாப் பூனை

– ச.சாரங்கா –

'டியேய்...'

வெளியே அப்பா இரையும் சத்தம் கேட்டது. வழமைபோல அமுங்கிய குரல்தான். அம்மா ஒரு பெரிய புயலுக்கான மூட்டங் கவிவதைத் தெளிவாக உணர்ந்துகொண்டவள்போலப் பதட்டம்மீதுர வாசல் பார்த்தாள். குழந்தைகள் அறைக்குள் பதுங்கின. கசப்பான அனுபவங்கள் கற்றுக் கொடுத்திருந்த பாடம் அவர்களை அவ்விதம் செய்யவைத்தது.

ராதாவுக்கு இப்போதுதான் வயது ஐந்தாகிறது. அவளது இரட்டைச் சடைகளைப் பற்றி முரட்டுத்தனமாய் அவர் இழுக்கக்கூடும். ஏதாவது காரணம்

சொல்லி 'டங்' என்று தலையில் குட்டக்கூடும். இவனுக்கு அப்பொழுதுகளில் அழுகை பொத்துக்கொண்டு வரும். அப்பாவின் முஷ்டி பிடித்த கைகள் செல்லத் தங்கச்சியின் தலையைப் பிய்த்துக்கொண்டு வெளியில் வந்திருக்குமோ என்ற ஏக்கத்துடன் அவளது தலையைக் கூர்ந்து பார்ப்பான்.

"வாடா இஞ்சாலை..."

அப்பாவின் குரல் உறுமும். இவனுக்குப் பயத்தில் நாக்கு அண்ணத்தில் ஒட்டிக்கொள்ளும்.

"மகாராசாவுக்குக் காது கேக்கிறதில்லையோ?"

கால்கள் ஒன்றோடொன்று உரசித் தடக்க, பயத்தோடு நடப்பான். கிட்டப் போனால் உடம்பு ஏதோ ஒரு விதத்தில் உச்ச வேதனைப்படும். அவனது பிஞ்சுக் காதுகளைப் பிடித்து முழுவலிமையுடன் முறுக்குவார் அவர். அவன் வலியில் துடிதுடித்து கதறுகையில் அவரது கண்களில் ஒரு குரூர திருப்தி மின்னி மறையும்.

"உன்னைத்தானே அவள் நம்பியிருக்கிறாளாம்... என்னடா செய்யப் போறாய் அவளுக்கு? "

அப்பாவுக்குப் பொறாமையாக இருக்கவேண்டும். ஆண்கள் எவரும் அம்மாவுடன் கதைப்பது அவருக்குப் பிடிக்காது. அது மகனாகவே இருந்தாலும் கூட. அவனது மென்மையான வயிற்றின் அடிப்பகுதியில் அவர் அழுத்திக் கிள்ளியதாலான பல தழும்புகள் உண்டு. அவனது சின்னஞ் சிறிய குழந்தை உலகம் பெரும்பாலும் வேதனைகளாலேயே நிரம்பியிருந்தது. துன்பங்களை ஏற்கப் பழகுவதே அவற்றை வெல்வதற்கான முதற்படி என்று அம்மா சொல்லுவாள். குழந்தையிலிருந்தே துன்பங்களை அனுபவித்திருந்ததில் அவற்றை அலறியடித்துக் கூக்குரலிடாது மௌனமாய் பொறுத்துக்கொள்ளும் பக்குவம் அவனுக்கு வந்து விட்டிருந்தது.

அப்பா ஊருக்கு உத்தமனாகவே இருந்தார். அவர் அன்பான வார்த்தைகளையே பேசுபவரென்றும் இரக்க மனங்கொண்டவர் என்றும்தான் ஊர் அவரை அறியும். பொதுப் பணிகள் யாவிலும் அவர் பெயர் இருக்கும். அப்பாவைப் பார்க்க இவனுக்கு கறுப்புப் பூனை ஞாபகத்திற்கு வரும். அதன் கண்கள் பச்சையாக மின்னும். ஒருவிதக் கொடூரம் உறைந்த கண்கள் அவை. ஒருநாள், மென் குரலில் கீச்சிட்டுக்கொண்டிருந்த கோழிக் குஞ்சுகளை அவற்றின் கூட்டினுள் புகுந்து கொன்று இறகுகளைப் பிய்த்துண்டுவிட்டு மறுநாள் ஏதுமறியாத அப்பாவித்தனமாய் முகத்தை வைத்துக்கொண்டிருந்தது. பிறகு ஒருநாள் இவன் அன்போடு வளர்த்த சின்னஞ்சிறு பூனைக் குட்டியைக் கடித்துக் குதறியிருந்தது. இவனுக்கு அதிசயமாக இருக்கும். எந்தக் கொடுமையைச் செய்தாலும்

நிதானமிழக்காது குற்றவுணர்வு சிறிதுமின்றி எப்படி உலவித் திரிய முடிகிறது அதற்கு? அப்பாவுங்கூட அப்படித்தான்.

"டியேய்..."

மீண்டும் அப்பாவின் கீழ்க்குரல் கர்ச்சித்தது. இவன் உடல் முழுவதும் பயச் சிலிர்ப்பு ஓடிற்று. தம்பியின் தொட்டிலறைக்கு ஓடினான். திருதிருவென விழித்தபடி அறைக்குள் பதுங்கும் தங்கையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தொட்டிலுள் தம்பி நிர்ச்சலனமாகத் தூங்கிக்கொண்டிருந்தான். சிறு சத்தத்துக்கும் அருண்டு எழுந்துவிழுவான். அம்மா அணைத்துப் பாலூட்டிப் படுக்கவைக்க வேண்டும். அப்பா வந்த பிறகு அவருக்குச் சேவகம் செய்வதொன்றே அவளது தொழிலாக இருக்கவேண்டும். அம்மா முன்பே சொல்லி வைத்திருக்கிறாள். பிரச்சனை எழும்பும்பொழுதுகளில் தம்பியைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வீட்டின் பின்னாலுள்ள வாழைத் தோட்டத்துக்குப் போய்விடுவது அவன் வழக்கம். அப்பா வீட்டில் இல்லாத பொழுதுகளில் தம்பியைத் தோளில் போட்டு உலாவியபடி மெல்லிய குரலில் பாட முடியும். அல்லது தம்பிக்காக அம்மா பாடும் தாலாட்டை விழிகள் மூடி ரசிக்க முடியும்.

அவன் அவசர அவசரமாய்த் தம்பியைத் தூக்கி வெளிப்புறமாய் நடந்தபோது அம்மாவின் குரல் அமுங்கிக் கேட்டது.

"ஐயோ... விடுங்கோப்பா..."

அம்மாவின் நீண்ட கூந்தலைப் பற்றி அவர் இழுத்திருக்கக்கூடும். வேதனைகளை மௌனமாகத் தாங்கிக்கொள்வதில் அம்மாவுக்கு நிகர் அம்மாதான். கௌரவமாக வாழ்ந்த குடும்பத் தளிர் அவள். அந்தப் பண்பு அவளில் ஊறிக் கிடந்தது. ஒப்பாரி வைத்து ஊர் கூட்டும் ரகமல்ல அவள். அனைத்தும் தன் விதியே என நொந்துகொண்டு தினசரிக் கடமைகளைச் செய்துகொண்டிருப்பவள் அவள்.

தொடர்ந்து வழமையான காட்சி ஆரம்பமானது. இன்றுங் குடித்திருக்க வேண்டும். குடித்திருந்தாலும்கூட எதையும் 'அமர்த்தலாகச்' செய்யும் நிதானம் அவருக்குள் இருக்கும். உள்ளறைப் பக்கம் வந்த பிறகுதான் அம்மாவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். அம்மா மடங்கி அமர்ந்தாள். அந்த அறைக்கு எந்தப் பெண்ணாலும் நின்றுகொண்டிருக்கமுடியாது. இவனுக்குக் கண்ணீர் பொங்கிற்று. வெடித்த அழுகையை உதடு கடித்து அடக்கினான்.

பிறகு கொஞ்ச நேரம் அம்மாவின் விசும்பல் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. நல்லவேளை இவனில் இன்று அவரது கவனம் திரும்பவில்லை. கண்ணீர் வழிய

வழிய வாழைத் தோட்டத்தில் குறுக்கும் மறுக்குமாக நடந்தான் அவன். இன்னும் சிறிது நேரத்தில் அப்பா அடங்கி விடுவார் என்று அவனுக்குத் தெரியும். அதுவரைக்கும் தங்கையும் வெளிப்பட மாட்டாள். சில பொழுதுகளில் அப்பாவின் அறைக்குள்ளிருந்து வெளிப்படும் அம்மா முகஞ் சிவந்திருக்க வெளியேறி இவனது கண்களைச் சந்திக்கத் திராணியற்றுத் தலை குனிந்து நடப்பாள். பின்னர் மடங்கி அமர்ந்து முழங்கால்களுள் முகம் புதைத்துக் குமுறி அழுவாள். இப்போதும் அழுதாள். பின் தன்னைத்தான் தேற்றியவள்போல ராதாவையும் அவனையும் அழைத்து உணவு கொடுத்தாள்.

"எப்ப... விடியுமோ?..."

வெளியே இருள் அடர்ந்திருந்த பொழுதில் அவள் தன்னையறியாது முணுமுணுத்த கேள்வி. ராதா அப்பாவித்தனமாய் சொன்னது.

"நேற்று... இல்லை இல்லை... நாளைக்கு..."

"ம்... கொஞ்சப் பேருக்கு நேற்று... கொஞ்சப் பேருக்கு நாளைக்கு..."

அதில் பொதிந்த அர்த்தம் விளங்காது சொன்னதை அழுத்திச் சொன்னது குழந்தை.

"நாளைக்கு விடியும்....." வழமையாகப் பிரச்சினை தரும் இறப்பிலும் எதிர்விலும் தெளிந்த திருப்தி குழந்தைக்கு.

"ம்..... விடியத்தானே வேணும்....."

குரலிலிருந்த கனதியும் இழுவையும் அப் பதில்கூடச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பதான பிரேமையை அவளுள் ஏற்படுத்தியது. அச் சங்கிலி அரையும் ஓசையை பெண்பிள்ளையாய்ப் பிறந்ததிலிருந்தே தான் கேட்டு வருவதாகத் தோன்றிற்று அவளுக்கு, வீடு தவிர்க்க முடியாத அமைதியில் புதைந்திருந்தது. அவன் குப்புறப்படுத்து கண்ணீர் வழியத் தூங்கிப்போனான். ஒவ்வொரு ஆணும் தன் துணையின், சகோதரியின், தாயின் துன்பங்களை உணர்ந்துகொண்டால் உலகம் எத்தனை உயிர்ப்பான சந்தோஷம் கொண்டிருக்கும் என்றெண்ணி ஏங்கினாள் அவள். தன் மகனை அவ்விதம் வளர்த்து வருவதையிட்ட திருப்தி அவள் அகத்தில் சுடர்ந்தது. குழந்தைகள் தூங்கிய பின்னரும் நெடுநேரமாக அவள் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகிற்று. துடைக்கப்படாத அந்தக் கண்ணீரை காற்று உலர்த்திற்று.

* * * *

இவர்களின் வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் இருந்த சந்தியில்தான் அந்த விபத்து நிகழ்ந்தது. கூடியிருந்தோர் பரிதாபத்துக்கு நடுவில் 'அவர்' அதுவாகி இருந்தார்.

"கொஞ்ச வயதுதான் போலை......."
"பாவம்..... குடுத்து வைச்சது அவ்வளாந்தான்........"

பெரிய கூட்டம் திரண்டிருந்தது. என்ன, எப்படி, யார், கேள்விகள் தாராளமாய். பொறுப்பு எடுக்கத் தயங்கினார்கள். ஒருவழியாக, ஆஸ்பத்திரி போய் வீடு வந்தது 'அது.'

மெல்லிருட்டுப் பொழுதில் அப்பாவின் "டியேய்......" எனும் அடித் தொண்டைக் குரலுக்காகக் காதைக் கூர்மையாக்கி இருந்தவர்கள் கூட்டமாக வந்திருந்தவர்களைக் கண்டு விக்கித்தார்கள். வெண்துணியால் போர்த்தி அப்பாவைக் கொண்டுவந்தார்கள். வீட்டின் மையத்தில் அவரை வாங்கு போட்டுப் படுத்தினார்கள். அம்மா அதிர்ச்சியில் உறைந்திருந்தாள். தளர்ந்த குரல்களின் ஒப்பாரியில் அவள் முழுவதுமாக உடைந்திருக்கவேண்டும். இவ்வளவு காலமும் உரத்து அழ விதிக்கப்பட்ட தடை நீங்கியிருப்பது போல அம்மா அழுதாள். அவளது நெற்றிக் குங்குமம் கரைந்து அழிந்திருந்தது. இமையோரம் கீற்றாய் கிடக்கிற தழும்புகூட அப்பாவின் உபயம்தான். ஒருநாள் அப்பாவின் "டியேய்" க்கு பதில் தரப் பிந்தியதில் அம்மாவின் தலையை நிலைப்படியில் மோதினார் அப்பா. இமையோரம் வெடித்துக் 'குபுக்' என ரத்தம் குமிழ்ந்தது. மறுநாள் யாரோ கேட்டபோது திடீரெனத் தம்பி அழக் கேட்டு ஓடியதில் நிலைப்படியில் மோதிக்கொண்டதாகச் சொன்னாள் அம்மா. எந்த ஒரு பொழுதிலும் அப்பாவைக் காட்டிக் கொடுத்ததில்லை அவள்.

சின்னத் தங்கச்சி இப்போதும் அறைக்குள் பதுங்கிக்கொண்டிருந்தாள். அவளுக்கு அப்பா இனிமேல் எழுந்து சடையைப் பிடித்திழுத்துக் குட்டமாட்டார் என்று சொன்னால் எழுந்து வருவாள் என அவன் நினைத்தான். அம்மாவின் அருகே முந்தானையைப் பிடித்தபடி அவனிருந்த காட்சியின் கொடுமைக்குப் பலர் அழுதார்கள். வெறும் ஆறு வயது.

"இந்தச் சின்னப் பொடியனிட்ட பொறுப்பை விட்டிட்டுப் போக எப்படி மனம் வந்தது?"

அம்மாவின் நாடி தொட்டு ஈஸ்வரி மாமி கேட்க அம்மாவின் அழுகை கூடிற்று.

விடியும் பொழுதில் கிரியைகள் ஆரம்பமாகிவிட்டன. அந்தணர் சொற்படி சகலமும் செய்தான். அருகில் அம்மா கண்ணீர் வடிய அமர்ந்திருந்தாள். அவள் முகம் சிந்தனை மிகுந்து துயரமாக இருந்தது. பெட்டி மூடினார்கள். அம்மா அசைவற்று நின்றாள். மூடிய பெட்டியை உற்றுப் பார்த்தாள். நிதானமாக இவனைப்

பார்த்தாள். பிறகு இரு கன்னங்களிலும் வழிந்திருந்த கண்ணீரை அழுந்தத் துடைத்தாள். இச் செய்கையால் இதுவரை அவள் பேசியிராத பல செய்திகளைப் பேசிவிட்டதாக அவள் உணர்ந்தாள்.

மயானம் நோக்கி நடந்தார்கள். நீர்க்குடம் சுமந்து அவன் நடந்தான்.

"என்ன கொடுமையப்பா...."

ஊர் பரிதாபப்பட்டது. அப்பாவின் பிரேதப் பெட்டியைச் சூழப் பல வர்ணக் கடதாசிப் பூக்கள் தொங்கியாடின. வாசமன்றிப் பூக்கள். இந்தப் பொய்ப் பூக்கள் போலத்தான் அப்பாவும் இருந்தாரோ?

அன்பு நிறைந்தவர் அப்பா

அறிவு நிறைந்தவர் அப்பா.

என்று அவனது புத்தகத்தில் போட்டிருந்தது. இதனால் புத்தகங்கள் சில பொழுதில் பொய் சொல்லும் என்ற முடிவுக்கு அவன் வரவேண்டியிருந்தது. ஆனால் அப்பா பூனை அல்லவோ? பூனை, எப்படிப் பூ ஆகும். அவன் சிந்தனைவசப்பட்டு மௌனமாக நடந்தான். காதைச் செவிடுபடுத்தும் பறை தொடர்ந்து முழங்கிக்கொண்டிருந்தது.

சாம்பல் திட்டுக்களோடு பயங்கரமாய்க் காட்சியளித்தது மயானம். அங்கிருந்த ஆலமரத்தில் சில பொட்டலங்களைத் தொங்கவிட்டிருந்தார்கள். அவை பற்றி அறியும் ஆர்வம் அவனுள் கிளர்ந்தது. அம்மாவிடம் கேட்டுப் பார்க்க வேண்டும். அவனது கேள்விகளுக்குப் பதில் சொல்வதில் அவள் எப்போதும் சலித்ததில்லை.

சிதை அடுக்கினார்கள். அப்பாவைப் படுக்க வைத்தார்கள். அனைவர் முகத்திலும் கவலை அப்பிக்கிடந்தது. விறகு அடுக்கியவர்கள் கூலிக்காகச் சச்சரவுப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் குடித்திருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. அப்பா வீட்டுப் படியில் ஏறும்போது அடிக்கின்ற 'ஒருவித' நாற்றத்தை அவனால் உணரமுடிந்தது.

"ஒரு வேளை அப்பாவிலிருந்துதான் அந்த 'வீச்சம்' அடிக்கிறதோ......?"

அவன் மனதில் சந்தேகக் கீற்று ஒன்று சடுதியாய்ப் படர்ந்து அழிந்தது.

முதியவர் ஒருவர் "இனி வைக்கலாம்" என்றார்.

"கடைசியாய் அப்பாவைப் பார்த்துக் கொள்ளடா......" தழுதழுத்த குரலில் அவர் சொன்னார். அவன் பார்த்தான். அவனது காது திருகும் விரல்கள் ஓய்ந்து கிடந்தன. குரூரம் மின்னும் கண்கள் நல்ல வேளையாக மூடிக் கிடந்தன.

அவன் தலையில் கொள்ளிக் குடம் சுமந்து நடந்தான்.

"தெய்வமாப் போன அப்பாவை நினைச்சபடி சுத்தி வரவேணும்." அப்பா சுவாமி ஆகிவிட்டாரா? சுவாமி அன்பே உருவமானவர் அல்லவா? அப்பாவும் அன்பே உருவமாகிவிட்டாரா? மெதுவாக நடந்தான் அவன். உடைக்கப்பட்ட கொள்ளிக் குடத்திலிருந்து நீர் ஒழுகிற்று. உடல் சிலிர்த்தது.

"நல்ல மனுஷனப்பா.... வேளைக்குப் போயிட்டுது....."

"என்ன கொஞ்சம் குடிப்பழக்கம் கிடந்ததாக்கும். சிலநேரம் வீட்டில இரைஞ்சு கேட்கும்......."

"பாவம் ஊருக்குழைச்ச மனுஷன்..... அதிர்ந்து பேசத் தெரியாது....."

ஊர் அப்படித்தான் பலதும் கதைக்கும். அம்மா அப்படித்தான் சொன்னாள்.

ஊர் வாயில் வீட்டு விஷயங்கள் 'அவலாகி' விடாமல் காத்துக் கொள்ள வேண்டும் என்பாள். அவ்விதமே அம்மா வாழ்ந்துவிட்டதாக இவனுக்குத் தோன்றிற்று.

மூன்று முறை சுற்றி வந்தான். குடத்து நீர் ஒழுகி முடிந்திருந்தது. யாரோ கொள்ளியிடத் தீக்கங்கு கொடுத்தார்கள்.

"வை தம்பி "

வாங்கிச் சிதைக்குத் தீ மூட்டினான். கொள்ளியிட்ட சிதையைத் திரும்பிப் பார்க்கக்கூடாது. திரும்பிப் பாராமல் நடந்தான்.

"உரமான பொடியன்தான். ஒரு துளி கண்ணீர் இல்லை."

யாருடையதோ வார்த்தைகள் அவன் பின்னால் எழுந்தன.

"பிஞ்சுப் பொடியன் அதிர்ச்சியில ஏங்கிட்டுதுபோலை...." வேறு யாரோ இரங்கினார்கள். இவன் மனதில் ஒரு கணம் சொல்லொணாத் திருப்தி படர்ந்தது. மறுகணமே குங்குமம் கரைந்தழிய அழும் அம்மா நினைவில் எழுந்தாள். ஏனோ அவள் கண்ணீரை அழுந்தத் துடைத்த காட்சி மனதில் வந்தது.

"உன்னைத்தான் நம்பியிருக்கிறன் குஞ்சு......"

அம்மா அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் இவன் காதில் ஒலிப்பதுபோல் உணர்ந்தான். திடீரென வெடித்துச் சிதறிய உரத்த அழுகையோடு வீடு நோக்கி ஓடும் அவனை ஊர் இரக்கம் நிறைந்த புதிராய் நோக்கிக் கொண்டிருந்தது. பெண் துன்பம் உணரத்தக்க அந்தச் சின்ன ஆண்மகன் காலிடறும் தடைகளைப் பொருட்படுத்தாது மிக வேகமாய் ஓடிக்கொண்டிருந்தான்.



# அவளுக்கென்றொரு விதி

சி.ஜீவரஞ்சினி.

**வை**கறைப் பொழுது. பக்கத்துத் தெருப் பிள்ளையார் கோயில் மணி "டாங்..... டாங்...." என்று ஒலித்ததுதான் தாமதம் அம்மாவின் குரல் "அமுதா.... பிள்ளை அமுதா...." என்று உரத்து ஒலித்தது. அமுதாவுக்குக் கோயில் மணி அடிப்பதற்கு முன்பே விழிப்பு வந்துவிட்டது. எனினும் உடம்பு அலுப்பு அவளை எழும்ப விடவில்லை. "கடவுளே.... இனி எழும்பிப் படுக்கைக்குப் போகும்வரைக்கும் பம்பரம்தான்.... இந்த இரவு என்ற ஒன்றை இறைவன் படைக்காதுவிட்டிருந்தால், என்னைப்போல சீவன்களுக்கு ஏது ஆறுதல்......" என்று பெருமூச்சு விட்டு எழுந்து போர்வையை மடித்துப் பாயைச் சுருட்டினாள்.

பொழுது மெல்ல மெல்லப் புலர்ந்துகொண்டிருந்தது. அமுதா காலைக் கடன்களை முடித்துவிட்டுத் தம்பி மயூரனை எழுப்பத் தொடங்கினாள். "என்னக்கா.....

சும்மா கொஞ்ச நேரம் படுக்க விடுங்கோ..... நித்திரை வருகுது எனக்கு” என்ற தம்பியின் சிணுங்கலைப் பொருட்படுத்தாது அவனை எழுப்பி இருத்தினாள். “பாவம்.... இராத்திரி கனநேரம் இருந்து படித்தவன். நேரத்தோடு எழும்ப இயலாமல்தான் இருக்கும். என்ன செய்வது. கஸ்டப்பட்டுப் படித்தால் தானே நல்ல பயன் கிடைக்கும்.....” என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டாள். மூத்த தம்பி அகிலனும் இப்படித்தான் சிணுங்குவான். இவனை விட அவன் எத்தனையோ மடங்கு கெட்டிக்காரன். அவன் குடும்பத்தின் இலட்சியத்தை பெரிதாக மதித்தான்தான். எனினும் காலத்தின் கட்டளை அவனை வேறோர் இலட்சியத்துக்கு இட்டுச்சென்றது. “என்ன விடிந்ததும் விடியாததுமாக இப்படிச் சிந்தனை ஓடுகிறதே.....” என்று தனது சிந்தனையோட்டத்தை மட்டுப்படுத்தி வேலைகளில் மனதை ஈடுபடுத்தினாள் அமுதா.

இந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரைக்கும் அமுதா ஓர் உழைக்கும் இயந்திரம். அவளது சிறுவயதில் தந்தை காலமாகிவிட்டார். தாயின் அயராத உழைப்பும் கெட்டித்தனமும் குடும்ப வண்டியை ஏதோ இழுத்துச் சென்றது. மூத்தவள் அமுதா. அமுதாவுக்கு நேர் இளையவள் நந்தினி. அவளுக்கு அடுத்தது அகிலன், மயூரன். அமுதா தாயின் நிலமை தெரிந்து படிப்பில் கவனம் செலுத்தி க.பொ.த.உயர்தரம் வரைக்கும் கற்றாள். அமுதாவைப் பின்பற்றிச் சகோதரர்களும் படிக்கத் தொடங்கினர். அமுதாவிற்கு மேற்படிப்பு எதையும் தொடர வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஏதாவது வேலை கிடைப்பதே போதுமானதாக இருந்தது அவளுக்கு. எழுது வினைஞர் பதவிக்கான போட்டிப் பரீட்சை ஒன்றில் சித்தி பெற்று மாவட்டச் செயலகத்தில் எழுதுவினைஞர் சேவையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறாள். அவளே இக் குடும்பத்தின் ஆணிவேர். தாய்க்கு மன வருத்தங்கள் அதிகமானபடியால் உடல் வருத்தங்கள் பலவற்றைத் தன்னோடு சேர்த்து வைத்திருந்தாள். தங்கை நந்தினி கொடுத்து வைத்தவள். அவளுக்கு நல்ல தலைவிதி. சொந்த மச்சான் சிவாவை மணஞ்செய்து இப்பொழுது திருகோணமலையில் இருக்கிறாள். எப்போதாவது இவர்களின் நினைவு வரும் போது ஒரு துண்டுக் கடிதம் வரும், அவ்வளவுதான். தம்பி அகிலன் ஒரு போராளி. அவன் இங்கிருந்தால் அமுதாவுக்கு எவ்வளவு ஆறுதலாக இருப்பான். தம்பி என்றால் தம்பிதான். அவ்வளவு பிரியம் அவன்மீது அமுதாவுக்கு. அவனுக்கும் அவ்வளவு அன்பும் இரக்கமும் அக்கா அமுதாமீது. இளையவன் மயூரன் க.பொ.த. உயர்தரம் கணிதப் பிரிவில் கற்றுக்கொண்டிருக்கிறான்.

தாய்க்குக் கணிசமான வேலைகளைச் செய்துவிட்டுத்தான் அலுவலகம் புறப்படுவாள் அமுதா. தாய் வீணாக வருத்தத்தைத் தேடக்கூடாதே என்பதற்காக ஒவ்வொரு நாளும் படபடப்பும் பரபரப்பும்தான் அவளுக்கு. ஒருவாறு வேலைகளை முடித்து, குளித்து சாப்பாடு சிறிதை ஒரு பெட்டிக்குள் போட்டுக்கொண்டு நான்கு மைல் தொலைவில் இருக்கும் அலுவலகத்துக்குப் போக, களைத்து வியர்வையால் மீண்டும் குளித்துவிடுவாள் அவள்.

இன்றும் அவ்வாறே படபடப்புடன் காரியத்தை முடித்துக்கொண்டு அலுவலகத்துக்குப் புறப்பட ஆயத்தமானாள். முற்றத்து வேப்ப மரத்தில் இருந்த காகம் ஒன்று இடைவிடாது நீண்ட நேரம் கத்திக்கொண்டிருந்தது. "தம்பி அகிலன் வாறன் எண்டு சொன்னவன்.... அதுதான் கரையுதுபோல எப்ப வருவானோ தெரியாது?" என்று திடீரென்று தம்பியின் ஞாபகம் அவளுக்கு.

"அக்கா இப்ப பனம்பழ சீசன்தானே.... நான் அடுத்த மாதம் வருவன்.... அப்ப பனங்காய்ப் பணியாரம் சுட்டுத் தாங்கோ என்ன....."

தம்பி கேட்டது இன்னும் காதில் ஒலித்தது...."வேலையால வந்து இண்டைக்குப் பனம்பழம் பொறுக்க வேணும். தம்பி வந்தாலும் வருவான்..." என்ற அவளது சிந்தனைக்கு அம்மாவின் குரல் தடைபோட்டது. "பிள்ளை..... சும்மா அது இருந்து கா..... கா.... எண்டுது. அதை ஒருக்காக் கலை மோனை....." "ஓம் அம்மா கலைக்கிறன் பொறுங்கோ" செருப்பைப் போட்டுக்கொண்டு காகத்தைக் கலைத்துவிட்டு, சைக்கிளை எடுத்தவளுக்கு காலிலே ஏதோ ஒன்று இடறியது. "என்ன.... இண்டைக்கு இடறுது.... கவனமாய் போகவேணும். எங்கேயும் விழுந்து எழும்ப வேண்டி வரும்......" என்று நினைத்துக்கொண்டு வேகமாக மிதிக்கத் தொடங்கினாள்.

அவளது அலுவலகம் செல்ல அரைமணி நேரமாவது வேண்டும். அவளுக்கு ஏதேதோ சிந்தனைகள் எல்லாம் அதற்கிடையில் ஓடி மறைந்துவிடும். இன்று ஏனோ அவளுக்கு தம்பி அகிலனின் ஞாபகங்கள் மனக்கண்ணில் வந்து வந்து போனது. பாவம் அகிலன் போனமுறை வந்தபோது பயந்து பயந்து ஒரு சேட்டும் ஜீன்சும் வாங்கித் தருமாறு கேட்டான். எனினும் அப்போதைய நிலமை அதற்கு வாய்ப்பாக அமையவில்லை. அவன் போன பின்பு எத்தனையோ நாட்கள் அதனை நினைத்து அழுதிருக்கிறாள் அவள். என்ன நினைத்தானோ? இந்த முறை நல்ல ஜீன்சும் சேட்டும் எப்படி என்றாலும் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று வழி முழுவதும் நினைத்துக்கொண்டே சென்றாள்.

அகிலனுக்குத் தமக்கையின் துயரம் நன்கு விளங்கும். அவளும் சராசரிப் பெண்தானே. நந்தினி மணம் முடித்து இரண்டு பிள்ளைகளுக்கும் தாயானபோதும், அக்கா அமுதா எந்த விதமான உணர்வுகளையும் வெளிப்படுத்தாது தான் உண்டு தன் வேலையுண்டு என்று இருப்பது அவனுக்கு மிகுந்த மன வேதனையைத் தந்தது. அவளுக்கு ஏற்ற வரன் தேடிக் கண்டு பிடித்துச் செய்ய யாரால் முடியும்? அப்படிக் கண்டுபிடித்தாலும் பத்துப் பன்னிரண்டு லட்சம் என்று கொடுக்க யார் முன்வருவார்கள்? அவனுக்கு எப்பொழுதும் தமக்கையின் யோசனை இருந்துகொண்டே இருந்தது.



ஒருநாள் தனது கவலையை அக்கா அமுதாவுடனேயே பகிர்ந்து கொண்டான். "எங்கட நாட்டில ஏன்தான் இந்தக் கொடுமையோ? இப்பிடிக் குடுத்துப் பழுதாக்கினால் ஏழையள் என்னெண்டு வாழுறது..... என்னண்டு இந்தச் சமூகத்தைத் திருத்திறது....?" என்று சலித்துக்கொண்டான். "ஏன் தம்பி சீதனம் இல்லாமலும் கலியாணம் செய்யினம் தானே....." "எப்படியக்கா இந்தக் காலத்தில ஒருத்தனும் முன் வருகிறான் இல்லையே......" "ம்..... லவ் பண்ணினால் பிரச்சனை இல்லத்தானே.... தம்பி...." தமக்கையின் இக்கூற்று எதையோ அவனுக்கு உணர்த்தியது. அகிலன் தன்னை ஒருமாதிரிப் பார்ப்பதை உணர்ந்துகொண்ட அமுதா, தனக்கும் தனது அலுவலகத்தில் வேலை செய்யும் கருணாகரனுக்கும் சிநேகிதம் இருப்பதை மெதுவாகச் சொல்லி வைத்தாள். அதைக் கேட்டதும் தம்பி அகிலனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மகிழ்ச்சியைத் தனது முகத்திலே வெளிக்காட்டினான். அக்கா எல்லா விடயங்களிலும் கெட்டிக்காரிதான் என்று அவன் மெச்சிக்கொண்டது இன்னமும் அவளுக்கு வெட்கத்தைக் கொடுத்தது.

கருணாகரன் அவளோடு அலுவலகத்தில் வேலை செய்யும் ஓர் எழுதுவினைஞர். அமுதாவின் கெட்டித்தனம், கனிவு, கருணை, பரோபகாரம் முதலிய பண்புகள் அவனுக்கு அவள்மீது காதலை ஏற்படுத்தியது. கருணாகரனை அமுதா பூரணமாய் நம்பி இருந்தாள். இளைய தம்பி மயூரன் பரீட்சை எடுக்கும்வரைக்கும் இதனைத் தாயிடம் சொல்வதில்லை எனவும் இருந்தாள். அவளுக்குப் பூரண ஒத்துழைப்பைத் தம்பி அகிலன் கொடுத்திருந்தான். "அக்கா நீ பயப்பிடாதே நான் இருக்கிறன்....." என்பான்.

ஏதேதோ சிந்தனைகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக அவளது மனத் திரையில் முட்டி மோதிக்கொண்டிருந்தன. "ஏன்..... இண்டைக்கு இப்படியிருக்கு..... எல்லாம் போட்டுக் குழப்புது....." என்று நினைத்தவளாய் அலுவலத்தை வந்தடைந்து தனது இருக்கையில் அமர்ந்தாள். பிறகென்ன பொழுது போவதே தெரியுமா? அன்றைய வேலைகள் ஒருவாறு முடிவடைய பொழுதும் போய்விட்டது. மாலை ஐந்து மணிக்குமேல் வீடு வந்துசேர்ந்தாள் அமுதா.

முகம் கழுவித் தேநீர் குடித்தாள். சிறிது நேர ஓய்வுக்குப் பின் இரவுச் சமையலில் ஈடுபட்டாள். முடிந்ததும் அன்றைய நாள் பதிவுகளை டயறியைத் திறந்து எழுதத் தொடங்கினாள். நேரமும் எட்டு முப்பதாகியது. வானொலியை மெல்ல முறுக்கினாள். கை மெல்ல நடுங்கியது. "புலிகளின் குரல்.... செய்திகள் வாசிப்பவர் கோகுலன்...." செய்தி ஒலித்துக்கொண்டே இருந்தது. "நேற்றைய தினம் திடீர் சுகவீனம் காரணமாகப் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். கப்டன் இளங்கோ என்று அழைக்கப்படும் கந்தையா அகிலன் என்பவரே சாவடைந்தவராவார். இவருக்குப் புலிகளின் குரல் தனது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது...." என்றதும் அமுதாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது.


சிறிது நேரம் அப்படியே உறைந்துவிட்டாள். "தம்பி... தம்பி... அம்மா எங்கட தம்பீ...." என்று அலறியவள் அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

தம்பியின் காரியங்கள் ஒருவாறு நடந்து முடிந்தன. எல்லாமும் முடிந்துவிட்டன. அமுதாவுக்குத் தம்பி இறந்துவிட்டான் என்று நினைக்க நினைக்க கண்கள் குளமாகின. தம்பி இறந்து இன்றுடன் பதினொரு நாட்களாகி விட்டன. ஒவ்வொரு நாளும் எப்படி வந்து போகிறது என்றே அவளுக்குத் தெரியவில்லை. எதுவுமே அவளுக்கு நினைவுக்கு வர மறுத்தது. பதினொரு நாட்களாகியும் இன்னும் கடமைக்குத் திரும்பவில்லை. அவளுக்கு அங்கு போக மனமே வரவில்லை. "தம்பி ..... நீ ஆசைப்பட்டது ஒன்றுகூடச் செய்யேல்ல பனங்காய்ப் பணியாரம் சுடச் சொன்னாயடா, ஐயோ.... உடுப்புக்கூட எடுத்துத் தரேல்லையடா... அக்கா நான் இருக்கிறன் என்றாயே, நீ எவ்வளவு சண்டைக்குள்ள தப்பி வந்தனீ. தம்பி நாட்டில பிரச்சினை தீர்ந்து போயிட்டுது. இனி உனது உயிருக்கு ஆபத்து வராது என்று எவ்வளவு நம்பிக்கையில இருந்தன். நீ சண்டையில செத்திருக்கலாமடா. உனக்கு என்னப்பு அப்படி ரெண்டு நாளில வருத்தம் வந்தது..." ஏதேதோ சொல்லிப் புலம்பிப் புலம்பிக் கண்ணில் உள்ள நீர் கரையும்மட்டும் அழுது தீர்த்தாள் அமுதா. தாய்க்கும் அவளைவிடப் பன்மடங்கு துன்பம். எனினும் அமுதாவைப்போல வெளிக்காட்டவில்லை. இவளை ஒருவாறு தேற்றி, அடுத்தநாள் அலுவலகத்துக்கு அனுப்பிவைத்தாள்.

தம்பியின் சாவீட்டிற்கு அலுவலகத்தில் இருந்து வந்தவர்களை இப்பொழுது ஏதோ ஞாபகம் வருகிறது அவளுக்கு. கூடவே கருணாகரனும் வந்திருந்தான். எனினும் இவளுக்கருகே இவன் வரவில்லை. அருகே வந்தால் அவள் கவலைப்படுவாள் என்று வராமல் இருந்திருக்கலாம் என்று நினைத்திருந்தாள் அமுதா. இன்றும் ஒரு சிலர் வந்து அவளோடு பேசினார்கள். ஆறுதல் சொன்னார்கள். ஆனால் எவ்வளவோ நேரமாகியும் கருணாகரன் இன்னும் அவளுக்கு அருகில் வரவே இல்லை. அவனது செயல் அவளுக்கு மேலும் மன வேதனையைத் தந்தது. எனினும் பல்லைக் கடித்துக் கண்ணீரை அடக்கிக் கொண்டு வெளிக்காட்டாமல் இருக்க அந்தரப்பட்டுக்கொண்டிருந்தாள்.

அமுதா படும் துன்பத்தைப் பார்க்க அவளது அலுவலகத் தோழி வசந்திக்குப் பொறுக்கவில்லை. தனது கதிரையை விட்டு எழுந்து அவள் அருகே வந்தாள். "வா அமுதா ...... ரீ குடிப்பம்......" என்று கஷ்டப்பட்டு அவளைச் சிற்றுண்டிச்சாலைப் பக்கம் இழுத்துக்கொண்டு போனாள். "அமுதா...." என்று ஆதரவாக அவளது கையைப் பற்றிக்கொண்டாள் வசந்தி. "இந்த ஆம்பிளையளே இப்பிடித்தான்....." மெதுவாகத் தொடங்கி ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள். "கருணாகரனுக்கு வாற மாதம் பத்தாம் திகதி வெடிங்காம்.... பொம்பிளை அவருடைய சொந்தக்காரப் பிள்ளையாம்...... சீதனம்.... பதினைந்து லட்சம்,

வீடுவளவு, நகை நட்டு அது இது எண்டு எத்தனையோ..." வசந்தி இழுத்து இழுத்துச் சொன்ன தகவல்களைக் கேட்ட அமுதா அப்படியே ஆடிப்போய்விட்டாள். கருணாகரன் எவ்வளவு ஆறுதலாக இருப்பான் என்று இருந்தாள். தம்பியின் இழப்பினால் நிர்க்கதியாய் நிற்கும் அவளுக்கு அவன் செய்த கைமாறு எத்தனை அற்புதம். பத்து நாட்களில் இப்படியும் ஒரு மனமாற்றம் வருமா? "உனக்குக் கோழை மனம் என்றால்.... என் வழியில் குறுக்கிடாமல் இருந்திருக்கலாமே" என நா கேட்கத் துடித்தது. ஆனால் கேட்கவில்லை அவள். அவன் முகத்தைக் காணவும் விரும்பவில்லை அவள். கண்களை இறுக மூடிக்கொண்டாள். மூடிய கண்ணுக்குள் தம்பி அகிலன் நின்றான். கண்ணின் ஓரம் கண்ணீர் கசிந்துகொண்டிருந்தது. இத்தகைய ஏமாற்றுக்காரனோடு வாழ்வதைவிடத் தன் குடும்பத்துக்காக இன்னும் எவ்வளவோ நல்லவற்றைச் செய்யத் தன்னைத் தயாராக்கிக்கொண்டாள்.



# சொன்னால்தான் புரியுமா....

– சந்திரா அற்புதலிங்கம் –

இராணுவ நடவடிக்கைகளின் அகோரப் பிடிகளில் சிக்கித் திணறிக்கொண்டிருந்த கிளிநொச்சியைக் கண்டிருந்த கண்களுக்கு இன்றைய கிளிநொச்சி நிச்சயமாக விஷேசம்தான். அதிலும் ஏ.9 பாதை திறந்து ஒரு கிழமைதான் ஆகிறது. தெருவைக் கடக்க முற்பட்ட பழனி ஒரு போராளியை இரண்டு மூன்று பத்திரிகையாளர்கள் சூழ்ந்துகொள்வதைக் கவனித்துவிட்டான். மோட்டார் சைக்கிளின்மேல் கம்பீரமாக இருந்தாள் அவள். பார்த்த முகம் போலத் தெரிய அருகாமையில் நின்றுகொண்டான்.

பத்திரிகையாளர்களில் ஒருவன் புகைப்படக் கருவியை எடுத்த போது ஒரு கையமர்வில் தடுத்தாள். வழக்கமான இரண்டு மூன்று கேள்விகள்.... ஒற்றை



வார்த்தைகளில் பதில்..... பார்க்க நன்றாகத்தான் இருந்தது.

அப்போது அந்தக் கேள்வி!

“இந்தமாதிரி ஒரு போராளி ஆயிட்டமே இதால நாம எத்தனை விசயங்களையெல்லாம் இழந்துட்டோம்னு வருத்தப்பட்டதில்லையா...? தனிப்பட்ட சுகங்கள் மிஸ் ஆயிடுச்சேன்னு ஏங்கினதில்லையா.....?”

உதடுகள் மடிய கண்கள் சுருங்க ஒரு புழுவைப் பார்ப்பதுபோல அவர்களைப் பார்த்தாள் அவள்.

“எங்களைப் பொறுத்தவரையில இந்த மண்தான் எங்கட தனிப்பட்ட சந்தோஷம். அது உங்களுக்கு விளங்காது”

சொன்ன கையோடு மோட்டார் சைக்கிளைப் பின்னுக்கு எடுத்து லாவகமாகத் திருப்பிப் பறந்துவிட்டாள்.

பழனி திகைத்து நின்றான்.

“அட ஒருத்தராச்சும் பிடி கொடுக்க மாட்டேங்கிறாங்க. என்ன ஸ்டைலாப் போறா அந்தப் பொண்ணு. ஒரு படமாச்சும் புடிச்சிருந்தா...” அங்கலாய்த்துக்கொண்டே நகர்ந்தார்கள் அந்த இந்தியப் பத்திரிகையாளர்கள்.

பழனி தன் வாகனத்தில் ஏறியபோது பொறி தட்டியது. “அட அது விழி! தமிழவன்ர விழி!” உள்ளத்தில் பல எண்ணங்கள் புரண்டன.

எத்தனை போராளிகள்! அவர்களுக்குள் எத்தனை எத்தனை கதைகள்! பெருமூச்செறிந்தான்.

வாகனம் ஏ.9 நெடுஞ்சாலையில் வேகமெடுத்தபோது அவன் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

1999ம் ஆண்டு ஜெயசிக்குறு நடடிவக்கையின் உச்சக்கட்ட காலப்பகுதி. பழனி வேவுப் பொறுப்பாளராக இருந்தான். அவனோடு சில வேவு வீரர்களில் ஒருவனாக தமிழவன்.....

வேவு வீரர்களின் வாழ்க்கை சிக்கலானது. எதிரியின் குகைக்குள் நுழைந்தால் திரும்பி வரும்வரைக்கும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

ஏராளம். தவிர கல்லும் முள்ளும் சேறும் சகதியும் அவர்கள் உடலைப் பதம் பார்க்கும். ஆனாலும் பேச்சடக்கி மூச்சடக்கிக் காத்திருந்து, சாவை ஒவ்வொரு கணமும் தொட்டிருந்து மீளும் அவர்கள் கையில்தான் எல்லாமே இருந்தது.

அன்றும் விடிகாலைக்குச் சற்று முன்னதாக உள்ளிருந்து வந்த தமிழவன் தந்த தகவல்களைத் தொகுத்துக்கொண்டிருந்தபோதுதான் நிலவன் என்று ஒரு போராளி அவனைச் சந்திக்க வந்தான்.

தனியாகப் பேசவேண்டும் என்ற அவனது வேண்டுகோளின் பேரில் தள்ளிப் போய்ப் பெரிய மரமொன்றின் அடியில் அமர்ந்தார்கள்.

"அண்ண.... இது ஒரு சிக்கலான விசயம். ஒரு பிள்ள சம்மந்தப்பட்டது! நீங்கள் கவனமாகக் கையாளுவியள் என்றுதான் உங்களிட்டை வந்திருக்கிறன்." வந்திருப்பவனை நன்றாகப் பார்த்தான் பழனி. "அந்தப் பிள்ளையோட பேர் விழி. ராகம் என்ற பேரில கதைகள், கட்டுரை எதும் நீங்கள் படிச்சிருந்தா.... அது அவதான்." தொடர்ந்து கூறி நிறுத்தினான் நிலவன்.

பழனிக்குள் குழப்பம். ராகத்தின் ஆக்கங்கள் படித்திருக்கின்றான். ஆனால்... நிலவன் தொடர்ந்தான். "உண்மையிலே நான் அவளைப்பற்றி.... தமிழவன் உங்களோட இருக்கிறார். அவரோடதான் கதைக்க வேணும்...."

"யோசிச்சுக் கதையுங்கோ. தமிழவனைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும்." இடை மறித்து எச்சரித்தது பழனியின் குரல்.

"சீச்சீ அப்பிடி ஒரு பிரச்சினையுமில்ல. நான் சுருக்கமா விசயத்தைச் சொல்லுறன். விழி என்ற போராளி பத்து வருஷமா தமிழவனுடைய மனசில தான் இருக்கிறேனா என்றதை அறியவேணும் என்கிற, எப்படிச் சொல்லுறது...... ஏதோ ஒரு உள்மன எதிர்பார்ப்பில இருக்கிறா."

"என்ன" பழனி அதிர்ந்தான். மனதில கிளர்ச்சி. "ஓம் தமிழவன் இயக்கத்துக்கு வர முன்னம் தங்களுக்குள்ள ஏதோ ஒரு பிணைப்பு இருந்ததா இப்பவும் நினைக்கிறா" தயங்கித் தொடர்ந்தான். "ஓமண்ண இந்த விசயத்தை நீங்க ரகசியமாக, அதே நேரம் முறையாகக் கையாளுவியள் என்ற நம்பிக்கையில இதைச் சொல்லுறன்." "என்ன இது? அவ இயக்கத்துக்கு வந்த உடன தொடர்புகொண்டிருக்கலாமே...." "அவவுக்கு அவற்றை இயக்கப் பேரோ, எங்க இருக்கிறார் என்றதோ தெரியாது. நானே இவரைக் கண்டுபிடிக்க ரெண்டு மாசமாச்சு."

பழனிக்குள் பல கேள்விகள் எழுந்தாலும் முந்திக்கொண்டது இந்தக் கேள்வி,.

"நீங்கள் அவவுக்கு ஆர்?"

நிலவன் வரிசைப் பற்கள் மின்ன அழகாகச் சிரித்தான். "அவ இயக்கத்துக்கு வந்து ஆறு வருஷமாகுது. நான்கு வருஷமாக ஆளை எனக்குத் தெரியும். சரியாச் சொல்லுறதெண்டா எனக்கு அவவில ஒரு தனிக் கவனம், அன்பு, விருப்பம், எல்லாம்....! ஆனா... ஆனா அவட மனசில இப்பிடி ஒரு பிரச்சனை தடையா இருக்கிறத

அறிஞ்ச பிறகு....என்னைப் பொறுத்தவரையில தமிழவனுக்கும் விருப்பமிருந்தா அவரும் அவாவும் சந்திக்கட்டும்....."

உணர்ச்சிகளை வெளிக்காட்டாத குரலில் நிலவன் இதைச் சொன்ன போது பழனிக்குச் சங்கடமாக இருந்தது. ஆனாலும் தானாக எதுவும் சொல்வதில்லை என்று முடிவெடுத்தான். "இல்ல.... அவருக்கு அப்பிடி ஏதும் இல்லையெண்டா"

"இல்லையெண்டா...."

நிலவன் அமைதியாகச் சொன்னான்.

"நான் அவவுக்காகக் காத்திருப்பன்."

"ஓ....."

* * * *

அவள் விருப்பங்கள் வினோதம். கொள்கைள் மனிதம்.

தமிழவனின் நாட் குறிப்பேட்டில் வரையப்பட்ட அழகான விழிகளின் கீழ் இப்பிடி எழுதியிருந்தது. ஏதோ ஒரு நெகிழ்வான பொழுதில் மங்கையைப் பற்றி அவன் சொல்லியிருக்கிறான்.

கலகலப்பான அவள் சுபாவம் எல்லோரையும் வசீகரித்துவிடும். மங்கையின் இரண்டாவது அண்ணன் ஜீவனின் ஒத்த சினேகிதனாக இருந்த ராகவனுக்கும் அவளைப் பார்ப்பதிலும் பேசுவதிலும் சற்று அதிகப்படி வசீகரம் இருந்தது. இந்திய இராணுவத்திற்குப் பயந்து பிள்ளைகளை வெளியில் சுற்றவிடாத

காலம் அது. அடிக்கடி டீ.வி. பார்க்க வரும் ராகவனின் சின்னச் சின்ன விருப்பங்களை மங்கை மதிக்கத்தொடங்கியிருந்தாள். அவளது அகன்ற விழிகளில் தனக்கு ஏதோ ஒரு சேதி இருப்பதாக உணர்ந்த நாட்கள் அபூர்வமானவை.

சிரித்த முகத்தோடு எதையும் அனுசரித்துப்போகும் அவளுக்கும் கோபம் வருமென்று ஒரு நாள் கண்டுகொண்டான். தவறு அவன் மீதுதான். மங்கையின் சினேகிதி அனோமாவுக்கும் அவனுக்கும் என்றைக்குமே ஆகாது. எப்போதும் அவளைக் கேலி செய்து மட்டம் தட்டிக்கொண்டேயிருப்பான். அவளோ வேடிக்கையாகவே பதிலுக்குப் பதில் கொடுத்துவிடுவாள். அன்று நண்பர்களாகச் சேர்ந்து அவளை எப்படியாவது ஒரு வழிபண்ணுவது என்ற நினைவில் மத ரீதியாக தாழ்த்திப் பேசிக் கும்மாளமிட்டபோது வழக்கத்திற்கு மாறாக அனோமா கொதித்துப்போய்விட்டாள்.

மங்கை அதற்கும் மேலே

“கிறிஸ்தவ மதம் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனா அதில தீவிர பற்று வைச்சு நம்பிக்கையோட கும்பிடுற அவையளின்ர மனசைக் காயப்படுத்திறது என்னால சகிக்கவே முடியாது. ”என்று சுற்றிச் சுற்றி பைபிளின் பெருமைகளை வேறு சொல்லிப் பேசிக்கொண்டேயிருந்தாள்.

தன்மேல் குவிந்திருந்த அவள் கோப வீச்சைக் குறைப்பதற்காக “நான் மட்டுமோ? சேகர், குணம், ராசு எல்லாருந்தான் கதைச்சாங்கள். ”என்றான். மங்கை விழிகளை விரித்து அவனைப் பார்த்தாள்.

“ஆருங் கதைச்சதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. நீங்க அப்படிக் கதைச்சிருக்கக்கூடாது.”

உள்ளே போய்விட்டாள். ராகவன் நிதானத்திற்கு வர வெகு நேரமாயிற்று.

‘நீங்க அப்படிக் கதைச்சிருக்கக்கூடாது’ என்ற வார்த்தைகளின் அழுத்தம் அவனை எங்கோ கொண்டுசென்றுவிட்டது. நான் என்றால் அவளுக்கு விசேஷமா....? அவள் உள் மனதை அறிந்துவிடவேண்டும் என்ற கனவு மறுநாள் சிதறிப்போகும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

இந்திய இராணுவச் சுற்றிவளைப்பில் மங்கையின் மூத்த அண்ணன் சுட்டுக் கொல்லப்பட, அந்தக் கொடுமையைத் தாங்காமல் ஜீவன் இயக்கத்தில் இணைய முடிவெடுக்க, உனக்கு உள்ளதுதான் எனக்கும் என்று ராகவனும் சேர்ந்துவிட அன்றிரவே இருவரும் காணாமல்போனார்கள்.



மங்கையின் நினைவு ஆழத்தில் புதைந்தது.

இரண்டு வருடங்களின் பின் அவன் மங்கையைக் காணக் கிடைத்த சந்தர்ப்பம் மிக மோசமானது. ஆனையிறவிற்கான சமரில் ஜீவன் மாவீரனாகிவிட வித்துடலோடு வந்தான்.

உறவினர்களின் சுற்றிவளைப்பில் அழுதுகொண்டிருந்தவளைக் கண்டபோது மனம் தத்தளித்தது. ஆனால் அவனைக் கண்டதும்

"சின்ணாவை இப்படிக் கொண்டந்திட்டீங்களே" என்று கதறியபோது தாங்கமுடியாமல் ஓடிவந்துவிட்டான்.

பிறகு அவளைப் பார்க்கவேண்டும் என்று அவன் நினைக்கவில்லை.

அன்பான குணநலம் மிக்க அவளுக்குத் துணையாக வருபவன் தென்றலாக இருக்க வேண்டுமே தவிர, புயலாக மாறிவிட்ட தமிழவன் அல்ல என்று முடிவெடுத்துவிட்டான்.

* * * *

**ப**ழனி தமிழவனை உலுப்பி எழுப்பி இருக்கவைத்து விஷயத்தைக் கூறியபோது அவனது முகத்தில்தான் எத்தனை உணர்ச்சிக் கலவைகள்.

"உண்மையாகத்தான் சொல்லுறியளோ? மங்கை இயக்கத்தில் இருக்கோ?" திரும்பத் திரும்பக் கேட்டான்.

"ஓ.... மங்கை என்ன மறக்கேல்ல...."

இதைச் சொன்னபோது அவன் கண்கள் ஒளி வீசின. பரவசம் நிறைந்து ததும்பிய அந்த முகத்தைப் பழனி அதற்கு முன்னும் பார்த்ததில்லை. பின்னும் பார்த்ததில்லை.

ஐந்தாறு நாட்களின் பின் விசுவமடு புதிய போராளிகள் இணையும் செயலகத்திற்குச் சற்றுத் தள்ளி பழனியும் தமிழவனும்.

நேரடியாக அறிவித்து அவளைச் சந்திக்க வசதி செய்யலாம் என்றபோது தமிழவன் சம்மதப்படவில்லை. அவளறிய முன்னம் அவளைத் தான்

பார்த்துவிடவேண்டும் என்றான். விழி பரப்புரையில் ஈடுபட்டிருப்பதறிந்து அவள் வழக்கமாக வரும் நேரத்திற்கு முன்பே வந்து காத்திருந்தார்கள்.

தமிழவன் உடலெங்கும் கண்ணாக வழிபார்த்து நிற்பதை, அவன் உள்ளத்தின் தவிப்பு இறுக மூடிய விரல்களில் தெரிவதை அவதானித்தான் பழனி. கிட்டத்தட்ட பத்து வருடங்களின் பின் இணையப்போகும் அந்த இனிய இதயங்களுக்குச் சாட்சியாக நிற்கப் போவதை நினைத்தபோது அவனுக்கே பரபரப்பாக இருந்தது.

தூரத்தே இரண்டு பெண் போராளிகள். "மங்கை" என்று தனக்குத் தானே சொல்லிக்கொள்வதுபோல் முனகினான் தமிழவன். இற்று விழுந்துவிடுவான் போலத் தொய்ந்தது அவன் உடல்.

ஒரு அன்னையின் பரிவு தன்னுள் சுரப்பதை உணர்ந்தான் பழனி. இன்னும் கொஞ்சம் நேரம்தான் அவள் அருகில் வந்து இவனைக் கண்டு பிடிக்கிறாளா என்று பார்க்கவேண்டும். பிறகு எல்லாம் சரியாகிவிடும்.

அந்த இரு போராளிகளும் இப்போது சமீபத்தில் வந்துவிட்டார்கள். இயல்பாகப் பார்வை திரும்பியபோது அவள் - விழி அவள்தான் - ஒரு கணம் நிதானித்தாள். இப்போது தமிழவன் எங்கோ பார்த்துக்கொண்டு....

"அட நடிப்பைப் பார்" பழனி மனதிற்குள் சிரித்துக்கொண்டான்.

சட்டென்று கண்கள் சுருங்கி விரிய ஒரு அடி முன்னேவந்து,

"நீங்கள் நீங்கள் ராகவன்...." என்று நின்றாள் அவள். அவனை எதிர்பாராமல் கண்டதில் திகைத்திருந்தாலும் நேர்ப் பார்வையாக அவனைப் பார்த்தாள். உள்ளத்தில் பொங்கிய அருமையான உணர்வுகளின் கலவையில் முகம் விகாசிக்க 'எனக்குத் தெரியும் என்றோ ஒருநாள் உங்களைச் சந்திப்பேன் என்று' உறுதியாகச் சொன்னது அவள் பார்வை.

ஆனால்...!

தமிழவன் குழம்புவதுபோல் ஒரு பாவம் காட்டினான். இப்போது விழிக்கு முகம் வாடியது.

"என்னைத் தெரியேல்லையா" தவிப்போடு கேட்டாள்.



"தெரியேல்லையே. ஆனா எங்கட ஊராக்கள் எண்டு தெரியுது. என்ர பேர் சொல்லுறியள்."

இப்போது தூக்கிவாரிப் போட்டது பழனிக்கா, விழிக்கா என்று அளந்து சொல்ல யாருமில்லை. விழி தடுமாறிப்போனாள். கண்கள் குளமாகின.

"நான் மங்கை...."மேலே பேச முடியாமல் உதடு கடித்தாள்.

"அட" வெட்கப்படுபவன்போலத் தலையில் தட்டிக்கொண்ட தமிழவன்,

"மங்கை.... மறந்தே போயிட்டன். எப்படி இருக்கிறீர்கள்."

இப்போது மங்கை - விழி உடைந்துபோயிருந்தாள். அந்நியனாக நிற்கும் அவன் முன்னிலையில் தன்னைச் சமாளித்துக்கொள்ளமுடியாமல் அவள் பட்ட வேதனைக்கு மௌன சாட்சியாகத் தான் இருப்பதை உணர்ந்த பழனி நொந்துபோனான்.

"ஏன்? ஏன்? இதுக்கோ என்னைக் கதைக்கக்கூடாது எண்டு கூட்டிப் போனனி". தனிமையில் தமிழவனிடம் கொதித்தபோது வந்த பதில்

"என்ர வேல உங்களுக்குத் தெரியும். சாவோட நெருங்கியிருக்கிற நான் அவளுக்கு வேண்டாம்." "அப்ப ஏன் சந்திக்கோணும்."

"நான் அவள மறந்திட்டன் எண்டு காட்டிக்கொள்ளாட்டி அந்தப் பேப்பிள்ளை என்ன நினைச்சுக்கொண்டிருக்கும். வேற கலியாணம் கட்டாது." ஆற்றாமையோடு அடங்கிப்போன பழனி அவனோடு பேசுவதைக்கூட அடுத்து வந்த நாட்களில் குறைத்துக்கொண்டுவிட்டான். அவனுக்குக் கோபம் எல்லோரிலும்.....! எல்லாவற்றிலும்.....!

அடுத்தமுறை தமிழவனும் இன்னும் மூவரும் வேவுக்காகப் புறப்படத் தயாராய் காத்திருந்தபோது பழனி தமிழவனின் கைகளைப் பிடித்து அழுத்தி "கவனமாகப் போயிற்று வா" என்றபோது இருவருக்கும் கண்கள் கலங்கியது.

பழனியும் மற்றவர்களும் பார்த்துக்கொண்டிருக்க சிறு பற்றைகள் கடந்து எதிரியின் எல்லைக்குள் ஒவ்வொருவராக மறைந்துகொண்டிருந்தனர். கடைசியாகத் தமிழவன் கண்களிலிருந்து மறைய முன்னரே இடப்புறமிருந்து ஒரு சலசலப்பு! இராணுவம் இந்தப் பக்கம் ரோந்து வருவதில்லை என்று பல நாள் அவதானித்து முடிவு செய்யப்பட்ட அந்தப் பாதையில் இராணுவம்!

திக்கென்றிருந்தது பழனிக்கு.

இதோ சரியான மறைவிடங்களுக்குப் போக ஒரு கண அவகாசம் கூட இல்லாத போராளிகளை எந்நேரமும் அவன் கண்டுவிடக்கூடும்.

சூட்டுச் சத்தங்களையும் ஆரவாரத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தபோது தமிழவன் விழியைப்பற்றி எடுத்த முடிவு சரியானதுதான் என்று தோன்றிற்று.

ஆனால்

முப்பத்தைந்து இராணுவத்தினர் ஒருவர் பின் ஒருவராக சென்று மறைந்துவிட்டனர். எதுவுமே நடக்கவில்லை. மயிரிழையில் தப்பித் திரும்பி வந்தார்கள் போராளிகள்.

அதற்குப் பிறகும் எத்தனையோ கஷ்டமான வேவுப் பணிகளையெல்லாம் தமிழவன் செய்துவிட்டான். அவன் எதிர்பார்த்த மரணம் அவனைத் தழுவவில்லை.

கிட்டத்தட்ட இரண்டு வருடங்களின் பின் நிலவன் விழியைத் திருமணம் செய்ததாகக் கேள்விப்பட்டார்கள். எல்லாம் முடிந்துவிட்டது.

* * * *

முகாமுக்குத் திரும்பி வந்தபோது கதவு திறந்தவன் தமிழவன்தான்.


"எப்படியிருக்கு ஏ.9 பாதை" சிரித்துக்கொண்டே கேட்டான்.

"நல்லாயிருக்கு" என்று பதில் சொல்லும்போது விழியைப்பற்றிச் சொல்லுவோமா என்று எழுந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டான்.

ஏ.9 பாதை! இதைத் தக்கவைக்கப் பட்டபாடுகள் எத்தனை! இன்று அந்தப் பாதை திறந்ததும் ஓடி வந்து கேள்வி கேட்கும் அந்தப் பத்திரிகையாளர்களுக்கு தமிழவனின் இழப்பின் பெறுமதி தெரியுமா....?

சொன்னால் விளங்குமா......?

# என்று தணியும் இந்தத் தாகம்



*-அனுராதா பாக்கியராஜா-*

மனோரஞ்சிதம் வெகு நேரமாக வானத்தையே வெறித்து நோக்கிக்கொண்டு நின்றாள். அது நிர்மலமாகக் கிடந்தது. இருள் பிரியாத காலை நேரம், அந்தச் சிறைச்சாலைக் கதவுகளின் இரும்புக் கிறாதிகளினூடாகக் காலைத் தென்றல் இலேசாக வீசியது. அந்தச் சுகத்தை எல்லாம் அவளால் அனுபவிக்கவே முடியவில்லை. இன்னும் சிலமணி நேரத்தில் ஆறு ஊதி விடும். அதன் பிறகு சிறைச்சாலை ஊழியர்களும், கைதிகளும், பரபரப்பாக இயங்கத்தொடங்கிவிடுவர்.

இன்றைக்குப் பெண்கள் விடுதிக்கு யார், யார் வரப்போகிறார்களோ தெரியவில்லை. பத்மா, ரமணி, மல்காந்தி, சிறியாணி, சீலவதி, குணவதி,

சோமலதா, இவர்களில் ரமணியும், குணவதியும், மட்டும் பரவாயில்லை. மற்றவர்களெல்லாம் மனித மிருகங்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

தொட்டதிற்கும், 'கொட்டி கொட்டி' என்று சொல்லி என்னபாடு படுத்துகிறார்கள். வெளியே அடர்ந்து படர்ந்திருந்த வேப்பமரத்தில் குயில் ஒன்று சோகமாகக் கூவியது. மனோரஞ்சிதத்தின் நெஞ்சுக்குள் இனம் புரியாத வலி எழுந்தது. அவள் தன் வீட்டை நினைத்துக்கொண்டாள். அம்மாவும் தம்பியும் என்ன பண்ணுவார்களோ. நெஞ்சு நிறைந்த சோகங்களோடு அம்மா என்ன பாடுபடுகிறாளோ. தினம் தினம் வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருக்கும் அம்மாவின் முகம் அவள் கண்களில் நிழலாடியதும் அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. வேதனை தாங்கமுடியாமல் மனோரஞ்சிதம் தவித்தாள்.

வெளியே கிறீச் என்ற சத்தத்துடன் சிறைக் கதவுகள் திறக்கப்பட்டது கூட அவளுக்குத் தெரியவில்லை. இரண்டு முழுங்கால்களிலும் முகத்தைப் புதைத்துக்கொண்டிருந்தவளை மெதுவாக யாரோ தடவினாற்போலிருந்தது. அமைதியாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தாள் மனோ. ரமணிதான் சிரித்தபடி நின்றாள். "என்ன மனோ வீட்டு நெனப்பா? "கண்களைத் துடைத்தபடியே மனோரஞ்சிதம் தலையை ஆட்டினாள். "சரிசரி கவலைப்படாத உங்களுக்கெல்லாம் சீக்கிரம் விடுதலை கெடைக்கும்போல."

அவள் சொன்னதைக் கேட்டதும் புத்தம் புதிய பூப்போல மனோரஞ்சிதத்தின் அழகிய விழிகள் அகல விரிந்து படபடத்தன.

"உண்மையா அக்கா?"

"உண்மையாகத்தான் வேணும். எப்படி எப்படியோ சமாதானப் பேச்சுவார்த்தை அது இது என்று நாட்டில ஒரே களேபரமாயிருக்கு. எல்லாம் சரியா வந்தால் விடுதலைதானே?"

"வந்தால்த்தானே....." சுரத்தில்லாமல் இழுத்தாள் மனோரஞ்சிதம்.

"என்ன நீ.... அதென்ன அப்பிடிச் சொல்கிறாய்? சந்தேகம் கூடாது மனோ. நல்லவங்க பலர் வெற்றிக்காகப் பாடுபடுறாங்க உனக்குத் தெரியுமா?"

"தெரியும். இப்படி எவ்வளவோ முறை நடந்திருக்கு"

"இந்தமுறை வெற்றி நிச்சயம் மனோ"

அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே....

"என்ன "கொட்டி" கூடப் பேச்சுவார்த்தையா?" குத்தலாக ஒருத்தி

சிங்களத்தில் சொல்லிவிட்டுப் போனாள். ரமணி அவளை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் இவளோடு தொடர்ந்து கதைத்துக்கொண்டு நின்றாள். மனோ அவளை ஒரு தடவை ஆழமாகப் பார்த்தாள். பிறகு இலேசாகச் சிரித்துவிட்டு

"இவளைப்போல பொல்லாத மனமுள்ளவங்க குழப்பமாட்டாங்க என்று என்ன நிச்சயம்?" என்றாள்.

"இருக்கலாம் மனோ. ஆனாலும் இலகுவில் அது சாத்தியப்படாது பார்.... பெரிய பெரிய நாடுகள் எல்லாம் இதில தலை போட்டிருக்குது"

மனோரஞ்சிதம் பெருமூச்சு விட்டாள்.

"என்ன பெருமூச்சு.... நம்பிக்கையில்லையா?"

இது ரமணியின் கேள்வி.

"இருக்குது.... கொஞ்சம் இருக்குது. எங்கட மனுஷர்களுடைய ஆசைகளும் நியாயமான கோரிக்கைகளும் தன்மான உணர்வுகளும் புரியவேணுமே"

மனோரஞ்சிதத்தின் பேச்சைக் கேட்டு ரமணி ஓரடி பின்வாங்கினாள்.
"என்ன பயமா இருக்கா ரமணியக்கா?"
"நே.... நே..... பயம் இல்லே....."
"அப்ப ஏன் தள்ளிப்போனீங்க...."

"உன்னப் புரிஞ்சுகொள்ளமுடியேல்ல மனோ. என்ன இருந்தாலும் நானும் சிங்களப் பெண்தானே.... என்மேலேயும் உனக்குக் கோபம், ஆத்திரம் இருக்கும்தானே. அதுதான் தள்ளிப் போனன்."

"அப்பிடிச் சொல்லாதீங்கக்கா. இந்தச் சிறைக்கு வந்த ஐந்து வருஷகாலத்தில மேடம் என்று கூப்பிடவேண்டிய உங்களை அக்கா என்று கூப்பிடும் அளவுக்கு உரிமை தந்து என்மேல அன்பு பாராட்டுற உங்கள்போன்ற நல்ல ஜென்மங்கள நான் எப்படிக் கோபிப்பன்? அது முடியாதக்கா. நாங்கள் கோபிப்பதெல்லாம் ஆதிக்க வெறிபிடித்த அரசியல் வாதிகளையும், அடக்குமுறையாளர்களையும்தான்"

ரமணி வாயடைத்துப்போய் நின்றாள்.

மனோரஞ்சிதம் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்காண்டிருந்தாள்.

அவளுடைய பார்வையின் அர்த்தத்தை ரமணியால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

"அதுசரி நீ எதுக்காக இந்த சிறைக்கு வந்தே? அதைச் சொல்லவே மாட்டாயா மனோ?" என்றாள் அவள்.

அங்கசுற்றி இங்கசுற்றி பாயிண்டுக்கு வந்துவிட்டாள். சொன்னால் ஒன்றுமில்லை. ஆனால் இப்போதைக்குச் சொல்லும் நிலையில் அவள் இல்லை. எனவே "சமயம் வரும்போது உங்களிட்டக் கண்டிப்பாச் சொல்லுவேனக்கா" என்று சமாளித்தாள் மனோரஞ்சிதம்.

பாவம் ரமணியின் முகம் வாடிப்போனது. "என்ன நம்பல்லைத்தானே. சரி சரி சீக்கிரம் எழும்பி அந்தப் பிலா மரத்தடியைக் கூட்டிப்போட்டு எங்க றூம் பக்கம் வா மனோ" என்று சொல்லிவிட்டு வெளியேறினாள் ரமணி.

பாவம் - மனோரஞ்சிதம் இந்தச் சிறைச்சாலைக்குள் வந்த ஐந்து வருச காலத்துக்கும் ஒரு சகோதரிபோல் நேசம் பாராட்டிப் பழகியவள் இவள் ஒருத்திதான்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் அவளைப் பிடித்து வந்து அடைத்திருக்கிறார்கள். இந்த நாட்டில் தமிழனாய் பிறந்த பாவம். மனோவைப்போல் எத்தனை இளசுகள் இப்படிச் சிறையில் சித்திரவதைப்படுகின்றனவோ. வெளியே அரவங் கேட்டது. ரமணி சொன்னபடி வேலைகளை ஒழுங்காகச் செய்து முடித்தாள் மனோ. இனிப் பயிற்சிக் கூடத்து வேலைகள்தான். அதையும் முடித்துவிட்டால் சின்னச் சின்னப் பயிற்சி நெறிகளைப் பயிலவேண்டும். அதிலெல்லாம் அவளுக்கு கஸ்டமே தெரிவதில்லை.

பகல் சாப்பாட்டிற்குப் பிறகு சிறைச்சாலை ஓய்ந்துபோய்க் கிடந்தது. மனோரஞ்சிதம் யன்னல் கம்பிகளைப் பிடித்தபடி வெளியே பார்த்துக் கொண்டு நின்றாள். முற்றத்து மாமர நிழலில் போடப்பட்டிருந்த சீமெண்டுப் பெஞ்சியில் அமர்ந்து அன்றைய பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த ரமணி ஏதேச்சையாக மனோவைப் பார்த்ததும் நேராக அவளிடம் வந்தாள். "இந்தா மனோ இஞ்ச பார் நிபந்தனையற்ற முறையில சந்தேகத்தின் பேரில பிடிச்ச கைதிகளை விடப்போறாங்களாம்".
அவள் பத்திரிகையைக் காட்டினாள்.

மனோ தலையை ஆட்டினாள்.

"என்ன படிச்சுப் பார்க்கல்லையா?" இது ரமணியின் கேள்வி.

"எனக்குச் சிங்களம் படிக்கத் தெரியாதே அக்கா"

"ஓ! சாரி மனோ. எனக்குத் தமிழ் வாசிக்கத் தெரியாதே, இங்க சிங்களப் பேப்பர்தான் எடுப்பாங்க. ஆனாலும் விடுதலை உண்மைபோல்தான் கிடக்கு. அப்படித்தான் எழுதியிருக்காங்க நீ சிங்களம் கத்துக்கிட்டிருந்தா உனக்குப் பிரச்சனை இல்லை. நான் தமிழ் படிச்சிருந்தா எனக்குப் பிரச்சனையில்லை.... சரி அதவிடு.... விடுதலை கிடைச்சா உனக்குச் சந்தோசம்தானே" என்றாள் ரமணி.

மனோ மௌனமாகப் பெருமுச்சு விட்டாள். அவளுடைய கண்களில் நீர் கசியத் தொடங்கியது. ரமணி ஒரு சிங்களப் பெண். ஆனால் தோட்டத்தில் தமிழர்களோடு ஒன்றாகக் குடியிருந்ததில் அவளுக்குத் தமிழ் நன்றாகப் பேச வரும். அதுதான் அந்த அன்புப் பிணைப்பு.

"என்ன மனோ பேசாமல் இருக்கிறாய்? இன்னும் நம்பல்லையா" ரமணி அவள் கைகளைத் தட்டிக் கேட்டதும்

"என் சந்தோசமெல்லாம் என்றோ தொலைந்துபோய்விட்டது ரமணியக்கா. இனி நான், நான் எங்கேயிருந்தாலும் ஒன்றுதான்" என்று சலித்துக் கொண்டாள் மனோரஞ்சிதம்.

ரமணிக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. "இந்தா மனோ உன்னோடை பிரச்சனை எதுவாக இருந்தாலும் சரி மனம் விட்டுச் சொல்லு. அப்போதான் பாரம் கொறையும். துன்பம் என்பது உனக்கு மட்டுமல்ல மனோ இந்தா என்னைப் பாரு இந்த யுத்தத்தில என் புருசன் இறந்துபோய் நாலு வருசமாச்சு"

"அக்கா!"

நம்ப முடியாமல் அவளை விளித்தாள். மனோ! "உண்மைதான் மனோ. என் புருசன் ஒரு ராணுவக்காரன். உங்க ஊர்ப்பக்கத்தில ஒரு கண்ணி வெடியில அகப்பட்டு அவர் ஒடம்பு பீஸ் பீஸாயிடுச்சி. நாங்க என்ன பாவம் பண்ணினோம்? வறுமையின் நிமித்தமா துப்பாக்கி தூக்கினாரு. நான் வாழ்வையே இழந்து நிற்கிறன். நாமும் செத்திட முடியுமா? என்னோட ரெண்டு பிள்ளைகளையும் வளர்க்கவேண்டாமா? இதுதாம்பா வாழ்க்கை. கண்ணைத் தொடைச்சுக்கோ." அவள் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

மனோவால் அவளது துன்பத்தை ஜீரணிக்க முடியவில்லை. என்ன பாவம், எவ்வளவு பெரிய கொடுமை இந்தச் சின்ன வயதில். இவள் எப்படித்தான் இதைத் தாங்குகிறாளோ.

மனோவிற்குத் தெம்பு வந்தது. ஆனாலும் அவள் வாழ்க்கையில் நிகழ்ந்துவிட்ட துன்பங்களை, ரண வேதனைகளைத்தான் இன்னும் அவளால் மறக்கவே முடியவில்லை. கண்களை இறுக மூடிக்கொண்டாள். அவளுடைய நினைவுகள் ஐந்து வருசங்கள் பின்நோக்கிச் சென்றது.

யுத்தம் அப்போது நாட்டில் உக்கிரம் அடைந்த நேரம் மட்டக்களப்பில் ஒரு சிறு கிராமத்தின் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள் அவள். அப்பா ஒரு பாடசாலை 'வாச்சர்'. அம்மா தம்பியோடு நால்வர் கொண்ட குடும்பம். ஒரு நாள் காலையில் வெங்காயத் தோட்டத்தைப் பார்த்து வரப்போன அப்பாவை மாலையில் சவமாகக் கொண்டுவந்து கிடத்தினார்கள். புலி பதுங்குதென்று ஆமிக்காரர் சுட்டுப் போட்டினமாம். அன்றோடு அம்மாவின் பூவும் பொட்டும் மட்டுமல்ல அவர்களது வாழ்க்கையே அழிந்துபோய்விட்டது.

வீட்டுக்குப் பக்கத்தில் 'கேம்.' பிள்ளைகளைத் தனியே வைத்துக் கொண்டு சீவிக்க அம்மா பயந்து நடுங்கினாள். தலைக்கு மேல ஹெலி பறக்கும், குண்டுகள் விழும், ஊரெங்கும் துப்பாக்கிச் சத்தம், மனிதர்கள் செத்துக்கொண்டிருந்தனர். பகல் பொழுதில் வீட்டிலும் இரவில் தூர இடங்களிலும் காலத்தைக் கடத்தி வந்த அவர்களை, வீட்டை விட்டு இரவில் வெளியேறினால் வீட்டையே கொழுத்திவிடுவோம் என்று இராணுவம் எச்சரித்தது.

மனிதர்கள் இல்லாத வீடுகளில் புலிகள்வந்து தம்மைத் தாக்கும் என்ற பயம் அவர்களுக்கு.

புலிகளுக்குத் தகவல் சொல்லப் போனீகளோ, என்று கடுப்பாக அவர்கள் விசாரிக்கத் தொடங்க.... மனோரஞ்சிதத்தின் குடும்பமே நிர்க்கதியானது.

மனோவுக்கு முறைப்பையன் மகேஸ்தான் அந்தக் குடும்பத்துக்கு ஆதரவு கொடுத்தான். நாட்டுப் பிரச்சனையில் பெற்றோரை பலி கொடுத்த அவனுக்கு மனோரஞ்சிதத்தின் அன்புதான் ஒத்தடமாகியது. கச்சேரியில், 'கிளார்க்' வேலை பார்த்த அவனை மனோரஞ்சிதத்திற்கு கட்டிவைத்துவிட்டால் நிம்மதி என்று கனவு கண்டாள் மனோரஞ்சிதத்தின் தாய்.

ஆனால் நடந்ததென்னவோ எல்லாம் தலைகீழ்தான். ராணுவக்காரர்களின் அட்டூழியம் ஊருக்குள் தலை தூக்க உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சனங்கள் எல்லோரும் ஓடி மறைந்தனர். கிராமமே வெறிச்சோடியது. ஊரைச் சூறையாடிய இராணுவக்காரர்கள் இல்லாத நேரம் பார்த்து ஒவ்வொருத்தர் வீடு வாசல்களைப் போய் பார்த்து வந்தனர். மனோவின் தோழி மாலதியும் அவளுடைய வேலைக்காரப் பெண்ணும் தங்கள் வீட்டைப் பார்த்துவர என்று புறப்பட்டபோதுதான், மகேசு துணைக்குப் போக ஒப்புக்கொண்டான்.

“வேண்டாம் மகேஸ். விசப்பரீட்சை வேண்டாம். ”என்று தடுத்தாள் மனோரஞ்சிதம்.

“சும்மா இரு மனோ. இதுக்கெல்லாம் பயப்பிடலாமா? நாம் யாரு மறத் தமிழரல்லவா?”

பகிடியாக மார் தட்டினான் அவன். மனோரஞ்சிதம் சிரித்தாள். “ஓமோம் குண்டுச் சத்தம் கேட்டால் பங்கருக்குள்ள பதுங்கிறதெல்லாம் மறந்து போச்சோ.” அவனைக் கேலி செய்தாள் அவள்.

“அதொண்டுமில்லை..... நான் பயப்பிட்டால் நீங்களும் பயந்து போயிடுவீகளல்லோ அது தான் அதுதான்....” சமாளித்துப் பேசினான் அவன்.

“என்னமோ எனக்கு இதிலை இஸ்டமில்லை மகேஸ். சரியான பயமாயிருக்கு.” மனோரஞ்சிதம் சொன்னதும் ஒரு நிமிசம் யோசித்தவன். “கவலைப்படாதையடா. போறதும் வாறதும்தான். ஒரு அரை மணத்தியாலத்தில திரும்பிடுவம்.” அவளைத் தைரியப்படுத்தினான் அவன். “என்னமோ கவனம் மகேஸ்.” அவள் காதல் ததும்பக் கண்களால் விடை கொடுத்தாள்.

“சரி சரி மாலாக்காவுக்கும் நம்மைவிட்டால் யாரு மனோ இருக்கிறாங்க? வாறேன். ”செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டிக் கொடுத்து மாலதியைப் பின் தொடர்ந்தவனை அரை மனதோடு வழியனுப்பி வைத்தாள் மனோரஞ்சிதம். அன்று போனவன்தான் அதன் பிறகு அவர்களில் யாருமே திரும்பவில்லை. மாலதியும், சிட்டுவும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு அவர்கள் வீட்டுக்குள்ளேயே நிர்வாணமாக எரிக்கப்பட்டிருந்தனர். மகேசு தூரத்தே சுடப்பட்டுக் கிடந்தான். விசயமறிந்த மனோரஞ்சிதம் ஓ! என்று அலறித்துடித்தாள். இனியும் பொறுக்கமுடியாது. அவள் நெஞ்சில் வெஞ்சினம் மூண்டது. அதை ஊதி ஊதி எரிக்க அவள் தயாராகிவிட்டாள்.

வருவது வரட்டும் என்று அவளும் ஒரு போராளியாக மாற முடிவெடுத்தபோதுதான் அவளை யாரோ காட்டிக்கொடுத்துவிட்டார்கள். அன்று தொடங்கிய சோகம் இன்னும் மறையவில்லை. அவளுடைய உணர்வுகளெல்லாம் மரத்து சந்தோசங்களெல்லாம் தொலைந்துபோன இந்த நேரத்தில் சமாதானம் வரப்போகுதாம். விடுதலை கிடைக்கப்போகுதாம். என்னைப்போன்றவர்களுக்கு இதனால் என்ன பயன்? பரவாயில்லை. கிடைக்கட்டும். எதிர்கால சமுதாயமாவது வாழட்டும். என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம், அவள் மறுபடியும் வானத்தையே வெறித்து நோக்கிக் கொண்டு நின்றாள். அங்கே மகேஸ் சிரித்துக்கொண்டு நின்றான்.

# முகம் மாறும் மனிதர்களும்....
# முகம் மறந்த உதவிகளும்....



*காயத்திரி இராஜேஸ்வரன் -*

இருள் விலகி மெல்ல மெல்ல ஒளியடையும் இந்தக் காலைப் பொழுது தான் எத்தனை அழகு. தினமும் வந்தாலும்கூட சூழலிற்கும், நேரத்திற்கும் ஏற்றவாறு வெவ்வேறு வர்ணம் தீட்டி கண்களைக் கொள்ளை கொள்வதில் இந்தக் காலைப் பொழுதிற்குத்தான் எத்தனை கர்வம். ஆனாலும் இந்தப் பாதையினூடு தோன்றுகின்ற சூரிய உதயத்தில் ஏதோ புதிய அழகு ஒன்று இருக்கத்தான்வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பாதையூடு எத்தனை தடவைகள் பயணம் செய்த தரணிகூட செம்மஞ்சள் கோளமாய் மெல்ல மேலெழுந்த கதிரவனை வைத்த கண் வாங்காமல் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறாளே.

நடு உச்சி பிரித்தும் பிரிக்காமலும் இழுத்து ஒற்றையாய் பின்னப்பட்டிருந்த

தலைமயிர் காற்றாலே முன்புறமாய் சற்றுக் கலைந்திருந்தது. கறுப்பு என்று சொல்லிக்கொள்ள முடியாத ஒரு மாநிறத்தில் இருந்த தரணியின் முகத்தில் பேரழகு சொட்டாவிடினும் ஒருவித ஈர்ப்பு சக்தி இருந்ததென்னவோ உண்மைதான். சுடர்போல் பிரகாசிக்கும் கண்மணிகளும், அமைதியாய் அடித்துக்கொள்ளும் இமைகளும், முகத்தில் தெரிந்த கனிவான உறுதியும், சிரிக்கும்போதோ அப்போதுதான் இதழ் விரிந்து மலரும் அழகிய மலர் போன்ற வதனமும் அவளை ஒரு களையான பெண்ணாக மாத்திரம் அல்லாது அவளின் ஆழமான அறிவாற்றலையும் அடக்கி வாசித்துக்கொண்டிருந்தன.

ஆனையிறவுப் பகுதியை அண்மித்துக்கொண்டிருந்தது அவள் அமர்ந்திருந்த பேருந்து வண்டி. இன்னும் இன்னும் நினைவாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த வாகனம், ஆங்காங்கே வரிசையாய் நாட்டப்பட்டிருந்த கம்பங்கள், கடற் பகுதிகளில் அடுக்காக, சாய்வாக நடப்பட்ட சிறிய கூர்க்கட்டைகள், மொத்தத்தில் ஏதோ பொட்டல் பிரதேசமாய் காட்சியளித்துக்கொண்டிருந்த அந்த இடம் அவளிற்குமட்டும் ஆயிரம் அர்த்தங்களைக் கற்பித்து ஓராயிரம் எண்ணங்களை எழுப்பிக்கொண்டிருந்தது. ஆறாத ரணம் ஒன்றில் கீறல் விழுந்து மீண்டும் ரத்தம் கசிவதுபோல மனது வலியெடுத்தது.

அஜாக்கிரதையாக விழுந்து படுத்தபோது கூரான கடற்கட்டைகள் கிழித்த கழுத்தின் தழும்பைத் தடவியவண்ணம் தரணியின் மனம் பின்னோக்கிப் பயணித்தது. இன்று கண்கவர் நீல வர்ணத்தில் நீரை ஏந்தி வெண்ணிற உப்பைக் கரை சேர்க்கும் கடனீரேரிப்பகுதி அன்று... அன்று என் அம்பிகை.... அம்பியின் குருதி வர்ணத்தை ஏந்தி கரை உப்பிற்கும் நிறமூட்டியதே. எனக்கு வரவேண்டியதை அவள் மறித்துக்கொள்ள, இறுதியாய் அவள் சடலம் தாங்கி நடந்த என் உடலம், ஐயோ வேண்டாம். எத்தனை முறை மறக்க முயன்றும் முடியாத அந்த எண்ணங்களோடு மீண்டும் போராடினாள் தரணி.

காட்சிகளின் ரசிப்பிலே லயிக்க முயன்ற தரணி, பார்வையை வெளிப்புறம் திருப்பிய அவள் கண்கள் பரபரவென எதையோ தேட ஆரம்பித்தன. ஓ! அவளது இரட்டை எஸ் வளைவான தென்னை மரம். இயற்கையின் பிறப்பிலோ, செயற்கையின் தூண்டுதலோ அந்த வளைந்த தென்னை அதிசயமாய்தான் கண்ணிற்குப் படுகிறது. சுவர்போல நீண்டு வளைந்திருந்த ஆலமரமும் உலகின் அழகிய காட்சிகளில் ஒன்று என்றே எண்ணத் தொடங்கினாள். பச்சைப் பசேலென எழில் பரப்பும் அந்தப் பளைப் பகுதியும், எத்தனை யுத்தம் வந்தாலும் என் வளம் குன்றாது எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தது. கண்ணில் படுகின்ற காட்சிகளை மனதிற்குள்ளும் படமாக்கி ரசித்துக்கொண்டிருந்தாள் தரணி.

காட்சிகளின் ரசிப்பில் தன்னை மறந்திருந்த தரணி பேருந்து யாழ் நகரின் தரிப்பிடத்தை அடைந்து விட்டதை உணர்ந்து, அந்தப் பேருந்தில் இருந்து இறங்கி தொடர்ந்து செல்லவேண்டிய பேருந்தின் உள்ளே ஏறி அமர்ந்துகொண்டாள். கடந்த ஆறு மாதங்களாக திருநெல்வேலியில் தங்கியிருந்தபோதும் அவள் தாவடியில் உள்ள தனது நெருங்கிய உறவினர் வீட்டிற்குச் செல்லவேயில்லை. இந்த முறையோ அங்கே கட்டாயமாகச் செல்லவேண்டும் எனத் தரணியின் தாயார் வற்புறுத்திக் கூறி, கூடச் சில சாமான்களையும் கொடுத்து கொடுக்கும்படி கூறியிருந்தார். வேண்டா வெறுப்பாக விதியே எனச் சம்மதித்திருந்தாள் தரணி. ஏன் அந்த உறவில் அத்தனை வெறுப்பு தரணிக்கு.....

மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மிக இக்கட்டான நிலையில் தரணி. தப்பிக்கும் முனைப்பில் விரைந்த கால்கள் குச்சொழுங்கைகள் வழியாக தாவடிப் பிள்ளையார் கோயிலை நெருங்கியிருந்தது. அருகில் தன் நெருங்கிய உறவுகள் இருக்கிறதே என்ற நம்பிக்கையோடு வீதியைக் கடந்து எதிர்ப்புறம் இருந்த ஒழுங்கைக்குள் நடக்கத்தொடங்கினாள் தரணி. முதல்நாள் பெய்த மழையால் வெள்ளம் நிரம்பியிருந்த அந்தக் கல் ஒழுங்கையால் அவள் நடக்கையில் மீண்டும் மழை கொட்டத்தொடங்கியது. அடைமழையினூடு அந்த வீட்டின் கேற்றை அடைகையில் வாசல் கதவடியில் இருந்த மாமா பரமசிவம் அவளைத் தெளிவாக அடையாளம் கண்டுகொண்டார் என்பது அவரது பதட்டமான செயற்பாடுகளிலிருந்து தெரிந்தது. தடையை எடுத்தவண்ணம் விடு விடுவென நடந்து வந்த பரமசிவம் தன்னை அழைத்துப் போகவே வந்துள்ளார் எனத் தரணி ஆசுவாசப்படுகையில், அவரோ "உதிலை நில்லு பிள்ளை. இது இளம் பிள்ளையள் இருக்கிற வீடு. பிறகு கரைச்சல், கனகம், கேற்ற பூட்டுகிற பூட்டைக் கொண்டு வா. "எனப் படபடவெனப் பொரியலானார்.

"......................"

"அன்று அத்தகைய வரவேற்பு அளித்த வீட்டிற்கு இன்று நான் செல்லத் தான்வேண்டுமா? என் அனுபவங்கள் ஏதும் அறியாத அம்மாவின் கட்டளைக்கு அடிபணிந்ததும் தவறோ" என்று தரணியின் மனம் அல்லாடியது. வெளியே நின்றவாறே பொருட்களைக் கொடுத்துவிட்டு உடனே திரும்பி விடுவோம் என்று மனதை சமாதானப்படுத்திக்கொண்டாள் தரணி.

அதற்குள் இறங்கவேண்டிய இடம் வந்துவிடவே, பேருந்திலிருந்து இறங்கி நடக்கத்தொடங்கிய தரணி வழியில் பிள்ளையாரையும் வணங்கிவிட்டு அந்த ஒழுங்கையில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள்.

ஒழுங்கைத் தொங்கலில் நின்றுகொண்டிருந்த பரமசிவத்தின் கடைசி மகன் சுரேஸ் விரைந்து வீட்டை நோக்கி ஓடினான். சரி இன்று எத்தனை பூட்டோ தெரியாது என்று எண்ணியவாறு தொடர்ந்து நடந்தாள் தரணி.

மாமா பரமசிவமும் மாமி கனகமும், சுரேசும் விரைந்து எதிரே வந்து கொண்டிருந்தனர். என்னருகே வந்ததும் மூவரின் கால்களும் தயங்கி நின்றன. மாமாதான் முதலில் ஆரம்பித்தார். "இஞ்ச தா பிள்ளை 'பாக்'கை நான் தூக்கிக்கொண்டு வாறன். தம்பி அக்காவைக் கூட்டிக்கொண்டு வாடா. கனகம் அந்தச் சின்னப் பையையும் வேண்டு. பிள்ளை எவ்வளவு களைச்சுப்போய் வந்திருக்குது. உடனே கனகமும் ஒத்துப் பாடினாள்.. "எவ்வளவு நாளாய் நீ வாறாய் வாறாய் எண்டு பார்த்துக் கொண்டிருந்தனாங்கள்." மனதிற்குள் ஆச்சிரியம் படர வெறும் சிரிப்பைப் பதிலாக்கி பின்தொடர்ந்தாள் தரணி.

அமோக வரவேற்புகளுடன் வீட்டினுள் நுழைந்த பின்பு மீண்டும் பரமசிவம் தரணிமேல் புகழாரம் சூட்டத் தொடங்கினார். "தம்பி அக்காவைக் கேட்டுப் படியடா, தரணி அப்பவே குப்பி விளக்கில படிச்சு நாலு ஏ எடுத்தவள். இப்ப கொஞ்ச வருடம் 'சும்மா' இருந்திட்டு இப்பத்தான் கம்பசில சேர்ந்து படிக்கத் தொடங்கியிருக்கிறா. நீயும் இவ மாதிரிப் பெரிய படிப்பெல்லாம் படிச்சுப் பெரிய ஆளாய் வரவேணும்."

இருந்துதான் போகவேண்டும், சாப்பிட்டுவிட்டுப் போகவேண்டும், என்றவைகளுக்கெல்லாம் தப்பி ஒரு தேநீரோடு அந்த வீட்டைவிட்டு வெறியேறினாள் தரணி.

மெல்ல நடந்து இடையில் இருந்த இன்னொரு குச்சொழுங்கை வழியாகச் சென்று ஒரு மண் வீட்டின் முன் நின்றாள் தரணி. அவளது "அம்மா, அம்மா" என்ற அழைப்பின் பேரில் உள்ளிருந்து வந்தவர் என்ன என்பதுபோல தரணியைப் பார்த்தார். அந்த முகத்தைப் பார்த்த பரவசம் கண்ணில் விரிய "அம்மா என்னைத் தெரியுதோ?" என்றாள் தரணி. மீண்டும் ஒருமுறை அவளை உற்றுப் பார்த்துவிட்டு "தெரியேல்லைப் பிள்ளை. நீர் ஆர்?" என்றார் அந்த அம்மா. தரணியோ விடாமல் "அம்மா, முந்தி ஒருநாள் உங்கடை உயிரைப் பணயம் வைச்சு என்னை உங்கட வீட்டுக்குள்ள மறைச்சு வைச்சுக் காப்பாத்திவிட்டனியள். மறந்து போனியளோ" "ஓ..... ஓ.... அது நீர்தானோ பிள்ளை. நான் முகத்தை மறந்துபோனேன்" என்றார் அந்த அம்மா.

முகம் மறந்த உதவிகளும், முகம் மாறும் மனிதர்களும்.... தரணியின் மனதிலே வாழ்க்கை ஏதோ கொஞ்சம் புரிந்துவிட்டதுபோலத் தோன்றியது.




*-மலைமகள்-*

**உ**ந்துருளி தன்பாட்டில் போய்க்கொண்டிருந்தது. மனம் வேறெங்கோ தன்பாட்டில் போய்க்கொண்டிருந்தது. இடையிடையே திடுக்கிட்டுச் சுயநினைவுக்கு வரும்போது ஒரு முறை பரந்தன் சந்தியால் திரும்பிக்கொண்டிருந்ததை உணர்ந்தேன். மறுமுறை ஆனையிறவைக் கடந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். குறுக்கும் மறுக்கும் கூவியபடி போய்க்கொண்டிருக்கும் ஊர்திகளோடு மோதாது எப்படி வந்துகொண்டிருக்கிறேன்? ஆச்சரியமாக இருந்தது.

மூளையின் தொழிற்பாட்டைக் கைகளும் கால்களும் பொறுப்பேற்றுக் கொண்டனவோ? அல்லது, போகும் இடத்தையும் இலக்கையும் புரிந்துகொண்டு உந்துருளி தானாகவே தொழிற்படுகின்றதோ?

சிலவேளை இருக்கும். நதிமூலம் - 01 (வோட்ட ஷெட்) நடவடிக்கைப் படைகள் நாற்பது மோட்டார்களாலும் பொழிந்து தள்ளியபடி அம்பகாமக் காட்டுக்குள் அந்த அடி அடித்தபடி நகர்ந்துகொண்டிருக்க, எமது முன்னணிக் கட்டளைப் பீடத்தில் தொலைத் தொடர்புக் கோபுரம் தெறித்து விழுந்தது. உடனேயே இரண்டுபேர் உந்துருளியை எடுத்துக்கொண்டு கிளிநொச்சியை நோக்கிப் பறக்க, அதற்குள்ளாகவே கிளிநொச்சித் தளத்தில் நின்றவர்கள் நிலமையைப் புரிந்துகொண்டு தமது தொலைத் தொடர்புக் கோபுரத்தைக் கழற்றிக் கையிலெடுத்து இரண்டு மிதிவண்டிகளில் ஏறிக் காற்றைக் கிழித்தவாறு விரைய, இரு பகுதியும் இரணைமடுக் குளக்கட்டின்மேல் சந்தித்து உபகரணங்களையும் கள நிலமைகளையும் கணத்தில் பரிமாறிக்கொண்டு, மறுபடி விரைந்தோம்.

காட்டு வழியெங்கும் எறிகணை வீச்சில் கிளைகளும் மரங்களும் வீழ்ந்து கிடக்க, வந்த பாதை இதுதானோ என்ற குழப்பம் எங்களுக்குத்தான் உண்டானதே தவிர, உந்துருளிக்கல்ல. அது மிகச் சரியாகக் கட்டளைப் பீடத்தில் போய் நின்றது.

அதுபோல் இப்போதும் யாரும் எதுவும் சொல்லாமலேயே அரியாலை-மணியந்தோட்டத்தில் அந்த வீட்டின்முன் போய் நிற்கக்கூடும். யாருக்குத் தெரியும்.

உந்துருளி இயக்கச்சிச் சந்தியால் வளைந்தது. Iron side தன் அடையாளத்தை இழந்திருந்தது. அனுராதபுரத்துக்கு அப்பாலிருந்து வந்தவர்கள் இயக்கச்சியைத் தமது இரும்புக் கோட்டையாக நினைத்திருந்தது என்ன ஒரு முட்டாள்தனம்? யாழ்ப்பாணத்தவர்களின் வாழ்வின் பாதுகாவலர்கள் தாமே என்று கூறிக்கொள்வது அதைவிடப் பெரிய முட்டாள்தனம். இப்போது சிலர் எம்மை வழிமறிப்பார்கள். அடையாள அட்டையிலுள்ள முகத்தையும், என் கழுத்துக்கு மேலே தொங்கிக்கொண்டிருக்கும் முகத்தையும் நாலைந்து தடவைகளுக்கு மேல் மாறி மாறிப் பார்ப்பார்கள். பெயர் கேட்பார்கள். ஒவ்வொரு முறையும் என் பெயரைத் தவறாக அவர்கள் எழுதிவிட நான் திருத்தவேண்டியிருந்தது.

இதோ நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த நாடகம் அரங்கேறப்போகிறது. முதன் முதலாக யாழ்ப்பாணம் போனபோது, முன்னணிக் காவல் நிலையில் முதன் முதலாகக் காணப்போகும் படைவீரனைப் பார்த்து என்ன செய்வது, புன்னகைப்பதா, தலையாட்டுவதா, சினத்தை முகத்தில் காட்டாமல் கட்டுப்படுத்திக்கொள்ள முடியுமா என்று கனக்க யோசித்ததையும், ஆனால் முன்னணிக் காவல் நிலையைக் கடந்தபோது எந்தக் குழப்பமுமின்றி, எந்தப் படைவீரனையும் பொருட்படுத்தாது அலட்சியமாக உள்நுழைந்ததையும் நினைக்க இப்போது சிரிப்பு வந்தது. கப்பென்று வாயை மூடிக்கொண்டேன். தம்மைப் பார்த்துத்தான் நான் சிரித்தேன் என்று இவர்கள் நினைத்துவிடக்கூடும்.

அதோ புன்னகையோடு ஒரு படைவீரன் எங்களை வரவேற்கிறார். புன்னகையோடு இன்னொரு படைவீரன் உந்துருளித் தரிப்பிடத்துக்கு வழிகாட்டுகிறார். தற்செயலாக ஏறிட்டுப் பார்க்க நேர்ந்தபோதெல்லாம், முன்னின்ற படையினர் புன்னகையோடு தலையசைத்தனர். ஒரு வருடத்துக்கு முன்புவரை எங்களை நோக்கிச் சுடுகுழல் வாய்களை இலக்குப் பொருத்தியவாறு எங்கள் நிலத்தில் எங்களைக் கொல்லக் காத்திருந்த உங்கள் முகங்களில் புன்னகையைக் கண்டதாக நினைவில்லையே இளைஞர்களே. அப்போதுதான் காவற் கடமையை மாற்றிக் கொடுத்துவிட்டு வெளியே நிமிர்ந்து நின்று காற்று வாங்கியவளை, வேலை செய்த களைப்பில் ஓடி வந்து ஒரு பிடி உணவை வாயருகே கொண்டுபோனவளை, விழுந்து கிடக்கும் வேலியை நிமிர்த்த வந்தவளையெல்லாம் பதுங்கிச்சுடும் கருவியால் சுட்டு விழுத்தியபோதும்கூட இப்படித்தான் புன்னகைத்தீர்களா இளைஞர்களே?

சடங்கு, வைபவங்களையெல்லாம் முடித்து உந்துருளி முகமாலையைக் கடந்து புறப்பட்டது. வீதியெங்கும் படைவீரரின் தலைகளே. அது வழமையான விடயம்தான். இது என்ன திருவிழாக் காலத்து மணிக்கடைகள் போன்று திடீரென்று புதிது புதிதாய் காப்பரண்கள்? ஆயுதங்களின்றி உலவும் எங்களை எதிர்கொள்ள எதற்காக இத்தனை அமளி?

யாழ் நெடுஞ்சாலை போர்க்கோலம் பூண்டிருந்தது. மாற்றமெதுவும் நடைபெறாமல் அன்றுபோல் இன்றும் இருப்பது பிளவுண்டு இரு முனைகளாகத் தொங்கும் நாவற்குழித் தண்டவாளப் பாலம்மட்டுமே.

ஓயாத அலைகளாக நாம் கைதடியில் நுழைந்தபோது நாவற்குழி, அரியாலை நோக்கிய எமது நகர்வைக் கட்டுப்படுத்தும்முகமாக சிறீலங்கா விமானப்படையினர் நாவற்குழிப் பாலத்தையும் தண்டவாளப் பாலத்தையும் தகர்த்துவிட்டிருந்தனர். பாளம் பாளமாகச் சிதறிக்கிடந்த நாவற்குழிப் பாலத்தின் உயிராபத்துமிக்க வெடிப்புகளை இரவில் பாய்ந்து கடப்போம். மயிரிழையில் சறுக்கி நீருள் மூழ்கவிருந்த வாய்ப்புகளெல்லாம் வெற்றிகொள்ளப்பட்டன. பகலில் இந்தப் பாதையைக் கற்பனை பண்ணியே பார்க்கத் தேவையில்லை. எமது பகல் நடமாட்டம் முழுவதும் தண்டவாளப் பாதையால்தான். ஒவ்வொரு தண்டவாளமும் ஒவ்வொரு திசைநோக்கித் திரும்பியிருக்கும். ஒரு நுனியிலிருந்து அடுத்த நுனிக்குத் தாவுவோம். தவளுவோம். குதிப்போம். தண்டவாளத் துண்டுகளின் நெளிவுகளுக்கேற்ப நகர்வு மாறுபடும்.

செருப்புக்களைக் கழற்றிக் கைகளுள் கொழுவிக்கொள்வோம். ஆயுதத்தைத் தொங்கப்போடுவோம். கொண்டுசெல்லவேண்டிய பொருட்களையெல்லாம் உடம்போடு கட்டுவோம். புறப்பட்டுவிடுவோம். ஒரு



துண்டிலிருந்து அடுத்த துண்டுக்குப் பாய முன்னர் கீழே தளும்பிக் கொண்டிருக்கும் தண்ணீரைப் பார்த்தால் பயத்திலேயே உயிர் போகும். எதற்கு வில்லங்கம் என்று பெரும்பாலும் நாங்கள் கீழே குனிவதேயில்லை.

பூம்புகார், அரியாலை, கொழும்புத்துறை, செம்மணிக் காப்பரண் போராளிகளைச் சந்திக்கவரும் ஒவ்வொருவருமே ஒவ்வொரு முறையும் தொங்குபாலத்தின் மேலே தொங்கிப் பாயவேண்டும் என்பது தென்மராட்சிச் சண்டை முனையின் மாற்றமுடியாத விதியாக இருந்தது.

கடைசியாக நான் தொங்கு பாலத்தைக் கடந்தபோது, மிதுலா அரியாலையில் நின்றாள். பொன்னேரியை படகில் கடந்து வன்னியை அடைந்த மறுநாள், மிதுலாவும் அரியாலையும் எம்மோடில்லை என்ற செய்தி காதுகளை அடைந்தது. பகல் வேளையில் நடந்த மிக உக்கிரமான சண்டையில் மிதுலா தன்னை அழித்துக்கொண்டாள். காப்பரண்களில் நின்ற எல்லோருமே கடைசி நிமிடம்வரை சண்டையிட்டனர். இறுதியில் தமது கட்டளை அதிகாரி மேஜர் மிதுலா எடுத்த முடிவையே எல்லோரும் எடுத்தனர். எல்லோருமே தமது கடைசி மணித்துளியில் தொலைத்தொடர்புக் கருவியில்,

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

சொல்லிவிட்டே வீழ்ந்தார்கள் என்ற செய்தி நெஞ்சுப் பரப்பினுள் ஏதோ செய்தது.

மிதுலாவோடு அரியாலை, மேஜர் கயல்விழியோடு சாவகச்சேரி போனது எத்தனை பேரை இந்த வீதியெங்கும் விதைத்தோம்? மிதுலாவின் சண்டை எப்படி நடந்திருக்கும்? ஒரு முறை அந்த இடத்தை, சண்டை நடந்த தடத்தைப் பார்த்தால் போதும். புரிந்துகொள்வோம். அந்தக் கல் வீட்டின் போட்டிக்கோவில் பனங் குற்றிகளும் மண் மூடைகளும் அடித்து, அதையே தனது கட்டளைப் பீடமாக மிதுலா பயன்படுத்தியிருந்தாள். அந்த வீட்டுக்காரரிடம் போய், அவர்கள் வந்தபோது வீடு எப்படியிருந்தது என்று கேட்டால்...? அதற்குள் படையினர் என்னென்ன செய்து வைத்தார்களோ? யாருக்குத் தெரியும்.

அட! அதற்குள் அரியாலைக்கு வந்துவிட்டோமா? இந்த இடது பக்க ஒழுங்கையால் திரும்பி.... ஏன் எங்களை நோக்கிப் படையினர் ஓடி வருகின்றனர்? என்ன நடந்துவிட்டது இப்போது?

தமிழில் ஒருவர் விளக்கினார். படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைவதற்கு எங்களுக்கு அனுமதி இல்லையாம். சரியாகப் போய்விட்டது.

எங்களுடைய நெருங்கிய உறவினரின் வீட்டுக்குப் போகவேண்டும் என்று கேட்டுப் பார்த்தோம்.

எம்மை உள்ளே போகவிட்டால், மேலிடத்திலிருந்து தாம் எதிர்கொள்ள வேண்டியுள்ள சிக்கல்களைப் படை வீரர்கள் விளக்கினார்கள். ஒன்றும் செய்ய முடியவில்லை. புறப்பட்டோம்.

"பாசையூர்ப் பக்கத்தால முயன்று பார்ப்போம்."
என்றாள் கூட வந்தவள்.
விடுவார்களா?
தெரியவில்லை.

எமது மாவீரர்களின் எச்சங்கள் ஏதேனும் எஞ்சியிருக்கின்றதா என்று பார்த்து எடுக்கப்போகிறோம் என்ற உண்மையைச் சொல்லிவிட்டால் என்ன? விடுவார்களா?

வீழ்ந்தவர்களின் விதை நிலங்களை உழுதவர்களுக்கு எங்களின் இந்த மென்மையான உணர்வு புரியுமா?

தெரியவில்லை.

"யோசிக்காதையுங்கோ. எப்படியாவது போகலாம்."
என்றாள் கூட வந்தவள்.

உந்துருளி பாசையூருக்கு வந்து சேர்ந்துவிட்டது. நினைத்து வந்தது எதுவும் நடக்கக்கூடிய சூழ்நிலை தென்படவில்லை. கூட வந்தவள் நாடகத்தைத் தொடக்கினாள்.

"சேர், எங்கடை வீடு மணியந்தோட்டத்திலை இருக்குது. ரெண்டு பேரின்ரை வீடுமே கிட்டக் கிட்டத்தான். எங்கடை வீடுகளை நாங்கள் பார்க்கப் போகலாமோ?

அந்த அதிகாரி அது உயர் பாதுகாப்பு வலயம் என்று விளக்கினார்.

"நாங்க ஒரே ஒரு தரம் பார்த்திட்டுப் போய்விடுவம். நீங்களும் வந்து பார்க்கலாம்"
ம்ஹூம்.

"இந்தக் கடற்கரையிலதான் சின்னனில நாங்க விளையாடினனாங்கள்.



ஒரே ஒரு தரம்மட்டும் கடற்கரையைப் பார்க்கலாமோ?"

அந்த அதிகாரி கொஞ்ச நேரம் எங்களையே பார்த்தவாறிருந்தார். எழும்பி உள்ளே போனார். பத்து நிமிடம், பதினைந்து நிமிடம், அரை மணித்தியாலம், ஒரு மணித்தியாலம்,.... ஆளையே காணோம். நடமாடிக்கொண்டிருந்த படைவீரர்கள் எங்களைச் சற்று விநோதமாகப் பார்த்தனர். உள்ளே போன அதிகாரி பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்த பின்னர்தான் முடிவு சொல்வாரோ? சினமாக இருந்தது.

அதிகாரி வந்தார். கூடவே இன்னும் சில அதிகாரிகளும் பல படைவீரர்களும் வந்தனர்.

"வாருங்கள்"

என்றனர்.

எங்கே? மணியந்தோட்டத்து மிதுலாவின் வீட்டுக்கா? கடற்கரைக்கா? தெரியவில்லை. கூடவே நடந்தோம்.

பாசையூர் மீன் சந்தை தெரியும் தூரத்தில் நின்றார்கள். நின்றோம்.

"இதிலை நிண்டு கடற்கரையைப் பாருங்கோ. இதுக்கு மேல கூட்டிப்போக அனுமதியில்லை."


என்றார்கள்.


* * * *

பின்குறிப்பு:-

ஆனையிறவுக் கூட்டுப் படைத்தளம் சிறீலங்காப் படையினரின் கைகளில் இருந்தபோது இயக்கச்சி இரும்புக் கோட்டை என்று பொருள்படும் வகையில் "Iron side" என்று இயக்கச்சிப் படைத்தளக் கட்டளைப் பீட வாசலில் எழுதப்பட்டிருந்தது.

2002 டிசம்பர்.






-அம்புலி.

கவிதாவுக்கு நேரம் ஏழைத் தாண்டி விட்டதும் கைகள் வேகம் எடுக்கத்தொடங்கின. இனிப் பிள்ளைக்குச் சோறுதீத்தி, முட்டை பொரித்து, சரவணனுக்குச் சாப்பாடு அடுக்குப் பண்ணி, மதியச் சமையலுக்காய் மாமிக்கு தேங்காய் துருவி வைத்து, மேல் கழுவி வெளிக்கிட்டு, சேலை உடுத்தி, சிலநேரம் சாப்பிட்டு அல்லது தேநீரை மட்டும் குடித்துவிட்டு, பாடசாலைக்குரிய ஆயத்தங்களோடு சைக்கிளேறி வெளிக்கிட்டு, அழும் பிள்ளைக்குச் சாக்குப்போக்குக் காட்டிவிட்டுச் செல்ல எப்பிடியும் சிவப்புக் கோட்டுக்குக் கீழே நேரம் வந்துவிடும். அதிபரின் கண்டிப்பும் கட்டுப்பாடும் உறுத்தும். நேற்றிரவு பாடம் ஆயத்தம் செய்த நேரம் பன்னிரெண்டு மணியாகியது இன்றைய காலைப்பொழுதில் வேலைகாட்டுகின்றது. தாமதமாகி எழும்பிய ஒரு மணித்தியாலம் அதுவும் ஐந்தரை மணி காலை வேலைகளுக்குப் போதியதாக இல்லை.

என்ன செய்யிறது. மதியச்சாப்பாட்டை மாமிசெய்து, பிள்ளையையும் பார்த்துக் கொள்வதில் காலை, மாலை அலுவல்களை இவளே செய்தாக வேண்டும். கூடமாட ஒத்தாசை செய்வதற்கு அவ முனைந்தாலும் பிள்ளை மது குழப்படி செய்து அவாவை மினக்கடுத்தி விடும். இவ்வளவுக்குமிடையில் சரவணனுக்குரிய வேலைகளையும், அவனையும் ஒரு பிள்ளையை பாடசாலைக்கு

அனுப்புவதற்கு ஆயத்தம் செய்வது போல கவிதாவே செய்யவும் வேண்டும். அவளுக்கு எரிச்சல் தான் வந்தது.

சரவணன் ஒரு மோட்டார் சைக்கிள் எடுத்தாலாவது கொஞ்சம் பயணம் இலகுவாகும். எல்லாத்தையும் விட அவனது ஒத்துழைப்பிருந்தாலேயே அரைவாசி வேலை குறைந்தது மாதிரித்தான். அவளது எண்ணங்களின் வேகத்தை விட நேரம் அதி வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

சரவணன் சாப்பிட்டு விட்டு வெளிக்கிட்ட பின் அரைமைல் அளவு தூரத்தில் இருக்கும் அலுவலகத்திற்கு அவள் இனி சைக்கிளில் போகவேண்டும்.

"கவிதா என்ர பாக்குக்குள்ள இருந்த "பொக்சி" பேனையைக் கண்டனீரே. காணயில்லை. உதை விட்டுட்டு ஒருக்காத் தேடித் தாருமன்."

இருக்கும் வேலைகளுக்குள் இது வேற. வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு "இப்ப தேடிப்பார்க்க நேரமில்லையப்பா. பின்னேரம் வந்து பாக்கிறன். என்ர பேனையைக் கொண்டு போங்கோவன்." எடுத்துவந்து கொடுத்தாள்.

"உமக்கு ஒரே அலுப்பு. மறக்காமல் பின்னேரம்வந்து பாரும். நான் வாறன்." டாட்டா காட்டிய பிள்ளைக்குக் கையசைத்து விட்டு சைக்கிளில் ஏறிப்பறந்து விட்டான். இனிக் கவிதாவின் முறை.

"மாமி பின்னேரம் வரேக்க நேற்று நீங்கள் கேட்ட மருந்தைக் கட்டாயம் வாங்கிவாறன்." நேற்று வாங்க மறந்துவிட்ட மாமியின் மருந்தை மனதில் வரவழைத்துக் கொண்டாள். "மதுக்குட்டி குழப்படி செய்யக் கூடாது. அப்பம்மாவைக் கரைச்சல்ப் படுத்தாமல் இருக்கவேணும். அம்மா வரேக்க கண்ரோஸ் வாங்கிக் கொண்டாறன் என்ன"

"நானும் நானும், கூட்டிப்போங்கோ" என்ற குழந்தையை, "அம்மாக்கு தலைக்கு வைக்க பூ ஆஞ்சுதாங்கோ அச்சாப்பிள்ளை" அனுப்பி விட்டு, சைக்கிளில் ஏறினாள். ஒவ்வொரு நாளும் அடம்பிடிக்கும் ஒன்றரை வயதுக் குழந்தைக்குப் போக்குக் காட்டுவதே பெரும்பாடு. மனம் சலனப்பட்டது.

எல்லாம் இந்தக் காலையும் மாலையும் தான். இடையில் பெரும் பகலை பாடசாலை நேரம் விழுங்கிவிடும். அரக்கப்பரக்க வேலை செய்வதிலேயே காலை நேரம் போய்விடும். மாலை வந்தால் பிள்ளையைக் கவனிப்பது, உடுப்புத் தோய்ப்பது, இரவுச் சாப்பாடு செய்வது, பாடசாலை ஆயத்தம் என்று மலை போல குவிந்து கிடக்கும் வேலைகளுக்கிடையில் அவள் ஒரு புழுவைப்போல நெளிந்தாள்.

"ஏன்தான் இந்தக் கலியாணத்தை இப்ப செய்து தொலைத்தார்களோ" இருபத்தேழு வயதான போதும் அன்றாட வாழ்வின் வேலைப்பழு அவள் தலையில் விழுத்திய சுமையால் இப்படி நினைத்துக் கொண்டாள்.

மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர், மூத்த பிள்ளையான அவளை அனுப்பி வைத்தாலேயே ஏனையோருக்கும் ஒருவாறு வழி அமைக்கும் வேலையில் ஈடுபடமுடியும். அத்துடன் அவளுக்கு வயது ஏற ஏற அவர்களுக்கு பயம் ஏறிக்கொண்டிருந்தது. எல்லாத்துக்கும் மத்தியில் வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்பு, ஆவல் அவளுக்கும்தான் இருந்தது.

சரவணனும் அப்படியொன்றும் கேட்டபழக்கங்களோ, கூடாத குணங்களோ இல்லாதவன்தான். சீதனமும் கட்டாயம் இவ்வளவுதான் தரவேணுமெண்டு வற்புறுத்தவும் இல்லை. இடம்பெயர்ந்த அவர்களின் குடும்பநிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் தருவதை ஏற்றுக்கொண்டுதான் திருமணம் செய்தார்கள். அதற்காக அவளின் பெற்றார் அவளைச்சும்மா அனுப்பி வைக்கவில்லை. நகை, நட்டு, கலியாணச் செலவு என்று அவர்களின் தலையிலும் சரியான சுமை. கவிதாவும் அவ்வளவு பெரிய உலக அழகியில்லாவிட்டாலும், பார்த்தவுடன் பிடித்துப் போகும் வசீகரம். பேச்சு, குணம், நடை என்று மாமியாருக்கும் பிடித்த மருமகளானாள். இவ்வளவும் சரிவரும் போது மாப்பிள்ளையுடன் கதைக்கப் போறன் எண்டோ தனது தனிப்பட்ட உணர்வுகள், கொள்கைகள் பற்றிப் பேசப் போறன் எண்டோ அவளாலும் கூற முடியவில்லை. சொல்லப் போனால் அது ஒரு சிறப்பான கலியாணம்.

அவளுக்கு அவனைப் பற்றியும், அவனுக்கு அவளைப்பற்றியும், உணர்வு களை முழுமையாக அறிந்து கொள்ளவோ, உணர்ந்து கொள்ளவோ முடியாமல் வாழ்க்கைச் சக்கரம் உருளத் தொடங்கி விட்டது. அவனும் அவளும் கணவன் மனைவியாகி, பிள்ளையொன்றுக்குப் பெற்றோராகிய பின்பு வந்த வாழ்க்கையில் தான் எவ்வளவு மாற்றங்கள், ஏற்றங்கள்.

அவளும் தான் வேலைக்குப் போகின்றாள். உழைக்கின்றாள். பிள்ளையைப் பார்க்கவேணும், சமையலைக் கவனிக்கவேணும், உடுப்புத் தோய்ப்பது, வீட்டுச் சாமான்கள் வாங்குவது என்று எத்தனை வேலைகளை இந்த இரண்டு கைகளால் மட்டும் செய்ய முடியும்.

சரவணனுக்கு ஏன் தான் இவையெல்லாம் சொல்லாமல் புரிவதில்லை. இந்தக் காலத்தில் இருவர் உழைத்தால்த்தான் வாழ்க்கைப் படகு ஓடும் எனத் தெரிந்தவனுக்கு வீட்டு வேலைகளிலும் இருவர் பங்கெடுத்தால்த்தான்

சுலபமென்பதும், கடமை என்பதும் ஏன் புரியவில்லையோ. காலையில் பிள்ளையுடன் மல்லுக்கட்டுவதே பெரும் பிரச்சினை. உண்மையில் அதனுடன் மினக்கட்டு அதனுடைய வேலைகளைக் கவனிக்கும் வயதுதான் அதற்கு. இதைத் தந்தையான சரவணன் செய்யலாம் தானே என்று அவள் அவனிடம் அவ்வேலையை ஒப்படைக்க முடியாது. அவனது காலைப்பத்திரிகை வாசிப்பும், வேறு அலுவல்களும் இருக்கும். அவன் தனது உடுப்புக்களையாவது தோய்த்து அயன் பண்ணினால் அவளுக்கு ஓரளவாவது சுமை குறையும். இதை விட அவனது வேலைகளுக்கு அவள் எடுபிடி செய்ய வேணும். எல்லாம் பிள்ளையொன்று பிறக்குமுன்பு பிரச்சினையில்லாமல்தான் இருந்தது. அவளும் அதை ஒரு பொருட்டாக கருதவுமில்லை. இப்பொழுது எல்லாம் அவள் தலையில் என்று "இதைச் செய், அதைச் செய் என்று சொல்லித்தான் புரியவைக்க வேணுமென்றால், படித்தென்ன, பட்டம் வாங்கியென்ன, உத்தியோகம் பார்த்தென்ன. ஒன்றுமே பிரியோசனமில்லையே". என்று எண்ணத் தோன்றும் அவளுக்கு.

பாக்கியம் மாமி ஒன்றும் கடுமையான ஆளில்லை. அதே பெரிய ஆறுதல் அவளுக்கு. வீட்டு வேலையிலும் குழந்தையை வளர்ப்பதிலும் அவ வழங்கும் ஒத்துழைப்பே பெரிதுதான். ஆனால் சீப்பாக வந்த மருமகள் என்ற நினைப்பும், ஒரேயொரு மகனான சரவணனை விட்டுகொடுக்காத மனப்போக்கும் அவளை ஒன்றும் பேசவிடாது தடுத்து விடும். தன்னுடைய காலத்தில் தான் வேலையொன்றுக்கும் போகாமல் வீட்டிலேயே இருந்து, கணவனுக்கும், மகனுக்கும் கலியாணம் செய்து கனடாவில் வாழும் மகளுக்கும் பணிவிடை செய்தே முழுக்காலமும் ஓடியதாகவும், அவள் வேலைக்குப் போவதே ஒரு சுதந்திரமான நிலை. வீட்டு வேலைகளில் முழுமையான பங்கு இல்லைத்தானே என்று அடிக்கடி கூறிக்கொள்ளுவா. அந்தக் குறைவான நேரத்துக்கிடையில் அவள் படும்பாடு அப்பப்பா மாமிக்கெங்கே புரியப்போகிறது.

"வேலையை விட்டுட்டு பேசாமல் வீட்டில நின்றால் என்ன" என்ற நினைப்பு அடிக்கடி வரும். நல்லவேளை இப்ப ஒரு பிள்ளைதான். இன்னும் ஒன்றிரண்டைப் பெற்றால், கூடப்போகும் வேலைச் சுமைகளை நினைக்கவே அவளுக்குப் பிள்ளை பெறும் பிரசவ வலி இலகுவாகத் தோன்றுமளவுக்கு வாழ்க்கைச் சுமை அதிக வலியைக் கொடுத்தது.

தன்னோடு படிப்பிக்கும் சுபா ரீச்சருக்கு வீட்டில் அம்மா, அப்பா தங்கைகள் என்று ஒத்தாசையாகவிருப்பதும், வயதுபோன பரமேசு ரீச்சரை அவவின் பென்ஷன் எடுத்த கணவன் வந்து இறக்கி, ஏற்றிப் போவது, மதியச் சாப்பாடு கொண்டு வருவது என்று ஒத்தாசையாக இருப்பதைப் பார்க்க அவளுக்குப் பொறாமையாக இருக்கும்.

சரவணன் மகிழ்வோடு அவளுடன் இருக்கும் கணப்பொழுதுகளில், வேலைத் தளப்பகிடிகளை விடுகின்ற வேளைகளிலாவது இதுபற்றி அவனோடு பேசிவிட வேண்டும் என்றுதான் அவளும் நினைப்பதுண்டு. ஆனாலும் இவையெல்லாம் அவனுக்குவிளக்காதவைகளா? தூங்குபவனை எழுப்பலாம், தூங்குவது போல கிடப்பவனை எப்படி எழுப்புவது? இவ்வளவும் கூறிய பின்பு அவன் மீண்டும் தன்னுடைய சுபாவப்படி மாலை வந்த பின்பு ரீயைக் குடித்துவிட்டு புட்போல், கிறிக்கட் மச் என்று சென்று விட தான் கூறியதெதுவுமே புறக்குடத்தில் வார்த்தது போலாகிவிடுமோ என்ற பயம். அதன் பின்பு வரும் ஆத்திரம், வெறுப்பு, மனவேதனை இவைகளை எதிர்கொள்ள விரும்பாமலுமே அவள் பேசாதிருந்தாள்.

இந்தக் குழந்தை 'மது' வுடன் கொஞ்சி விளையாடுவதை விடவா கிறிக்கட் மச் இனிக்கும். அவளும் தான் பாடசாலைக் காலத்தில் விளையாட்டில் எவ்வளவு கெட்டிக்காறி. நெற்போல் ரீமுக்கு லீடராய் இருந்தது, கோட்ட, மாவட்ட போட்டிகளில் விளையாட்டுகளில் 'சம்பியன்' கப் வாங்கியது என்று தனது கடந்த காலப் பெருமைகளை யாரிடம் கூறுவது. அந்த மகிழ்வான காலத்தை மனதில் மட்டும் நினைத்தவாறே இல்லறப்படகில் அதற்கும் அவளுக்கும் ஒரு சம்மந்தமுமில்லாதது போல் வேலைகளில் மூழ்கிப் போவது, இவற்றை எண்ணிப் பார்க்கும் போது கவிதாவின் மனது நிலையின்றித் தவித்தது. இப்படித்தானோ திருமணமான பெண்களின் வாழ்க்கைப் போராட்டம் கடினமானது. திருமணமாகுமுன் சிட்டாகப் பறந்து திரிந்தபோது எதுவுமே கண்ணுக்குத் தெரியவில்லையே. படிப்பு, வேலை, போராட்டக் காலம், அதற்குள்ளாலான கடின வாழ்க்கை, இடப்பெயர்வு எதுவுமே மனதில் இவ்வளவு அழுத்தத்தைக் கொடுத்ததாக தெரியவில்லையே. உடலுக்குத் தெம்பாக எதைக் குடித்தாலும், சாப்பிட்டாலும், மனதுக்குத் தெம்பாக யாராவது ஆறுதல் வார்த்தை கூற வரமாட்டார்களா? இல்லை அவளது பிரச்சினைக்குத் தீர்வு சொல்லி சுமுகமாக்க வரமாட்டார்களா என்ற ஆதங்கமே அவளுக்கு மேலோங்கியிருந்தது.

நெடுக நெடுக இதைப்பற்றி யோசித்து மனங்குமுறி அழுத்தத்திற்குள்ளாவதை விட பிரச்சினையை போட்டுடைத்தாலென்ன? எதற்கும் மாலை வரட்டும். சரவணனுடன் இன்று எப்படியாவது கதைத்து விட வேண்டும். சமைப்பது, உடுப்புத் தோய்ப்பது, சாப்பிடுவது எல்லாம் பிறகு இருக்கட்டும். எப்படியாவது இன்று அவனது கடமையை அவனுக்கு உணர வைக்கத்தான் வேணும். மனதில் புதுத் தெம்பு பாய்வது போலிருந்தது அவளுக்கு.

பாடசாலை கேற்றடியில் வந்து இறங்கிய போது இன்னும் மணியடிக்க வில்லையென்பதே ஆறுதலாயிருந்தது. நல்ல வேளை இன்றைக்கு 'றெட்' மார்க் இல்லை. மனம் மகிழ்ச்சியாயிருந்தது.

அசெம்பிளி முடிந்து வகுப்பறைக்குள் முதல் பாடத்திற்காக உள்நுழைந்த போது 'குட்மோனிங் ரீச்சர்' சொல்லி அமர்ந்த மாணவிகளில் பின்பு சுமதி கொப்பியைக் காட்ட அவளருகில் வந்தபோது,

'ரீச்சர் இண்டைக்கு இந்த 'செக்ஷன்' நல்லா விளங்கீட்டுது' என்று சொன்னபோது உண்மையில் அவளது உணர்வுகளை அவளுக்கே வார்த்தைகளில் சொல்லமுடியாமலிருந்தது.

* * * *

'இந்தாங்கோ ரீ............'

கவிதா கொடுத்த தேநீரை உறிஞ்சியபடியே சுடரொளி பேப்பரில் கண்களை மேயவிட்டான் சரவணன்.

"இங்கேயப்பா நான் இரவைக்கு புட்டவிக்க வேணும். மதுக்குட்டியின்ர உடுப்புக்கள் கனக்கத் தோய்க்கக்கிடக்குது. நீங்கள் மேல் கழுவேக்குள்ள அதையும் ஒருக்கா அலம்பிப் போட்டுவிடுங்கோ".

அவனிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. பதில் கூற வேண்டுமென்ற அக்கறை அவனிடம் இருந்ததாகவும் தெரியவில்லை. அவள் புட்டவித்து பிள்ளைக்குத் தீத்தி எல்லோருக்கும் பரிமாறி, தான் சாப்பிட்டு, வீட்டு வேலைகள் அனைத்தும் முடித்து பாட ஆயத்தம் செய்து முடிக்க மணி இரவு பதினொன்றாகிவிட்டது. மதுவின் உடுப்புக்கள் தோய்க்காமல் அப்படியே கிடந்தது.

குழந்தை தலையணையை அணைத்தபடி தூங்கிப் போயிருந்தது. "இஞ்சேருங்கோ இன்னும் புத்தகம் வாசித்து முடியேல்லையே உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும்."

" நீர் இன்னும் வேலை செய்து முடிக்கேல்லையே"

"எப்படி முடியிறது. நீங்கள் உங்கள் பாடு. மாமி மதுவைக் கவனிக்க வேணும். மிச்ச வேலையெல்லாம் நானே தனியச் செய்யோணும் எண்டா விடிஞ்சாலும் முடியாது தானே".

"அப்படியென்ன விடிய விடிய வேலை உமக்கு".

"கேக்கிறீங்கள் செய்து பார்த்தாத்தானே விளங்கும். நான் கலியாணம் செய்து இங்க வந்த நாளிலிருந்து நீங்கள் ஒரு துரும்பையும் எடுத்துப் போட்டதை

நான் காணேல்லை. குடும்பம் எண்டால் எங்கள் இரண்டு பேருக்குமே அதிலை பங்கிருக்கு. இரண்டுபேரும் வேலைக்குப் போறம். இரண்டு பேருமே வேலைகளைப் பகிர்ந்து செய்தாத்தானே நேரமும் காலமும் சரியாயிருக்கும்.".

"என்ன புதுசா பிரசங்கம் இண்டைக்கு"

" இது பிரசங்கமில்லை. உங்களிட்டை மனம் திறந்து தான் கதைக்கிறன். கொஞ்சம் நீங்களும் யோசிச்சுப் பாருங்கோ."

" ஓசியில வந்து போட்டு, என்ர வீட்டிலையே இருந்து கொண்டு, எனக்கு வேற புத்திசொல்ல வந்திட்டீர் என்ன? நான் எத்தினை மைல் சைக்கிள் ஓடி வேலைக்குப் போறனெண்டு உமக்குத் தெரியுமோ. இல்லையெண்டா உம்மட வீட்டுக்காரர் எனக்கு ஒரு மோட்டார் சைக்கிள் எண்டாலும் எடுத்துத் தந்தவையோ? முதலில் உம்மட ஆட்களிட்டைப் போய் கதைச்சு எனக்குரிய பங்கை தரச்சொல்லும். அதுக்குப் பிறகு மிச்சப் பிரச்சனையை மனம் திறந்து கதைக்கலாம்.

# அடையாளம்.



-பூமாதேவி-

மூன்று முழு நாட்கள். இரவு, பகல் தொடர்ந்த நடை. தண்ணீர்க் கான்களும், உலருணவுப் பொதிகளும் இடையிடையே பசி போக்கிச் சுமையிறங்கிக் கொள்ள, தொடர்ந்த பயணம் தடைப்பட்டது.

இலக்கை அண்மித்துவிட்ட பூரிப்பில் போரணிகள் தரித்து நின்றன. அணிகள் நகர்ந்ததற்கான எந்த அடையாளங்களோ அசுமாத்தங்களோ இல்லை. அமைதி. மயான அமைதி. உண்மையும் அதுவே. எமது சொந்தங்கள் வாழ்ந்துவிட்டுபோன எச்சங்களாக நொருங்கிய வீடுகளும், முறிந்த மரங்களும்,

சிதைந்த பண்டங்களும்மட்டுமான சுடுகாட்டு அமைதி, வலி தாளாமல் துவண்டபோதும் எப்போது உள்ள பாய்வோமென்று துடித்துக்கொண்டிருந்த கால்களைத் தடுத்து நிறுத்தப் படாதபாடு படவேண்டியிருந்தது.

மெதுவாக, மிகவும் மெதுவாக உறுதியுரை எடுத்து, மூச்சுவிடும் சத்தம்கூட இல்லாமல் எதிரிகளின் கொலை வலயத்துள் நுழைந்த புலிகள் பிரதான முகாம் தடைகளை நெருங்கி தடைகளோடு தடைகளாகப் பதுங்கிக் கொண்டனர் பாய்வதற்குத் தயாராக....

* * * *

பேருந்து இலாவகமாக வழுக்கிக்கொண்டு பறந்தது. என்றுமே அனுபவித்திராத சுகத்தை இந்தச் சொற்ப நேரத்தில் ஈடுகட்டி விடுமாப்போல ஆசனங்களில் சயனத்தில் இருந்த அத்தனை தலைகளையும் தாண்டி, தமிழீழ காவற்றுறையின் அறிவுறுத்தலையும் மறந்து ஆவலோடு எனது தலை வெளியில் நீண்டது. கண்களோ அங்குலம் அங்குலமாக அந்த பகுதிகளை அளவிடத் தொடங்கியது.

குண்டும் குழியுமாக அடிவாங்கி அடிவாங்கியே பிளந்துபோன வீதிகள் மெழுகுப் பாதையாக... குண்டுச் சிதறல்களால் பிய்ந்துபோய்த் தொங்கிய மரங்கள் இருந்த அடையாளங்களே இல்லாமல் வெறும் வெற்றுத் தரவையாக..... குண்டுகளை ஏந்தியேந்தியே களைத்துப்போய் அரையும் குறையுமாகக் கிடந்த வீடுகள் மண்ணோடு மண்ணாக..... அங்கொன்றும் இங்கொன்றுமாக மீண்டும் தலை காட்டும் ஓலைக் குடிசைகள்.... புளியங்குளமல்ல, 'புலிகளின் புரட்சிக்குளம்' என்றிருந்த குளம் மீண்டும் புளியங்குளமாக.....

பூரித்துப் போனேன். ஆறே மாதத்தில் இப்படியென்றால் இதே நிலை தொடர்ந்தால் இன்னும் ஆறு வருடங்களில் எப்படியிருக்கும் எம் தேசம். சிந்தனைக் கோடு விரிந்தது. பேருந்து சின்னக் குலுக்கலுடன் நிற்கவும் எல்லாம் தடைப்பட்டது. எதிரே கூப்பிடு தூரத்தில் சீருடையணிந்த துப்பாக்கிதாரர்கள்.

* * * *

இருளை ஊடுருவிய கண்கள் அடிக்கொருதரம் கடிகார முட்களை மொய்த்துக்கொண்டன. இன்னும் சில நிமிடங்கள்.....

பாட்டும், பைலாவும், சீட்டியடியும், கைதட்டலுமாக ஆரவாரப்பட்டுக்



கொண்டிருந்த எதிரிகள் பாசறை திடீரென அடங்கி மீண்டும் விழித்துக் கொண்டது போன்ற பரபரப்பு. மழைபோல எறிகணைகள் எம்மையும் தாண்டி பல மைல்கள் சென்று வெடித்துச் சிதறியது. அநேகமாக எமது முன்னரங்க நிலைகள்தான் இலக்காக இருக்கும். எம்மைக் கண்டுவிட்டார்களோ? பதைத்த மனங்கள் அமைதிப்பட மறுவினாடியே துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள்.... எந்தச் சந்தேகமும் இல்லை. எமது நகர்வு எதிரிக்குத் தெரிந்துவிட்டது. என்ன செய்வது? முன்னேறுவதா?.... பின்வாங்குவதா...? எதுவானாலும் எம்மில் பலரை நாம் இழக்க வேண்டிவரும். ஆனால் கட்டளைப் பீடமோ பின் வாங்கவே கட்டளையிடும். கட்டளைக்குக் காத்திராமல் கப்டன் ஜெயஜோதியின் தலைமையிலான தடையுடைக்கும் அணி முன்னே பாய்ந்து துரிதமாகச் செயற்பட டோபிடோ காலைவார.... குண்டடித்து வெடிக்கவைத்து..... பாதையெடுத்து.... உள்ளே பாய்ந்த கப்டன் ஜெயஜோதி நெஞ்சில் குண்டடிபட்டு சுருண்டு விழ... அவளையும் தாண்டி அணிகள் பாய வேட்டைத் திருவிழா ஆரம்பமானது.

* * * *

**கா**ல்கள் முன்னகரத் தயங்கின. மனம் நெருடியது. எனது மண்ணில் என்னை அடையாளப்படுத்த இவர்கள் யார்? உள்ளம் குமுறி எழுந்த கேள்வி என்னுள்ளே அடங்கிப்போக கால்கள் நகர்ந்தன. அறிமுகச் சிரிப்புடன் வழியில் நின்றவர் பதிவிடம் காட்ட, உள்நுழைந்த எம்மை வணக்கம் கூறி வரவேற்றவர்கள் இருக்கைகளைக் காட்டி அமரச் சொன்னார்கள். அமர்ந்தோம். அடையாள அட்டை கொடுத்து, நாங்களே பலமுறை எமது பெயர்களைச் சொல்ல ஒவ்வொரு எழுத்தாக அவர்கள் எழுத, வந்த சினத்தை அடக்கிக் கொண்டோம். எங்களின் பாதுகாப்புக்குத் தானாம் பதிகிறார்களாம். அவர்களே சொன்னார்கள். யாருக்கு யார் பாதுகாப்பு! காதில் வாங்காது பயணப்பட்டோம்.

இ.போ.ச.பேருந்து. சின்ன வயதில் போனதான நினைவு. பல நீண்ட வருடங்களின் பின்னர் ஏறிக் கொண்டேன். நடத்துனருக்கோ திரிசங்கு நிலை. எம்மிடம் கட்டணம் பெறுவதா வேண்டாமா? அவரின் நிலை புரிந்து பணத்தை எடுத்து நீட்டினேன். ஒரு அசட்டுச் சிரிப்புடன் வாங்கிக்கொண்டு, சிட்டை தந்தார். வாங்கிக் காற்சட்டைப் பையில் திணித்துக்கொண்டு, பேருந்து நகரத் தொடங்கவும் பார்வையை வெளியே பாய விட்டேன்.

நான்கு நிமிடம் ஓடியதும் அந்தச் சந்தி. இடிந்த கட்டிடங்களுக்கிடையால் இடது பக்கமாக ஓடும் அந்தச் செம்மண் வீதியும், இடிபாடுகளுடன் வீர வடுக்களையும் சுமந்து, கூரையில்லாமல் நிற்கும் அந்த பாடசாலைக் கட்டிடமும் ஆசிரியர் விடுதிகளும்......

* * * *

"ஷூவ்......"
"ஓடு....... அடி......."
"விடாதை...... அடி....... அடி......"
"அங்க....... அம்மா......"
"விடாதை...... அடி......"

கடும் சமர். பிரதான முகாமான அந்தச் சந்தியையும், பாடசாலையையும் பிடிப்பதற்கான உக்கிரச் சண்டை. வலிந்து தாக்கச் சென்ற எமது அணிகள் எதிர்பார்த்துக் காத்திருந்த எதிரி அணிகளுடன் முறியடிப்புச் சண்டை செய்து எமது இலக்கை அடையவேண்டிய நிலை. சூழ இருந்த கடைகளும், ஆசிரியர் விடுதிகளும் எம்மிடம் வர, இறுதியாக எஞ்சியிருந்த பாடசாலைக் கட்டிடத்திலிருந்த பிரதான தளத்திற்கான கடும் சண்டை. நீயா நானா என்ற பலப் போர்.

"விடாதை அடி..... பிடி....." என்ற படி அடங்கிப் போன பலர்..... கப்டன் ஜெயஜோதியில் தொடங்கி அழகிய நம்பி, சொரூபி, பிரபா.... என்று பலர் விதையாகிப் போக, இன்னும்பலர் விழுப்புண்ணடைந்த நிலையிலும் கட்டுக்களுடன் நின்று சண்டையிட..... நாலாபுறமும் இருந்த எதிரணிகள் எம்மைச் சுற்றி வளைத்து நெருங்கிக் கொண்டிருக்க.... விழுந்த எம்மவர்களையும், கைப்பற்றிய ஆயுதங்களையும் சுமந்துகொண்டு நாம் பின்வாங்கவேண்டியிருந்தது.

ஐந்து ஆண்டுகளின் முன்னர்....
இதே நாள்....
இதோ இந்தச் சந்தியில்......

அதோ அந்த சேமமடு வீதியூடாக நுழைந்து... இந்தக் கடைகளையும், ஆசிரியர் விடுதிகளையும் கைப்பற்றி, இந்த ஓமந்தை மகா வித்தியாலயத்தைக் கைப்பற்றுவதற்காக..... எமதணிகள் சிந்திய இரத்த வெள்ளமும்..... உயிர்க் கொடையும்..... தடையுடைத்து உள்நுழைந்த எனது தோழி ஏனைய அணிகளை முன்னேறும்படி சைகையால் அழைத்த அதே நேரம் ரவைகள் அவளைத் துளைக்க மண்ணரணிலேயே அவள் சுருண்டு விழுந்த அந்தக் காட்சியும்..... எதிரியின் P.K.L.M.G தொடர் ரவைகளால் சல்லடையாக்கப்பட்ட லெப். சொரூபியில் இருந்து தெறித்த இரத்தத் துளிகளால் நான் விறைத்து நிமிர்ந்த அந்த இடமும்......

அன்று மேலதிகமாக ஒரு அணி எங்களிடம் இருந்திருந்தால்....
ஆயுத வலு இன்னும் கொஞ்சம் அதிகமாக இருந்திருந்தால்....
அட! அப்போதுதான் வேண்டாம். அலைகளாக நாம் மூசியெழுந்த போதாவது இன்னும் கொஞ்சம் கூடப் பேர் இருந்திருந்தால்......

பிற்குறிப்பு:- ஜெயசிக்குறு நடவடிக்கைப் படையினர் தங்கிநின்ற ஓமந்தை - பெரியமடுத் தளங்கள் 1997.08.01 அன்று விடுதலைப் புலிகளால் ஊடுருவித் தாக்கப்பட்டன.

01.08.2002.



## படைப்பாளிகளின் தொடர்புகளுக்கு......

** தமிழவள்,
கப்டன் வானதி வெளியீட்டகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

** செல்வி.செ.யோகவதி,
அடம்பன்,
மன்னார்.

** திருமதி.கலைச்செல்வி சுரேந்திரன்,
74, கதிர்காமர் வீதி,
அமிர்தகளி,
மட்டக்களப்பு.

** அ.காந்தா,
மாலதி படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்

** திருமதி.தீபாகுமரேஷ்,
'ஆரண்யம்',
தேவிபுரம்,
புதுக்குடியிருப்பு.

** ஆதித்தநிலா,
கலையரசி நகைமாடம்,
முல்லைவீதி,
புதுக்குடியிருப்பு.

** செ.புரட்சிகா,
மலாதி படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

** செல்வி.ச.சாரங்கா,
பலாலி ஆசிரியகலாசாலை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

** செல்வி.சி.ஜீவரஞ்சினி,
இல.52,
கட்சன்வீதி
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

** திருமதி.சந்திரா அற்புதலிங்கம்,
இல. 312,
03ம் யுனிற்,
பாரதிநகர்,
மல்லாவி.

** திருமதி.அனுராதா பாக்கியராஜா,
'ஜெயசதனம்'
களுவாஞ்சிக்குடி,
மட்டக்களப்பு.

** காயத்திரி இராஜேஸ்வரன்,
கோண்டாவில் - இருபாலைவீதி,
கோப்பாய்,
யாழ்ப்பாணம்.

** மலைமகள்,
மாலதி படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

** அம்புலி,
நிதர்சனம் மகளிர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்

** பூமாதேவி,
கப்டன் வானதி வெளியீட்டகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

** றெகென்சியா ஞானவதி திருஞானம்,
புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

** செல்வி. சத்தியபாமா சின்னத்தம்பி,
கருணாநிதி சனசமூகநிலையம்,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

** வாசகி,
அரசியல்துறை மகளிர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

** த.துவிதா
பலாலி ஆசிரியகலாசாலை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

ஒடுக்கப்பட்டவர்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன
எங்களின் நாட்கள் எங்களுக்கானவை
பறிக்கப்பட்டவைகளும்
மறுக்கப்பட்டவைகளும்
மீளவும் கைசேரல்
காலத்தின் கட்டாயம்.
பூமிப்பந்தின் புதிய நியதியும் அதுவே.
விதிக்கப்பட்ட அன்றேல் சபிக்கப்பட்ட
காலங்கள் கடந்து
காலெடுத்து நடக்கிறது காற்று.
பறவை பறக்க விளைதலும்
மழலை தவழ முயல்தலும்
பெண்மை பேச எழுதலும்
இயல்பென்று அறிக.

இனி...
வெட்டப்பட்ட போதும் வேர்கள்
துளிர்விடத் தொடங்கும்,
வெந்நீர் ஊற்றப்பட்ட போதும்
தளைத்தது ஓங்கும்.

-தமிழவள்-

மலர்விஷன். 024-23143